
கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



ALKI | 28.11.2010 | ₹ 10.00 | 96 பக்கங்கள் | www.kalkionline.com



An ISO 9001 : 2000 Company

10 YEARS WARRANTY




ஆனந்தா

விழாக்கால சிறப்புச்சலுகை

20% முதல் 30% வரை

தள்ளுபடி



20% Off

PERFECT / INNER LID

LTR	MRP	OFFER PRICE
3	777	620
5	1100	880
7.5	1535	1228
10	1685	1348
Sr. Ex. WL	1305	1044



20% Off

GRAPHITE (Black Cooker)

LTR	MRP	OFFER PRICE
3	1346	1076
5	1876	1500
7.5	2256	1805



Special Price

WINNING COMBO

LTR	MRP	OFFER PRICE
3 ltr + Pressure Pan	922	870
5 ltr + Jr Pan without lid	1400	1275
5 ltr Super value	2056	1850



Special Price

GAS STOVE

Double Burner	MRP	OFFER PRICE
Royal	2399	1750
Cute	1650	1300



3 Ltr Cooker Free & Spl. Price

FAMILY PACK

LTR	MRP	OFFER PRICE
7.5	2252	2180
10	2402	2330
12	2522	2450



30% Off

CURRY 'N' BIRYANI COOKER

LTR	MRP	OFFER PRICE
4 (White)	1540	1078
4 (Black)	2080	1455

ANANTHA GRIND FORCE TABLE TOP


	MRP	OFFER PRICE
Juicer + Masala Drum Free	4775	3400





Free

www.anantha.info



கல்கி

சாயி ஸ்பெஷல் பக்கங்கள்



ராஜா-இப்போ... பரிவாரங்கள் எப்போ..?

மெகா பரிசு அறிவிப்பு!



கேட் செல்வமும், ஸ்டைல் பாண்டியும்!

இயக்குனர் சுந்தர்.சி. சற்று வித்தியாசமானவர். 'தலைநகரம்' மாதிரி கமர்ஷியல் ஹிட்டும் தரமுடியும். 'அன்பே சிவம்' போல அழுத்தமான படங்களையும் இயக்க முடியும். இருபத்தைந்து படங்களுக்கு மேல் இயக்கியிருக்கும் சுந்தர். சி. மறுபடியும் 'நகரம்' படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். கூடவே இயக்கவும் செய்கிறார்...

''ஹீரோவாக 10 படங்களில் நடித்துவிட்டேன். ஆனாலும் மனத்துக்குள் நல்ல கதை தோன்றும்போதெல்லாம் எனக்குள் இருக்கும் இயக்குனர் முழித்துக்கொள்வான். எனினும் நடிக்க வேண்டிய படங்களை நினைத்து அந்த ஆசையை அடக்கிக்கொள்வேன். 'நகரம்' படத்தின் கதை எனக்குள் தோன்றியபோது அப்படி ஆசையை அடக்க முடியவில்லை. காரணம், அதி அற்புதமான கதை இது. இந்தப் படத்தின் முடிவுதான் முதலில் எனக்குள் ஒரு பொறியாகத் தோன்றியது. அதை ஆரம்பமாக வைத்து இந்தக் கதையைப் பண்ணினேன்'' என்கிறார் சுந்தர்.சி.

''தயாரிப்பாளருக்கு லாபம் தருமா? நடிகராக என்னைக் காப்பாற்றுமா? இயக்குனராக எனக்குத் திருப்தியோடு நல்ல பெயரை வாங்கித்தருமா? இந்த மூன்று விஷயங்களும் பாசிட்டிவாக இருந்தால்தான் இதைப் படம் பண்ணலாம் என்ற தீர்மானத்துக்கு வந்தேன். படம் டபுள் பாஸிடிவ்வா வந்திருக்கிறது'' என்று உற்சாகமாகிறார்.

''கதை என்பது சின்ன லைன்தான். அதை நீட்டி முழக்கிப் பண்ணுவதுதான் திரைக்கதை. இந்தப் படத்தைப் பொறுத்தவரை திரைக்கதை அமைக்கவே எனக்கு ஒரு வருடம் ஆனது. குறிப்பாக வடிவேலுவுக்காக காமெடி சீன்ஸ் பண்ண ரொம்பவே மெனக்கெட்டேன். வடிவேலுவின் கேரக்டருக்கு என்ன பெயர் வைப்பது என்று பல நாட்கள் யோசித்து, கடைசியில் 'ஸ்டைல் பாண்டி' என்ற பெயரை முடிவு செய்தேன். என் முந்தைய படங்களில் பேசப்பட்டதைவிட பல மடங்கு இந்தப் படத்தில் வடிவேலு காமெடி வொர்க்-அவுட்டாகும்.

நான் இந்தப் படத்தில் 'கேட் செல்வம்' என்ற கேரக்டரில் நடிக்கிறேன்.

இந்தப் படத்துக்கு யாரை கதாநாயகியாகப் போடுவது என்று யோசித்தபோது, அனுயா நடித்த படங்களைப் பார்த்தபோது, இவர் பொருத்தமாக இருப்பார் என்று தோன்றி அவரை கமிட் பண்ணினேன். படப்பிடிப்பு ஆரம்பித்த இரண்டு நாட்கள் யாரிடமும் ஒட்டாமல் செட்டில் உம்மென்று இருந்தார் . ஒருவேளை நம் படத்தில் நடிக்க இஷ்டமில்லையோ

என்று நினைத்து அவரிடம் கேட்டேவிட்டேன். இந்தப் படத்தில் என் கேரக்டர் அதிகம் பேசாத மூடியான கேரக்டர் என்பதால்தான் நான் செட்டிலும் அந்த மூடுலேயே இருக்கிறேன் என்று சொன்னார். அவரது இன்வால்வ்மெண்ட்டை நினைத்து ஆச்சர்யப்பட்டுப்போனேன்.

பொதுவாக என் படங்களில் சில டெக்னீஷியன்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள். இந்தப் படத்தில் நிறைய மாற்றங்கள் செய்திருக்கிறேன். புது காம்பினேஷனில் வொர்க் பண்ணும்போது, அவர்களுக்குப் புது ஆங்கிள் இருக்கும். அது என் படத்துக்கு ப்ளஸ்ஸாக இருக்கும் என்று நினைத்தேன். நான் நினைத்தது சரி என்பதைப் படம் பார்ப்பவர்கள் நிச்சயம் உணர்வார்கள். குறிப்பாக தமனின் இசை இந்தப்படத்தில் ஹைலைட்டாக இருக்கும். காரணம் இது ரீரெக்கார்டிங்குக்கு ஸ்கோப் உள்ள படம். அதைப் புரிந்துகொண்டு பிரமாதமாக வொர்க் பண்ணியிருக்கிறார் தமன். வைரமுத்து ஸாரின் பாடல்களும் நகரம் படத்தை சிகரத்தில் ஏற்றி வைத்திருக்கிறது. கே.வி.ஆனந்தின் உதவியாளரான செல்வதுரையின் ஒளிப்பதிவும் இப்படத்துக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் இருக்கும்'' என்கிற சுந்தர்.சி.யின் குரலில் இயக்குனருக்கான பொறுப்பும் ஹீரோவுக்கான மிடுக்கும் பளிச்சிடுகிறது.

- சிவா



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**
பொறுப்பாசிரியர்:
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள்:
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்
தொலைபேசி: 044 - 4343 8888
தொலைநகல்: 044 - 4343 8899
ஆசிரியர் குழு:
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு:
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு:
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இண்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

சந்தா விவரம் (ஒரு வருடம்):
உள்நாடு : ₹ 500/-
வெளிநாடு : ₹ 3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத் தன்மைக்கு
கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

இலவசங்கள் இல்லா தேர்தல் சாத்தியமா?



■ அதிர்ச்சிக் கட்டணம்!

● கு.அருணாசலம், தென்காசி

? மேலவைத் தேர்தல் வாக்காளர் பட்டியலில் சேர பட்டதாரிகளும் ஆசிரியர்களும் அதிக ஆர்வம் காட்டவில்லையே?

! 31.10.2010 தேதி கல்கி இதழில் ஞாநியின் 'ஓ' பக்கங்கள் உங்கள் கேள்விக்குப் பதிலளிக்கும்.



■ வாழ்க மணமக்கள்!

● அ.சுகுமார், காட்பாடி

? ''அதிகாரிகள் லஞ்சம் கேட்டால் கையை வெட்டுங்கள்,'' என்கிறாரே எடியூரப்பா?

! அரசியல்வாதிகள் லஞ்சம் கேட்டால் இரண்டு கைகளையும் வெட்டுவதா? லஞ்ச-ஊழலின்றி ஆட்சி நடத்தத் தெரியாதவர்கள் தத்துப்பித்தென்று உளறாமலாவது இருக்கலாம்.



■ பலிக்காத ஜோசியம்!

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

? செக்ஸ் விவகாரத்தில் சிக்கியதால் ஆந்திர ஆளுநர் பதவியை இழந்த காங்கிரஸ்காரர் என்.டி.திவாரி இன்று பா.ஜ.க. மேடையில்! பா.ஜ.க. தலைவர்களோ, திவாரியின் அனுபவங்களிலிருந்து நாங்கள் பாடம் கற்றுக் கொள்வோம் என்கிறார்களே! என்ன பாடம்?

! ஒருவேளை, எப்படியெல்லாம் நடந்து கொள்ளக்கூடாது என்கிற பாடமோ என்னவோ?

● ஆனந்தகிருஷ்ணன், சென்னை - 10

? ''புதிய மஹாராஷ்டிர முதல்வர் தூய்மையானவராக இருப்பார்,'' என்று ராகுல் காந்தி 'கிளி ஜோசியம்' பார்த்துக் கூறியிருக்கிறாரே?

! அவர் மீது ஏற்கெனவே ஓர் ஊழல் குற்றச்சாட்டு பதிவாகியுள்ளது என்பதை அறியாமல் பேசிவிட்டார். இனியாவது ராகுல் காந்தி ஆய்ந்து, அறிந்து பேச வேண்டும்.

● எம்.எஸ்.மணி, பெங்களூரு

? கோவையில் என்கவுண்டருக்கு எதிராக வழக்கறிஞர்கள் போராடியது சரியானதா?

! அறிவாளிகளான வழக்கறிஞர்கள் உண்மை அறிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். போராட அவசியமில்லை. எந்த என்கவுண்டரும் துரதிர்ஷ்டவசமானதே. ஆனால், இதனை 'நரகாசுரவதம்' என்று மக்கள் கொண்டாடியிருக்கிறார்கள்! போலீஸின் அஜாக்கிரதைக் கண்டனத்துக்குரியது. ஆனால் ஒரு காவலர் வயிற்றில் சுடப்பட்டிருக்கிறார் என்பதைக் காண, என்கவுண்டர் போலியானதாகத் தோன்றவில்லை.

● சு.ராஜா ரஹ்மான், கம்பம்

? சோனியா வசித்து வரும் வீட்டுக்கு, கடந்த மூன்று ஆண்டுகளில் 7.47 லட்சம் ரூபாய் கரண்ட் பில் வந்துள்ளதாகத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் தெரிய வந்திருக்கிறதாமே?

! கரண்ட் பில்லை அரசு கட்டுவதால் இப்படி 'பில்' வருகிறது. சொந்தச் செலவென்றால் கணிசமாகக் குறையும். மக்களுக்கு எடுத்துக்காட்டாகத் தலைவர்கள் விளங்கிய காலம் மலையேறிப் போச்சுங்க.

நீங்கள் கேட்டவை

● அ.தாஜ்மஜீத், திருமயம்

? சிறுமிகளைக் கடத்தி பாலியல் வன்முறை புரியும் கயவர்களை எப்படியெல்லாம் தண்டித்தால் இத்தகைய செயல்கள் குறையும்?

! மரண தண்டனைகூட விதிக்கப்பட்டுள்ளதே! ஆனால், கடும் தண்டனை மட்டுமே நிலைமையைத் திருத்த உதவாது. மீடியாவின் தவறான வழிகாட்டல்களை வென்று, நன்னடத்தையை உறுதி செய்யும் தரம் மிக்க கல்வியே கைகொடுக்கும்.

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? பா.ம.க. ஆட்சிக்கு வந்தால், முதல் கையெழுத்துப் போட்டு சாராயத்தை ஒழிப்பாராமே ராமதாஸ்?

! இந்த அற உணர்வுக்குப் பாராட்டுக்கள் குவியும். இதே அற உணர்வுடன் வேறு பல பிரச்னைகளையும் அணுகினால் வோட்டுகளும் அறுவடையாகும்.

● என்.பக்கிரிசாமி, புதுச்சேரி

? தமிழகத்தில் காவலர்கள் எண்ணிக்கை வெகு விரைவில் அதிகரிக்கப்படும் என்று முதல்வர் சொல்கிறார். இதனால் கடத்தல், திருட்டு, கொலை சம்பவங்கள் குறையுமா?

! வாய்ப்பு இல்லை. தேவை, சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டும் மன உறுதி; காவலர்களின் எண்ணிக்கை மட்டுமல்ல. தவறு செய்யத் துணிவதற்கு முன் பயம் ஏற்பட வேண்டும். அரசியல்வாதிகள் திரும்பத் திரும்ப ஊழல் செய்தும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பியும், மக்கள் மத்தியிலிருந்து பயத்தை நீக்கிவிட்டார்கள்.

● கோதை ஜெயராமன், மீஞ்சூர் ★

? மனிதாபிமானம் இருக்கிறதா? இல்லை தேய்ந்துவிட்டதா?

! சூ கீயின் விடுதலை, தேய்ந்து போன மனிதாபிமானம் தெம்பு பெற்றதன் அறிகுறி. மறுபடி அதற்குச் சோதனைகள், பல ரூபங்களில், பல்வேறு இடங்களில் தோன்றத்தான் செய்யும். ஆனால், மனிதாபிமானம் என்றும் மடிந்துவிடாது.

● சங்கீத சரவணன், மயிலாடுதுறை ❐

? இனி இலவசங்கள் இல்லாத தேர்தலை தமிழகம் காண முடியாது அல்லவா?

! முடியும்! இலவசங்கள் என்பவை வரிப்பணத்திலிருந்து வாரி இறைக்கப்படும் விரயம்தான் என்கிற பொருளாதார உண்மையை சராசரி மக்களும் புரிந்து கொள்ளும் வகை


★ மனிதாபிமான மறுமலர்ச்சி





● தலைகீழ் பாடம்

யில் எடுத்துச் சொல்லி, அதற்கு மாற்றாக கௌரவமும் பாதுகாப்பும் மிக்க பணி வாய்ப்புகள் உருவாக்கித் தருவதாக உத்தரவாதமும் தர, ஓர் அரசியல் கட்சி முன் வரும்போது முடியும். ஆனால், 'அத்தைக்கு மீசை முளைத்தால்...' என்பதே இன்றைய நிலை.



● லஞ்ச ஊழல்!

● **மு.பெரியசாமி, விட்டுக்கட்டி**

? "வன்னியர்கள் வோட்டுப் போடாததால் கோபாலபுரத்துக்கும் போயஸ் கார்டனுக்கும் மாறி மாறிச் செல்ல வேண்டியிருக்கிறது," என்று டாக்டர் ராமதாஸ் புலம்புகிறாரே?

! ஜாதி அடிப்படையில் வோட்டுப் போடவில்லை என்பது பெருமைக்குரிய செய்தி. அவர்கள் யாருக்கு வாக்களித்திருந்தாலும் சரி, ஜனநாயகக் கடமையைப் பாரபட்சமற்று நிறைவேற்றி வருகிறார்கள் என்பது இன்னும் நல்ல செய்தி. இதற்கு ராமதாஸ் புலம்பக்கூடாது; பெருமிதப்பட வேண்டும்!

● **பா.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி**

? ராகுல் காந்தி கொலம்பியா நாட்டுப் பெண்ணை மணக்கப் போகிறாராமே... ஏன், இந்தியாவில் பெண்ணே கிடைக்கவில்லையா?

! யாதும் ஊரே, யாவரும் கேளிர். உலகம் ரொம்ப சிறுத்துப் போன இந்நாளில், கொலம்பியா நமக்கு, கோவைக்குப் பொள்ளாச்சி போன்றதுதான்! எந்த நாட்டுப் பெண்ணாக இருந்தால் என்ன? மனம் விரும்பித் திருமணம் என்றால், தமிழர் பண்பாடு வாழ்த்துவது மட்டுமே. வாழிய பல்லாண்டு!

● **வே.ந.கதிர்வேல், வேலூர்**

? சமீப காலமாகவே தி.மு.க. எதிர்ப்புக் கொள்கையை கல்கி கையாண்டு வருவதற்குக் காரணம் என்னவோ?

! 'கல்கி'யின் விமர்சனம் நட்பின் அடிப்படையில் எழும் எதிர்ப்பு என்று புரிந்து கொண்டால், இந்தக் கேள்விக்கு அவசியமிராது. 'நகுதற்பொருட்டன்று நட்டல்...' குறள் தெரியுமல்லவா?

● **என்.கோதண்டராமன், மதுராந்தகம்**

? கையிலே செல்ஃபோன் இல்லாத ஆண்களைப் பார்த்தாலும் பார்க்க முடிகிறது; பெண்களை அப்படிப் பார்க்க முடிவதில்லையே?

! குடும்பம் - அலுவல் என்ற இரட்டைப் பொறுப்பைச் சுமக்கும் பெண்களுக்கு செல்ஃபோன் வரப்பிரசாதம்தான். 'போகிற போக்கில்' பல காரியங்களை நடத்திக் கொள்ள முடிகிறது. பாதுகாப்பும் தருகிறது. அரட்டைக் கருவியாகி நேரத்தை விழுங்காத வரை!

● **ஆர். ராஜகுமாரன், புன்செய்புளியம்பட்டி**

? தமிழகத்தில் பீர் பற்றாக்குறையைச் சமாளிக்க, புதிதாக ஐந்து பீர் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது குறித்து?

! குடிகாரர் வயிற்றில் பீர்; நல்லிதயம் படைத்தவர் வயிறு கபீர்; அரசியல்வாதி வயிறு ஜிலீர்! ●

□ ரூ.150/ பரிசு பெறுபவர்:
சங்கீத சரவணன், மயிலாடுதுறை

★ ரூ.75/ பரிசு பெறுபவர்:
கோதை ஜெயராமன், மீஞ்சூர்

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்ஃபோனில், **KAGQA** என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

மணமகள்

சுபஸ்ரீ



மணமகள்

ராஜகோபால்

மணமகள்: 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்களின்
சகோதரர் வேங்கடராம அய்யரின் கொள்ளுப்பேத்தி.
புத்தமங்கலம் ராமமூர்த்தி அவர்களின் பேத்தி.
சீர்காழி வி.ரேவதி என்ற புனைபெயர் பூண்ட வாசுதேவனின் மகள்.

மணமகன்: கல்லிடைக்குறிச்சி ராஜகோபால அய்யரின் பேரன். சென்னை, பெஸண்ட் நகர், ஆர்.வீரராகவன் அவர்களின் மகன். சுபஸ்ரீ - ராஜகோபால் திருமணம் சமீபத்தில் தஞ்சையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்: : வாழ்க பல்லாண்டு.

சூக்ஷ்மத்தில் வருகை...

பேசும் தெய்வமாய் பிரத்யட்சதெய்வமாய்த் திகழும் ஸ்வாமி சத்ய சாயி பாபாவிடம் பிரார்த்தனை செய்வதும் குறைதீர்க்கும்படி முறையிடுவதும் என் நித்திய வழிபாடாயிருக்கிறது. என் பிரார்த்தனைகள் ஒவ்வொன்றையும் தக்க நேரத்தில் ஸ்வாமி நிறைவேற்றி வருகிறார். குடும்பத்தில் என் பிள்ளைகளைப் பொறுத்த வரை 'சத்ய சாயி பாபா', உலக அளவில் மகா சேவைகளைப் புரிந்துவரும் அற்புத சக்தியுள்ள மகான். அவ்வளவே. மற்றபடிக்கு அவர்களுக்கு சாயிபாபா அம்மா வழிபடும் ஸ்வாமி. இன்னும் அவர்களுக்குள் ஸ்வாமி நம்பிக்கை தொடங்கவில்லை. இருந்தாலும் என் நம்பிக்கையை... உணர்வை மதிப்பவர்கள். இரண்டு பிள்ளைகளுமே புட்டபர்த்திக்கும் ஸ்வாமி யக்ஞத்துக்காக சென்னை வந்தபோதும் என்னை அழைத்துப் போயிருக்கிறார்கள். எந்த நிலையிலும் பிள்ளைகளுக்கான என் பிரார்த்தனைகளை ஸ்வாமி பாபா பரிவோடும் அன்போடும் நிறைவேற்றி வருகிறார்.

என் மூத்த மகன் மதன்கார்க்கியின் திருமணம் நிச்சயமாவது தள்ளிப் போய்க் கொண்டேயிருந்தபோது ஸ்வாமியிடம் மன்றாடிப் பிரார்த்தித்தபடியே இருந்தேன். அது சமயம் மகன் ஒரு கனவு கண்டான் கோலாகலமாய் அவனுக்கும் அவன் விரும்பிய நந்தினிக்கும் திருமணம் நடப்பதாய்... மிகப் பெரிய மணமேடை.... பெருங் கூட்டம்... மாலைகளோடு இவர்கள் நிற்க...வி.ஐ.பி.க்கள் மணமேடையில் அமர்ந்திருக்க நடுநாயகமாய் 'ஸ்வாமி' அமர்ந்திருப்பதாய்க் கனவு கண்டான். அடுத்த சில நாட்களில் தமிழகத்தின் மேன்மை மிகுந்த தம்பதி மூலம் அவன் திருமணத் தேதி நிச்சயமானது. எல்லாம் பரபர வென்று நடந்தேறியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர், தயாளு அம்மையார் தலைமையில் திருமணம் அற்புதமாக ஆனந்தமாக நடந்தேறியது. சாயி பக்தரின் வீட்டு விசேஷங்களுக்கு ஸ்வாமி சூக்ஷ்மத்தில் வருகை புரிவதாக பக்தர்களுக்குள் நம்பிக்கை உண்டு. சாயி சங்கல்பத்தால் எல்லாம் நல்லபடியாக நடந்திருக்கிறது. ஆனால், ஸ்வாமியின் வருகையோ காட்சியோ எந்த விதத்திலும் தென்படவில்லை. ஏதோ திரைபோட்டாற் போலிருந்தது எனக்கு... அது பெரிய குறையாக இருந்தது.

அன்று மாலை என் மகனும் மருமகளும் என்னிடம் வந்து, 'அம்மா ஓர் ஆச்சர்யம்' என்றார்கள். எங்களை வாழ்த்த வந்த பெருங் கூட்டத்தின் வரிசையில் நின்று காவி உடையணிந்த ஒரு பெரியவர் வந்து எங்கள் தலைதொட்டு ஆசீர்வதித்தார். நேராக புட்டபர்த்தியிலிருந்து



ஸ்வாமி சத்ய சாயி பாபாவிடமிருந்து இப்போதுதான் வருகிறேன். உங்களை வாழ்த்திவிட்டுப் போவதற்காகவே வந்தேன் என்று சொல்லிவிட்டுப் போனார். ஸ்வாமி விபூதியையும், அவருடைய ஆன்மிக அமைப்பு ஆசிரமம் பற்றிய ஓர் அட்டையையும் கொடுத்து விட்டுப் போனார் என்று என்னிடம் தந்தார்கள்.

அது ஷீரடி பாபா, சத்ய சாயி பாபா இருவருடைய படங்களுக்குக் கீழே, வந்த பெரியவருடைய படத்தோடு ஆன்மிக விவரங்களைக் கொண்டதாக இருந்தது. காவி உடை

படியளக்கும் பகவான்!

யணிந்த அந்தப் பெரியவரைப் பார்த்துப் பிரமித்தபடி நின்றேன். வந்தவர் யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும். அவர் மூலம் வந்து தரிசனம் தந்து வாழ்த்திவிட்டுப் போனது ஸ்வாமி சத்ய சாயி பாபாவே!

ஸ்வாமியின் நேரடியான ஆசீர்வாதத்துக்காகத் திருமணமான தம்பதியோடு புட்டபர்த்தி சென்



றேன். முதல் வரிசையில் அமர்ந்திருந்த மகனை ஸ்வாமி பார்த்துச் சிரித்தபடி ஒரு கை அபயஹஸ்தம் காட்டி ஆசீர்வதித்திருக்கிறார்! அதை இப்போதும் நான் என் மகனிடம் சொல்வதுண்டு; உன் வாழ்வின் அத்தனை மேன்மைகளுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ஸ்வாமி உன்னை ஆசீர்வதித்து விட்டார் என்று...

இளைய மகன் கபிலனின் ஒவ்வொரு நூல் வெளியீட்டு விழாவிலும் வாழ்வின் முக்கியமான திருப்பங்களிலும் ஸ்வாமி பாபாவின் கருணையும் காவலும் அருளாசியும் அவனுக்குக் கிடைத்து வருகிறது. 'உலகம் யாவையும்' என்ற அவனுடைய கவிதை நூல் வெளியிடும் நாளில் எனக்குத் தெரிந்த ஒரு பக்தையின் பூஜையறையில் வைக்கப்பட்டிருந்த அவன் கவிதை நூலை ஸ்வாமி சூக்ஷ்மத்தில் அமர்ந்து படித்திருக்கிறார். அந்த விழா அதி அற்புதமாக நடந்தது!

கபிலன் தன் திருமண அழைப்பிதழைத் தம் நண்பர்களுக்கு தந்து வருகையில், ஒரு சாயி பக்தரின் வீட்டுக்குச் சென்றிருக்கிறான். அந்தப் பக்தருக்கு ஓரிரு நாட்களுக்கு முன்புதான் பர்த்தியில் ஸ்வாமியின் பேட்டி கிடைத்திருந்தது. ஸ்வாமி அவர் தலையில் அட்சதையைப் போடாமல் கையில் தந்திருக்கிறார்; விபூதியும் தந்திருக்கிறார். அந்த பக்தர் ஓரிருவர்க்குத் தந்தது போக மீதியிருந்ததில் கொஞ்சம் கபிலனின் தலைமேல் போட்டு ஆசீர்வதித்து, கொஞ்சம் அட்சதையைப் பொட்டலம் கட்டி, 'திருமாங்கல்யம் கட்டியானதும் உன் அம்மாவை உங்கள் இருவர் மேலும் போடச் சொல்' என்று கையில் கொடுத்தனுப்பினார். கலைஞர் தலைமையில் வெகு அற்புதமாக, 'கபிலன் - ரம்யா' திருமணம் நடந்தபோது திருமாங்கல்யம் கட்டியானதும், 'ஸ்வாமி தந்த அட்சதை'யை அவர்கள் மேல் போட்டு ஆசீர்வதித்து மகிழ்ந்தேன். இளையமகன் திருமணத்தில் நேரில் வந்து அட்சதைபோட்டு ஆசீர்வதித்த நிறைவைத் தந்து விட்டார் ஸ்வாமி!

தங்கள் உழைப்பும் முயற்சியுமே தங்களுக்குப் படிபோடுகிறது என்று பிள்ளைகள் சொல்வதுண்டு. அந்தப் படிகளைப் படியளப்பவனே பகவான்தானே!

சத்ய சாயி பாபா தெய்வம்! கலியுகத்தில் நமக்குக் காணக்கிடைத்திருக்கும் கடவுள்! அற்புதமான ஆண்டவன்! அவருடைய இந்த எண்பத்தைந்தாவது பிறந்த நாளில் ஸ்வாமியை 'பல்லாண்டு பல்லாண்டு வாழ்க'என வாழ்த்தி அவர் பாதம் பணிவோம்!

■ பொன்மணி



போதும் சைக்கிளிங்

கோபாலு, கும்பகோணம்

நான் தினமும் வேலை நிமித்தமாக 10 கிலோ மீட்டர் சைக்கிளில் சென்று வந்து கொண்டிருக்கிறேன். மூட்டு வலி என்பது சமீப காலமாக எனக்கு ஏற்பட்டுள்ளது. நான் தினமும் சைக்கிளில் செல்வதால், மூட்டு வலி ஏற்பட்டிருப்பதாக என் நண்பர்கள் சொல்கிறார்கள். அவர்கள் கூறுவது சரியா?

பிசியோதெரபிஸ்ட், கே.லக்ஷ்மி:

''சைக்கிளில் செல்வது பொதுவாக நல்லது தான் என்றாலும் ஒரேடியாக 10 கிலோ மீட்டர் ஓட்டிச் செல்வது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. 30, 35 வயதுக்குட்பட்டவர்கள் என்றால் அவர்களுக்கு சைக்கிளில் செல்வது ஒரு நல்ல உடல் பயிற்சி என்று கூறலாம். அதே சைக்கிளில் 50 ,55 வயதுக்கு மேற்பட்டவர்கள் நீண்ட தூரம் செல்லும் போது, ஏற்கெனவே அவர்களது மூட்டில் தேய்மானம் ஏற்பட்டிருந்தாலோ அல்லது மூட்டு வலி இருந்தாலோ, வலி அதிகரிப்பதற்கு ஒரு வாய்ப்பாகிவிடும். எனவே, 50 வயதைத் தொட்டவர்கள் நீண்ட தூரம் சைக்கிளில் செல்வதைத் தவிர்த்து விட வேண்டும். நமது மூட்டில் நாம் 25 வயதை நெருங்கும் போதிலிருந்தே மெல்ல மாற்றங்கள் ஏற்படுவது இயற்கையே. ஒரு மூட்டு போல இன்னொரு மூட்டு இருக்காது. ஒரு குறிப்பிட்ட வயதை எட்டியவுடன் எப்போதும் சைக்கிளில் செல்வதைத் தவிர்ப்பதே நலம்.''

கோடிஸ்வரன், குமாரபாளையம்

நடை பயிற்சி மேற்கொள்ளும்போது, நாம் எந்த மாதிரியான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம், எதை எல்லாம் செய்யக் கூடாது?

பொது நல மருத்துவர் லதா கிஷோர்:

''நடைபயிற்சி என்பது நமது ஆரோக்கியத்தைப் பேணிக் காக்க நாம் அனைவருமே கட்டாயம் மேற்கொள்ள வேண்டிய ஒன்று. உடற்பயிற்சி செய்வதற்கு முன் உங்களது குடும்பநல மருத்துவரை அணுகி நீங்கள் எந்த மாதிரியான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம் என்பதைக் கேட்டுக் கொண்டு செய்வது நல்லது. உடற்

உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்ஃபோனில், kacli என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

பயிற்சி செய்ய ஏதுவான நேரம் என்பது இளங்காலை அல்லது மாலை நேரம் தான். வேகமாக நடக்க ஆரம்பிப்பதற்கு முன், வார்ம் அப் என்று சொல்லக் கூடிய சிறிய சிறிய உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நடை பயிற்சி செய்ய ஆரம் பிப்பதற்கு முன்பும் சரி, நடந்து முடித்த பிறகும் சரி, தண்ணீர் கட்டாயம் குடிக்க வேண்டும். நடந்து கொண்டே செய்யத் தகுந்த உடற்பயிற்சிகள் என்பது, இரு கை களையும் சுழற்றுவது, மற்றும் கழுத்தை மேல், கீழ் மற்றும் இடப்புறம், வலப்புறம் என மாற்றி மாற்றித் திருப்பிச் செய்யும் பயிற்சிகள். சாப்பாடு சாப்பிட்டு விட்டு ஒருபோதும் உடற்பயிற்சி செய்யக் கூடாது. அதைப்போலவே உடற்பயிற்சி செய்யும் போது, ஏதோ ஒரு அசௌகரியமோ அல்லது மயக்கமோ தோன்றினால், உடனடியாக உடற்பயிற்சி செய்வதை நிறுத்திவிட வேண்டும்.''

தொகுப்பு: நளினி சம்பத்குமார்





● லதா கிஷோர்



● லக்ஷ்மி

கல்கி கிளினிக்

பகவான் சொற்பொழிவில் பதில் இருந்தது!

What is Love

"பகவானின் சொற்பொழிவுகளை மொழிபெயர்ப்பதில் என் பணி ஒலிபெருக்கியைப் போன்றதுதான். பாபா முதலில் தாமே தெலுங்கில் பேசிவிட்டு, அதன் பிறகு என்னுடைய வாய் மூலமாக ஆங்கிலத்தில் பேசுகிறார் என்றுதான் நான் நினைக்கிறேன்'' என்கிறார் புரொபசர் அனில் குமார் காமராஜு. பொதுவாக சத்ய சாயி பாபா தெலுங்கில் ஆற்றும் அருளுரைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லும் பணியைக் கடந்த சுமார் 20 வருடங்களாகச் செய்துவருபவர். குண்டூரில் ஆந்திர கிறிஸ்தவக் கல்லூரியில் படித்து, அங்கேயே 25 ஆண்டுகள் பணியாற்றிய இவர், புட்டபர்த்தியில் உள்ள சத்ய சாயி பல்கலைக் கழகத்தில் பயோ சயின்ஸ் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.




''ஒருமுறை ஆங்கிலப் புலைமை வாய்ந்த கல்விமான் ஒருவர் பகவானைச் சந்தித்தார். அவரிடம் பாபா, 'What is love?' என்று கேட்டார். அவரால் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை. உடனே பகவான், 'What is self?' என்று கேட்டார். மறுபடியும் அந்தக் கல்விமான் தயங்கினார். பகவான், 'Self is loveless-ness' என்று விளக்கம் கொடுத்தார். பகவான் முறைப்படி பெரிய பட்டப் படிப்பெல்லாம் படித்தவரில்லை என்றாலும் அவருடைய ஆங்கில மொழிப்புலமை அபாரமானது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.




● அனில்குமார்

குரலில் ஏற்ற இறக்கங்கள் கொடுத்து, அழுத்தம் திருத்தமாக அற்



சந்திரா ஜானகிராமன்



வழித்துணையாய் வந்த சாமி!

ஒருமுறை கடுமையான புயல் மழை (வருடம் நினைவில்லை). விழுப்புரம் பகுதிகளில் கடுமையான வெள்ளம். அந்த நேரத்தில், திருத்துறைப்பூண்டி என்ற ஊரில் வசித்த என் தந்தைக்கு மிகவும் உடல்நிலை மோசம் என்று தகவல் வந்ததால், காலை பத்து மணிக்குச் சென்னையில் கிளம்பி, திருச்சிக்கு நள்ளிரவு இரண்டு மணிக்கு ஊர் வந்தேன். என் பெற்றோர் வீடு ஒரு சந்தில் இருந்தது. சிறிய ஊர் என்பதால் நாய்கள் தொல்லை மிகுதி. எனக்கோ நாய் என்றால் குலை நடுங்கும்.

தெருவிளக்கைத் தவிர சந்தில் வெளிச்சமில்லை. எவ்வளவோ குரல் கொடுத்தும் யாருமே வரவில்லை. அழுகை வெடித்தது. 'சாய்ராமா! சாய்ராமா!' எனக் கூவினேன். அந்த நேரம் நடுநிசியில், தெருவில் சைக்கிளைத் தள்ளியபடி ஒருவர் வந்து ''என்ன வேண்டும்'' என்றார். என் கஷ்டத்தைக் கூறியவுடன், ''சைக்கிள் கேரியரைப் பிடித்துக்கொண்டு என்னுடன் வாம்மா! உங்கள் வீட்டில் விட்டுச் செல்கிறேன்'' என்று வழிகாட்டியபடி, அவர் முன்னே நடந்தார்.

எங்கள் வீடு வந்ததும், என்னை ''முன்னால் போய் கதவைத் தட்டிக் குரல் கொடுங்கள்'' என்றார். அவ்வாறே என் வீட்டில் உள்ளவர்கள் விளக்கைப் போட்டு, கதவைத் திறந்து, ''எப்படி இந்த நேரத்தில் வந்தாய்; யாருமே இல்லை.'' என் தம்பி, தெருக்கோடி வரை பார்த்துவிட்டு ''யாருமே இல்லை. ஆள் நடமாட்டம் இல்லை'' என்றான். அப்போதுதான், வந்து உதவி, வழிகாட்டியவர் 'சாய்ராம்' என்று உணர்ந்தேன். சாய்ராம் கருணைக்கு ஈடே கிடையாது.

- சந்திரா ஜானகிராமன், மயிலாப்பூர்.

புதமாக சொற்பொழிவாற்றுவார் பகவான். எனவே, அவர் சொல்வதைச் சட்டென்று கிரகித்துக் கொண்டு, அவர் எதற்கு அழுத்தம் கொடுத்தும், குரலில் ஏற்ற இறக்கங்கள் கொடுத்தும் சொல்கிறாரோ அதேபோல ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்வேன். அவர் பேசும்போது 'நான்' என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளும்போது, அதை நான் 'பகவான்' என்றுதான் மொழிபெயர்ப்பேன்.

உணர்ச்சி மேலீட்டில், பகவானது தெலுங்கு வார்த்தைகளுக்குப் பொருத்தமான ஆங்கில வார்த்தைகள் கிடைக்காமல் நான் தடுமாறும்போது பகவானே எனக்குப் பொருத்தமான வார்த்தைகளை எடுத்துக் கொடுக்கும் சம்பவங்கள் நிறைய நடந்ததுண்டு.

1975ல், ரோட்டரி சங்கத்தின் சார்பில் இந்தியாவிலிருந்து ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அமெரிக்காவுக்கு ஆறு வாரப் பயிற்சிக்கு அனுப்புவதற்கான இன்டர்வியூவில் நானும் கலந்துகொண்டேன். அப்போது கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்துக்கும் பகவான் அருளால் நான் மிகத் தெளிவாகப் பதில் சொன்னதால், என்னையே அவர்கள் அமெரிக்காவுக்குச் செல்ல தேர்ந்தெடுத்தார்கள். எப்படி என்னால் கேள்விகளுக்குச் சிறப்பாக பதில் சொல்ல முடிந்தது தெரியுமா? அந்தக் கேள்விகள் எல்லாவற்றுக்குமே, பகவானின் சொற்பொழிவுகளில் பதில் இருந்தது தான்'' என்று நெகிழ்ச்சியோடு கூறுகிறார் பேராசிரியர் அனில்குமார்.

கௌதம் ராம்



கல்கி



2010 நவம்பர் 28
விக்ருதி கார்த்திகை 12
மலர் : 69
இதழ் : 18


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


வரலாறு காணும் சி.ஏ.ஜி;
வரலாறு காணாத ஊழல்!

“நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக ராசா ராஜினாமா செய்துள்ளார்,” என்ற விளக்கம் தி.மு.க.வுக்கும் அதன் தலைவருக்கும் இழுக்குக்கு மேல் இழுக்கு சேர்ப்பதாக உள்ளது. உண்மையில், இந்த நாட்டின் நாடாளுமன்ற மரபுகள்தான் லஞ்ச - ஊழல் செய்வோரை வெளியேற்ற வழி செய்து, மக்களையும் அவர்களது உரிமைகளையும் காப்பாற்றி வருகின்றன. ஆளும் கட்சியினரைத் தட்டிக் கேட்க அனுமதிக்கும் மரபு மட்டும் இல்லாவிடில், இன்று ராசா பதவியில் தொடர்ந்துகொண்டுதான் இருப்பார்.

இதே ஜனநாயக மரபுகளை நன்கு உள்வாங்கிக்கொண்டு, காங்கிரஸுக்கு ஆதரவு தர ஜெயலலிதா முன்வந்ததுதான் இவ் விவகாரத்தில் மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்தது என்று சொல்லலாம். 'ராசா வெளியேற்றப்பட்டால் கூட்டணி முறிந்து ஆட்சி கவிழும் அபாயத்துக்கு அஞ்ச வேண்டாம். அதைத் தவிர்க்க ஆதரவு அளிக்கிறேன்' என்று அவர் முன் வந்ததில் அரசியல் உள் நோக்கங்கள் இராமல் போகாது. ஆனால் அவரது அந்த 'மாஸ்டர் ஸ்ட்ரோக்'தான் காங்கிரஸை தர்ம சங்கடத்தில் ஆழ்த்தியிருக்கிறது. பிரதமரின் தார்மிகப் பொறுப்புணர்ச்சியை ஓர் உலுக்கு உலுக்கியிருக்கிறது.

இவ்வளவு தூரத்துக்கு விவகாரம் முற்றி நெருக்கடி உருவாகும் முன்னரே ராசா ராஜினாமா செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல், அவர் பதவியைப் பிடித்துக்கொண்டு விலக மறுத்





ததும் தமது செயல்பாடுகளை நியாயப்படுத்த முயன்றதும் கௌரவமான அரசியல் நடத்தை அல்ல. குற்றம் சாட்டப்பெற்ற எவருமே முதலில் பதவியிலிருந்து விலகிய பிறகுதான் விசாரணைக்கு உட்பட வேண்டும் என்பது பொதுவாழ்க்கை தர்மம்; ஜனநாயக மரபு. அவ்வாறு செய்யாமல், இப்போது எதிர்க்கட்சி அரசியல், மீடியா நெருக்கடி ஆகியவற்றால் பதவி விலகிவிட்டு, நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பதற்காக விலகியதாகச் சொல்வது கேலிக் கூத்தாக இருக்கிறது. புது தில்லியில் குடும்பத்துடன் முகாமிட்டு, தாம் சுட்டிக்காட்டிய நபர் களுக்கு, பட்டியலிட்ட அமைச்சர் பதவிகளை பிரதமரிடமிருந்து மிரட்டி வாங்கியபோது நாடாளுமன்ற ஜனநாயக உணர்வு எங்கே போயிற்று?

முந்தைய ஆட்சிக் காலத்தில் பின்பற்றப்பட்ட அலைக்கற்றை ஒதுக்கீடு கொள்கையைத்தான் தாம் இம்மி பிசகாமல் பின்பற்றியதாகவும், அதனால் தம் பேரில் எதுவும் தவறில்லை என்றும் ராசா வாதாடுவது விதண்டாவாதமே. முந்தைய ஆட்சியின் செயல்முறைகள் இன்றையச் சூழ லுக்குப் பொருந்துமா என்று ஆராயாமல் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவது எவ்வாறு சரியாகும்? திறமையற்ற அமைச்சர் ஒருவர், பொறுப்பில் நீடிப்பது நாட்டுக்கு நல்லதா? ராசா தன்னிச் சையாகச் செயல்பட்டிருக்கிறார். துறைச் செயலரும் அதிகாரிகளும் அளித்த அறிவுரைகளைப் புறக்கணித்திருக்கிறார். அதுவுமன்றி, ஒதுக்கப்பட்ட அலைக்கற்றைகளை வாங்கிய நிறுவனங் கள், தங்கள் நிறுவனப் பங்குகளை ஒரு மாதத்துக்குள் விற்று கொள்ளை லாபம் கண்டுள்ளன.

உள்நோக்கங்களுக்கு இடமளிக்கும் இவ்வளவு அடிப்படைகள் இருக்கும்போது, ராசா குற்ற மற்றவர் என்கிற ரீதியில் அவரது கட்சித் தலைவர் தொடர்ந்து கூறி வருவது, 'குப்புற விழுந்த பிறகும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற கதைதான்.

150வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது சி.ஏ.ஜி. அமைப்பு. அதன் முனைப்பினால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின்படி, 177000 கோடி ரூபாய் இழப்பை அலைக்கற்றை ஒதுக்கீடு ஏற்படுத்தியிருக்கிறது. வரலாறு படைத்த அமைப்பு கண்டறிந்துள்ள வரலாறு காணாத ஊழலுக்குப் பிறகேனும் நம் நாட்டில் திருப்புமுனை ஏற்படட்டும். அரசியலில் லஞ்ச-ஊழல் ஒழிந்து நேர்மையும் திறமையும் மலரட்டும்.

ஈஸி போட்டி சில்கி சாரி!

அக்டோபர் மாதத்துக்கான பட்டுப் புடவைப் போட்டி முடிவு!



ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு' தொடரில் இடம் பெற்ற போட்டியில் பங்கேற்ற ஆயிரக் கணக்கான வாசகர்கள் அனுப்பி இருந்த விடைக் குவியல்களில் இருந்து சரியான விடையை எழுதியவர்களைத் தேர்வு செய்து, பின்னர் குலுக்கல் முறையில் மூன்று வாசகர்களை அதிர்ஷ்டசாலிகளாக அறிவித்து அவர்களுக்குத் தலா ஒரு பட்டுப் புடவை வீதம் பரிசளிக்கப் படுகிறது.

கேள்விகள்: 1. சில்க் ஸ்மிதாவைப் பார்த்தால் ஊர்வசியின் ஞாபகத்தில் வரும் தலைவர் யார்?

2.வஞ்சனை இல்லாமல் வாழ்த்துகளை தானம் செய்யும் கர்ண பிரபு யார்?

3. சாம்பார் மேம்பொடி என்பதற்கு அர்த்தம்?

4. வக்கிரக் காளியம்மன் இருக்கும் இடம்?

***விடைகள்:** 1.பெரியார் 2. பாலசந்தர் 3.பெருங்காயம், 4. திருவக்கரை*

அக்டோபர் மாதத்துக்கான பட்டுப் புடவைகள்
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

- 1. ஜெயலக்ஷ்மி, சிட்லபாக்கம்
- 2. மா.தமிழ்ச்செல்வி, கல்பாக்கம்
- 3. எம்.மீனாட்சி, சின்னசேலம்

அக்டோபர் மாத பட்டுப் புடவைகளைப் பரிசாக வழங்குவோர்:

பங்கேற்ற வாசகர்களுக்கு நன்றிகள்...!
பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்!


கல்கி
ஆன்லைன்
இலவசப் பதிவு!
கல்கி,
மங்கையர் மலர்,
கோகுலம்,
Gokulam
எல்லா
இதழ்களையும்
உடனடியாகப் படிக்கலாம்!
kalkionline
கல்கி
http://www.kalkionline.com

சந்தோஷ் காலனியில் ஒரே பரபரப்பு... காலனியில் வசிப்பவர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் வசைமாரி வார்த்தைகளை அள்ளி வீசிக்கொண்டிருந்தனர். பல அடுக்குகளைக் கொண்ட அந்தக் குடியிருப்பு, சென்னையின் புறநகரை ஒட்டியிருந்தது. அமெரிக்காவின் 'பெண்டகனை' நினைவூட்டும் அளவுக்குப் பெரிதாக இல்லையென்றாலும், உயரத்தால் பாதிக்குப் பாதி இல்லையென்றாலும், அந்த மாடலில் உருவாகியிருந்தது அந்தக் காலனி.

பலதரப்பட்ட பிரிவினரும் அங்கு குடியிருந்தனர். அவர்கள் ஒருவரை ஒருவர் வார்த்தைகளால் திட்டிக்கொண்டதற்குக் காரணமே அங்கு மூன்று நாள் தொடர்ந்து கனமழையால் காலனி வெள்ளக் காடாகி இருந்ததுதான். ஒருவரை ஒருவர் திட்டுவதற்குப் பெரிதான விஷயம் ஒன்றுமில்லை. ஒரு சிறிய பிரச்னைதான்! என்றாலும் அதனைப் பூதாகாரமாகப் பெரிதுபடுத்தியிருந்தனர். ஒரே கூச்சலும் குழப்பமும் தொடர்ந்தது.

இத்தனைக்கும் காரணம் ஐந்தாவது மாடிக் கழிப்பறைக் குழாயில் ஏற்பட்ட கசிவுதான்!

அண்மையில் பெய்திருந்த கனமழையும், கழிப்பறைக் குழாய்க் கசிவும் சங்கமமாகி, காலனியை உண்டு இல்லை என்று பார்த்துவிட்டது. காலனியைச் சுற்றிச் சாக்கடைத் தண்ணீர் தேங்கி இருந்தது. அது வீசிய துர்நாற்றம் அரசியலைவிட மோசமாக இருந்தது.

அப்படி ஓர் நாற்றத்தை அங்கு குடியிருப்போர் இப்போதுதான் அனுபவிக்கிறார்கள். பணத்தை லட்சம் லட்சமாய்க் கொட்டிக் கொடுத்து அந்தக் குடியிருப்பில் குடியேறியதற்கு ஒருவரையொருவர் நொந்து கொண்டார்கள்.

அந்தக் காலனியில் நூற்றியிருபத்தைந்து குடியிருப்புகள். மொத்த வீடுகளுக்கும் துர்நாற்றம் பொதுவுடைமையாகியது. கசிவால் காலனி முழுக்கச் சகித்துக்கொள்ள முடியாமல் அப்படி ஓர் நாற்றம். தனி மனிதனில், குடும்பத்தில், அரசியலில்,



ஊரில், நாட்டில் இருப்பனவற்றோடு அதனைச் சம்பந்தப்படுத்த முடியாதுதான். அவற்றை எல்லாம் தாண்டி எல்லை கடந்து பரவியிருந்தது சாக்கடைச் சங் கமம். ஒரு கசிவால் குடியிருப்போரின் அன்றாட வாழ்க்கையை மூன்று நாட் களாகப் புரட்டிப்போட்டிருந்தது.

''கசமாலம்! கழிசடைங்க! *சீ... சீ...* நாத்தம் வயித்த புடுங்குது. குடலே வெளியிலே வந்துடும் போலிருக்கே...''

- இப்படிச் சொல்லிவிட்டுச் சாக்கடை யைப் பார்த்து எச்சிலைக் காறி உமிழ்ந்த படியே சென்றாள் ஒருத்தி. அவள் குடி யிருப்பின் சொந்தக்காரி அல்ல. ஒரு பெரிய வீட்டின் வேலைக்காரி.

'காலனியிலே இருக்கறவாளுக்குக் கொஞ்சம்கூட சுத்த பத்தம் தெரியலே... இதெ கேக்கிறவா யாரும் இல்லையா?'

கசிவு

- இரண்டாவது மாடியில் வசித்து வரும் சுமதி மாமியின் அங்கலாய்ப்பு.

''என்ன பீப்புள் இவங்க. கொஞ்சம்கூட கசண்டா இல்லே... இந்த ஃபில்தி அட் மாஸ்பியரை எப்படி பேஸ் பண்றது? ஹெல்த் பாயிண்ட் ஆஃப் வியூல்ல திங்க் பண்ணவேண்டாமா?''

- துர்நாற்றத்தில் கலந்து இருக்கும்

இராம.குருநாதன்

கலக்கல் போலவே ஆங்கிலமும் தமிழும் கலந்து தங்கிலீசில் பேசியது வயது எழுபத்தைந்தைத் தாண்டிய மேல்தட்டு வர்க்கம் ஒன்று.

'கார்ப்பரேஷனுக்குத் தகவல் கொடுத் தாச்சு. இன்னும் அவர்கள் வந்தபாடில்லை. என்னய்யா... கார்ப்பரேஷன் ஆளுங்க... இத்தனைக்கும் மினிஸ்டரோட பி.ஏ. இரண்டு பேர் இந்தக் காலனியிலே குடி யிருக்காங்க!

- காலனியிலிருந்த திருவாளர் பொது ஜனம் ராதாகிருஷ்ணனின் குரல் உச்சஸ்தா யியில் ஆரோகணமாக ஒலித்தது.

கார்ப்பரேஷன் ஆட்கள் மூவர் வந் தனர். கழிவுநீர்க் கிணற்றைச் சுத்தப்படுத்தும் கருவி வருவதற்குத் தாமதமானது. வந்த கருவியில் ஏதோ கோளாறு. அதனை அங் கேயே விட்டுவிட்டுச் சட சட என்று கயிற் றைப் பிடித்துக்கொண்டு குழாயில் இறங்கி விட்டான் கிருஷ்ணன். மேலே கயிற்றைப் பிடித்துக்கொண்டிருந்தான் ராகவன்.

கிருஷ்ணனுக்கு ஒன்றும் பிடிபடாமல் போகவே ராகவன் இறங்க வேண்டிய தாயிற்று. அவனுக்குப் பாதி தூரம் கீழே இறங்கியதும் மூச்சு முட்டியது. திணறிய படியே மேலே வந்துவிட்டான். அவனைக் கயிற்றால் இழுக்க வேண்டியதாயிருந்தது. அவன் ஆழ்கிணற்றிலிருந்து மேலே வந்த தும் கண்கள் இருண்டுவிட, திடீரென்று மயங்கி விழுந்தான். அப்படியே சாய்ந் தவன் பிறகு எழுந்திருக்கவே இல்லை.

கூட்டம் கூடிவிட்டது. அவனைப் பார்த்துக் கொஞ்சமும் அங்கிருந்தோர் இரக்கப்பட்டதாய்த் தெரியவில்லை. அவர்களுக்குக் காலனியைச் சுற்றிக் கடல் போலத் தேங்கியிருக்கும் கழிவு நீர்

அகற்றப்பட வேண்டும் என்பதுதான் பெரிதாக இருந்ததே ஒழிய, ராகவனைப் பற்றிக் கவலைப்படவில்லை. அந்த அளவுக்கு அவர்களிடம் மனிதநேயம் மரித்துப்போயிருந்தது.

காலனிவாசிகள் பேச்சு இன்னும் ஓய்ந்தபாடில்லை.

காலனியில் குடியிருப்போர் சிலர் மினிஸ்டர் பி.ஏ. இருக்கும் குடியிருப்புக்கு ஒரு குழுவாகச் சென்றனர். தாங்கள் எழுதி வைத்திருந்த கோரிக்கையை அவர்களிடம் தந்தனர்.

''நாங்க இங்க வந்து இரண்டு மாதம் தானே ஆவுது. இனிமேதான் இதெ கவனிக்கணும். எங்களுக்கே தெரியுது காலனியிலே இப்படி ஒரு துர்நாற்றம்... எங்களாலேயே சகிக்கமுடியலே... ஆகட்டும் சரி செஞ்சிடலாம்'' - மினிஸ்டர் பி.ஏ. இருவருமே இப்படி ஒரு சேரப் பதிலளித்தனர்.

நிலைமை இன்னும் மோசமாகிப் போனது. காரணம், கனமழை இன்றும் தொடர்ந்ததுதான். காலனியின் கழிவு நீர் மட்டுமின்றிச் சுற்றுப்புறத்தில் இருந்த வாய்க்காலில் ஓடிய நீரும் அங்கு கலந்து சங்கமமாகி அந்தக் காலனியை ஒரு குட்டித் தீவு போல ஆக்கியிருந்தது. ஐந்து நாட்களாகியும் கழிவு நீர் வெளியேறவில்லை. கழிப்பறைக் கசிவு வந்து கொண்டுதான் இருந்தது. தேங்கியிருக்கும் அசுத்த நீரையும் வெளியேற்ற இயலவில்லை. சாக்கடை எங்கே அடைத்துக் கொண்டிருக்கிறது என்பது இன்னும் யாருக்கும் புலப்படாமல் இருந்தது.

சந்தோஷ் காலனி, கழிவு நீர் காலனியாகவே காட்சியளிக்கத் தொடங்கியது. அங்கு குடியிருப்போர்க்கு அது வசதிக்கேற்ற வடிகாலாகவும் இருந்தது. கண்டதையும் மாடியிலிருந்தவாறே சாக்கடைப் பக்கம் வீசி எறிவது அவர்களுக்கு வழக்கமாக இருந்தது. 'டிஸ்கஸ் த்ரோ' வைத்தால் ஒலிம்பிக்கில் மூன்று பதக்கங்களையும் அந்தக் காலனிப் பெண்களே தட்டிச் செல்வார்கள். அழுகிப்போன காய்கறிகள், கடித்துப் போட்ட இறைச்சித் துண்டுகள் இவைகளைப் 'பாலித்தீன்' பைகளில் அடைத்து வீட்டுக்குள் இருந்தபடியே எறிய அவர்களுக்கு வசதியாக இருந்தது.

துர்நாற்றம் நாலாபுறத்தும் நீக்கமற நிறைந்திருந்தது. மழை நீரும், கழிவு நீரும் அந்தக் காலனியில் அத்வைதமாகக் கலந்திருந்தது. நீக்கமற நிறைந்திருந்த நீர்ப் பரப்பு, கடலோடு கலந்துவிட்டது போல அப்படி ஓர் சங்கமம். சந்தோஷ் காலனியை ஒரு திரிவேணி சங்கமமாக ஆக்கியது. தண்ணீரில் மிதக்கும் ஒரு நட்சத்திர ஓட்டலைப் போல கம்பீரமாகக் காட்சி அளித்தது காலனி. இரண்டாம், மூன்றாம் மாடிகளில் இருந்தோர் கரை தட்டிய கப்பலைப் போல கரையை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

இரண்டாம் மாடியில் குடியிருந்த சிலருக்கு விஷக்காய்ச்சல். அது மெல்ல மெல்ல குடியிருப்புப் பகுதிகளில் பரவிய தோடு மற்ற பகுதிகளுக்கும்



"டார்லிங் நான் வர லேட்டாயிடுச்சா? சாரி..."

- எம். திருமேனி

வாசகர்களே! இந்தப் படத்துக்கு வேறு மாதிரி யோசிக்க நீங்கக்கூட ஜோக்ஸ் அனுப்பலாமே? ம்ம்... 'லவ்வர்ஸ் ஜோக்ஸ்'னு குறிப்பிட்டு அனுப்புங்களேன்...

"இளநீர் ரேட்டை அதிகமா சொல்றியே!"

"சர்வதேசத் தரத்துக்கு சீவித் தருவேன் சார்!"

- பி.ஜி.பி.இசக்கி



பரவத் தொடங்கியது. கான்வெண்டில் படிக்கும் சிறுவர்களைப் பள்ளிக்குச் செல்ல முடியாமல் அது முடக்கிப்போட்டது.

காலனியைக் கொசுக்களுக்கும், டாக்டர்களுக்கும் உரிய சீசனாக ஆக்கியிருந்தது. நோய் தீவிரமாகப் பரவவே, மருத்துவக் கழகம் அந்த சீசனில் வந்த நோய்க்கு என்ன பெயர் வைப்பது எனத் திணறியது. புயலுக்கு 'ஜல்' என்று பெயர் வைப்பதற்கு ஒரு குழு அமைத்ததுபோல, இதற்கும் ஒரு பெயர் வைப்பதென தில்லியில் உள்ள மருத்துவக் கழகம் கூடியது. முடை நாற்றத்திலிருந்து உற்பத்தியாகும் ஒருவகைப் பூச்சிதான் இதற்குக் காரணம் என்று டாக்டர்கள் ஆராய்ச்சி செய்து ஒரு முடிவுக்கு வந்தனர். சிக்குன்குன்யா என்பதுபோல, இதற்கும் ஒரு பெயர் சூட்டி மகிழ்ந்தனர். அந்த நோயின் பெயரை மருத்துவக் கழகம் அங்கீகரிக்க, நலத்துறை அமைச்சர் அந்த



நோயின் பெயரை 'பைப்பிலோனியா' என்று முன்மொழிந்தார். 'பிரஸ்' மீட்டிலும் கலந்துகொண்டு அந்தப் பெயரை மீண்டும் அங்கீகரித்தார். பிரபல பத்திரிகைகள் அப்பெயரைப் பிரபலப்படுத்தின. சந்தோஷ் காலனி பைப் உடைந்து, சாக்கடையால் இந்நோய் இங்கு முதன்முதலில் தோன்றியதால், 'பைப்பிலோனியா' - பெயர் அமர்க்களப்பட்டது. காலனி மக்களுக்கும் அது பெருமையாக இருந்தது.

சந்தோஷ் காலனியில் இப்போது துர்நாற்றம் அறவே இல்லை. ஒரு வாரமாகப் பெய்த பேய் மழை அந்தக் காலனியைப் படு சுத்தமாக்கியிருந்தது. அந்த அசுத்த நீரை, தண்ணீரே அடித்துச் சென்று கடலோடு கலக்கச் செய்தது. காலனிப் பகுதியில் கழிவு நீர் தேங்காமல் அது தன் போக்கில் எல்லா அசுத்தங்களையும் சுமந்துகொண்டு கடலை நோக்கித் 'தேமே' என்று போய்க் கொண்டிருந்தது.

ஆனாலும், அந்தக் காலனியில் மட்டும் எங்கோ ஓர் இடத்தில் எப்படியோ கசிவு இருந்துகொண்டுதான் இருக்கிறது. எங்கிருந்து வருகிறது என்பது மட்டும் இன்னும் அந்தக் காலனி மக்களுக்குப் பிடிபடவே இல்லை.







பகவான்

"கேரளாவிலிருந்து ஹீரோயின்கள் (அசின், நவ்யா நாயர், மீரா ஜாஸ்மின், ...) தான் தமிழ் சினிமாவுக்கு இறக்குமதியாவார்களா? இதோ ஹீரோவாக நான் வந்திருக்கிறேன். வந்தவர்களை வாழவைக்கும் தமிழகம் என்னையும் ஹீரோவாக்கி அழகு பார்க்கும்" என்கிறார் பகவான் படத்தின் ஹீரோ யுவராஜ். திருச்சூரைச் சேர்ந்தவர். 'மனசே மௌனமா' படத்தில் வில்லனாக பெர்ஃபாமன்ஸ் காட்டியவர். இவருக்கு சினிமா புதிதல்ல. இவரது அம்மா மாதவி மோகன் மலையாளத்தில் பத்துக்கும் மேற்பட்ட படங்களின் தயாரிப்பாளர். பகவான் படத்தைத் தயாரிப்பதும் இவர்தான்! (பிள்ளைக்காக அம்மா எடுக்கும் ரிஸ்க்!?)

மகாராஜா

தெலுங்கின் பிரபலமான நகைச்சுவை நடிகர் எம்.எஸ். நாராயணன் தமிழுக்கு அறிமுகமாகும் படம் மகாராஜா. கதைச் சத்துள்ள படங்களில் தொடர்ந்து கதாநாயகியாக நடித்து வரும் அஞ்சலிக்கு இப்படத்தில் ஹீரோயின் வேடம். காமெடிக்கு கருணாஸ், கோவை சரளா, பயில்வான் ரங்கநாதன் என்று ஒரு குரூப்பே இருக்கு. தமிழ், தெலுங்கு இரண்டு மொழிகளிலும் தயாராகிக் கொண்டிருக்கும் இப்படம், டிசம்பரில் திரைக்கு வருமென்கிறார் இயக்குனர் மனோஹரன். இவர் அர்ஜுன், பரமேஷ்வர் இருவரிடமும் உதவி இயக்குனராகப் பணியாற்றியவர்.



பயாஸ்கோப்

பொறுத்திரு

எம்.ஜி.ஆர். நம்பி தயாரித்து இயக்கும் படம் 'பொறுத்திரு'. பன்னிரெண்டு வருடங்களாக நடிக்காமல் இருந்த நடிகர் எஸ்.எஸ்.சந்திரன் கடைசியாக நடித்த படம். இயக்குனர் எம்.ஜி.ஆர். நம்பி இந்தப் படத்தில் நகைச்சுவை வேடம் ஒன்றில் நடிக்கிறாராம். '''பாட்டிச் சொல்லைத் தட்டாதே' போல 'பொறுத்திரு' படம் காமெடி சரவெடியாக இருக்கும்'' - இது எம்.ஜி.ஆர்.நம்பியின் ஸ்டேட்மெண்ட். தினாவின் இசையில் 'பொறுத்திரு' குத்தாட்டம் போட வைக்கும் என்ற எதிர்பார்ப்பும் இருக்கிறது!

பாக்யராஜ் தம் மகன் சாந்தனுவுக்காகத் திரைக்கதை அமைத்து இயக்கியிருக்கும் படம் 'சித்து'. ''நான் நேரத்தையும் அதிர்ஷ்டத்தையும் நம்புகிறவன். நேரம் சரியில்லையானா எவ்வளவு மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை நான் பார்த்திருக்கிறேன். 'சித்து' படம் இவ்வளவு நாள் தள்ளிப் போனதைக் கூட ஒரு கெட்ட நேரமாக நினைக்கிறேன்'' இது பாக்யராஜின் ஸ்டேட்மெண்ட். 'சித்து' படத்தில் 'நான் ஆளான தாமரை' ரீமிக்ஸ் ஆகி இருக்கிறது!

- ரியா

சித்து



"ம்... நல்லா பாடு..."

'காதல் மன்னன்', 'ஜெமினி', 'ஆட்டோ கிராஃப்', 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்,' போன்ற வெற்றிப் படங்களின் இசையமைப்பாளர் பரத்வாஜ். பெரியவர் முதல் சிறுவர்கள் வரை தம் பாடல்களுக்கு 'ஓ' போடச் செய்து கொண்டிருப்பவர்.

தம் வாழ்க்கைக்குப் புது அர்த்தத்தைத் தந்து கொண்டிருக்கும் பகவான் பாபாவின் மகிமைகளைச் சொல்கிறார்:

ஒரு நாள் நடிகர் ரகுவரன் என்னைத் தொடர்பு கொண்டு 'தமிழ்நாட்டிலுள்ள சாயிபக்தர்கள் அனைவரும் தமிழ்ப் புத்தாண்டு தினத்தை பெங்களூருவிலுள்ள ஒயிட் ஃபீல்டில் சத்திய சாயி பாபாவின் முன்னிலையில் கொண்டாடப் போவதாகவும், அந்த விழாவில் 45 நிமிடங்கள் நான் பாட வேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டார். ஏப்ரல் 14ஆம் தேதி நடக்கவிருக்கும் அந்த நிகழ்ச்சியில் நான் மட்டும் பாடுவதற்குப் பதில் வளர்ந்து வரும் பின்னணிப் பாடகர்களுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து ஒன்பது மொழிகளில் பக்திப் பாடல்களைப் பாட ஒன்பது பாடகர்களைத் தேர்ந்தெடுத்தேன்.

ஏப்ரல் 13ஆம் தேதி பெங்களூரு அடைந்த என்னை 'சத்திய சாயி பாபா' வரச் சொன்னதாகத் தகவல் வந்தது. பெங்களூருவிலிருந்து கிளம்பி ஒயிட் ஃபீல்டை அடைவதற்குள் இரவு நேரம் ஆகிவிடும் என்பதால் மறுநாள் காலை 'தரிசனத்துக்கு' வருவதாகச் சொல்லி உறங்கிவிட்டேன்.

மறுநாள் காலை எழுந்திருக்கும் போதே உடல்நிலை சரியில்லை. தொண்டை பயங்கரமாய் வலித்தது. குரல் எழும்பவில்லை. வயிற்றுப் போக்கு வேறு. பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை 'பாத்ரூம்' செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். இந்த நிலையில் தரிசனத்துக்கு எப்படிச் செல்வது? என் இயலாமையைத் தெரியப்படுத்தினேன்.


பரத்வாஜ்

சுமார் 10 மணிக்கு என் வயிற்றுக் கோளாறு சரியாயிற்று. உடனே கிளம்பி ஒயிட்ஃபீல்டு சென்று ஒத்திகையைத் தொடங்கினேன்.

மாலை மூன்று மணிக்கு பாபா தரிசனத்துக்கு வந்தார். பக்தர்கள் கூட்டத்தில் மிதந்து வந்தவர் தூரத்திலிருந்தபடியே என்னை அழைத்தார். அங்கு நடக்கும் வழக்கங்கள் எதுவும் எனக்குத் தெரியாததால் சத்திய சாயி பாபாவை எப்படி அழைப்பது? ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்த என்னிடம் ஒரு ரோஜா பூவைக் கொடுத்து அவரை வணங்குமாறு ஒரு நண்பர் சொன்னார். அவர் சொன்னபடியே வணங்கிய என்னை 'நல்லா பாடு' என்றார்.

மேடைக்குச் சென்று நிகழ்ச்சியைத் தொடங்கினோம். ஒன்றன்பின் ஒன்றாய் ஒன்பது பக்திப் பாடல்கள். கூட்டம் ரசித்தது. நிகழ்ச்சி முடிந்தவுடன் பாபா தன் இருக்கையிலிருந்து எழுந்து மேடைக்கு வந்தார். ''தம் கையசைவில் பல பொருட்களை பாபா சிருஷ்டித்துக் கொடுப்பார்'' என்று என் திரையுலக நண்பர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன். வழக்கமாகப் பின்னணி பாடகர்களுக்கும் நடிகர்களுக்கும் மட்டுமே பாராட்டும், அங்கிகாரமும் கிடைக்குமே தவிர, இசையமைப்பாளர்களை யாரும் பெரிதாய்க் கொண்டாடுவது கிடையாது. இந்த இடமும்

பகவான் இசைக்கும் அருளே சிம்ஃபனி!



அதற்கு விதிவிலக்கல்ல... பாபா இங்குள்ள பாடகர்களில் யாருக்கேனும் பரிசு வழங்கக் கூடும் என்று நினைத்தவாறு நின்று கொண்டிருக்கும் என்னருகில், பாபா வந்து கைகளைச் சுழற்றி ஒரு தங்கச் சங்கிலியை வரவழைத்தார். அதிலுள்ள டாலரில் ஒரு புறம் ஸ்ரீராமர் பட்டாபிஷேகமும் மறுபுறம் 'ஓம்' என்ற எழுத்தும் பொறித்திருந்தது. அதை என்னிடம் சுட்டிக் காண்பித்துவிட்டு அவர் கரங்களாலேயே எனக்கு அணிவித்தார். திகைத்து நின்ற என்னிடம், ''நீ ஏன் பாடலை? பாடு'' என்றார். தொண்டை வலியால் பாடமுடியாத நான், அவர் கட்டளையிட்ட பிறகு பாட ஆரம்பித்தேன். என்ன ஆச்சர்யம்... எந்த உபத்திரவமுமின்றி என்னால் பாட முடிந்தது. நான் பாடி முடிக்கும் வரை என் கையைப் பற்றியபடி என் அருகிலேயே நாற்காலியில் சாய்ந்தபடி சுமார் 10 நிமிடங்கள் சத்திய சாயி பாபா நின்றதை என்னால் மறக்கவே முடியாது. எனக்கு அப்போதும் அவர் செய்கையின் விசேஷம், அற்புதம் புரியவில்லை. ஊர் திரும்பினேன்.

சென்னை வந்தடைந்தவுடன், 'ஜெமினி' படம் வெளியாகி என் பாடல்கள் மக்களிடையே பலத்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்ற செய்தி என்னை வரவேற்றது.

அந்த நிமிடத்தில் தான் சத்திய சாயி பாபா, என்னை வரவழைத்துப் பாட வைத்து, பரிசளித்து ஆசீர்வதித்ததன் அர்த்தம் 'பளிச்' என்று புரிந்தது. என் வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்த அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பல வெற்றிகள் என்னைத் தொடர்ந்தன.

எனக்கு மட்டுமின்றி, பகவான் பாபா பக்தர்களின் மனங்களில் சிம்ஃபனியாய்த் தம் அருளைத் தொடர்ந்து இசைத்துக் கொண்டிருக்கிறார் என்பது மட்டும் நிச்சயம்.

தொகுப்பு: ஜெயா சேகர்

■ பரத்வாஜ்

டாக்டரின் நோயாளிகள்!



டாக்டர் ராமதாஸின் தம்பி மகன் சமீபத்தில் காங்கிரஸில் இணைந்தார். குடும்பத்தில் இப்படிக் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு காங்கிரஸின் முன்னாள் எம்.எல்.ஏ. பலராமன்தான் காரணம் என்று மூன்று பா.ம.க. பிரமுகர்கள் அவரைத் தாக்கிவிட்டார்கள். ''பல நல்ல கொள்கைகள், மது ஒழிப்பு போன்றவற்றுக்காகப் போராடும் ராமதாஸ், கட்சிப் பிரமுகர்களுக்கும் அரசியல் பயிலரங்கம் நடத்துகிறார். அதில் சொல்லித் தருவது வன்முறைதானா?'' என்று நொந்துபோய் கேட்கிறார் தாக்குதலுக்கு உள்ளான பலராமன்.

ராஜாக்களுக்கு மவுசு!

தி.மு.க.வில இப்போது ராஜாக்கள் சீசன் போலிருக்கிறது. ஆ.ராசாவுக்கு தி.மு.க. தலைமை ஃபுல் பேக்கிங் கொடுக்க, அடிதடி வழக்கு தொடர்பாக, மாவட்டச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ஈரோடு என்.கே.பி.ராஜா மீண்டும் மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். நீதிமன்றம் வழக்கிலிருந்து விடுதலை செய்ததால் வாய்ப்பு தரப்பட்டதாகச் சொன்னாலும், சமீபத்தில் கட்சியில் இணைந்த முன்னாள் அமைச்சர் முத்துசாமியை மாவட்ட அரசியலிலிருந்து அப்புறப்படுத்தும் நோக்கம் பின்னணியில் இருப்பதாகச் சொல்கிறார்கள். ''இல்லையில்லை, நல்ல களப்பணியாளரான முத்துசாமியை மாவட்டத்தில் முடக்காமல், மாநிலம் முழுக்க அவரது சேவையைப் பயன்படுத்தும் விதத்தில் தேர்தல் சமயத்தில் பொறுப்புகள் கொடுக்கப்படும்'' என்கிறார்கள் தி.மு.க. பிரமுகர்கள். (எப்பவும் ராஜாக்களுக்கு மவுசுதான்).

வலைத்தளத்தில் 'நமது எம்.ஜி.ஆர்.'!

தேர்தல் நெருங்கி வருகிறதல்லவா! ஜெயலலிதா சுணக்கம் போக்கிச் சுறுசுறுப்பாகி வருகிறார். பழைய பாலிசி பிரசாரங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு, தகவல் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்த முடிவு செய்துவிட்டாராம். அதற்கு முதல் கட்டமாக, தூங்கி வழிந்துகொண்டிருந்த கட்சிப் பத்திரிகையான 'நமது எம்.ஜி.ஆரை' சுவாரஸ்யமாகப் படிக்கும் வகையில் மாற்றி வலைத்தளத்திலும் ஏற்றிவிட்டிருக்கிறார் ஜெ.



தோழமை

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தை முதலில் திரைமறைவில் தூண்டிவிட்டவர் தயாநிதி மாறன் என்ற சந்தேகம், தி.மு.க. தலைமைக்கு இருப்பதே ராசாவுக்கு ப்ளஸ் பாயிண்ட். சமீபத்தில் ஸ்பெக்ட்ரம் புயல் நாட்டைக் கலக்

இளங்கோவன் தனி ஆவர்த்தனம்!

தி.மு.க. கூட்டணியிலிருந்து காங்கிரஸ் வெளிவர வேண்டுமென்று நீண்டகாலமாகப் போராடி வருகிறார் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன். இந்த நிலையில் ஸ்பெக்ட்ரம் விவகாரம் பரபரப்பைக் கிளப்பியது. 'இனி தி.மு.க.வுடன் கூட்டணியில் இருந்தால் படுதோல்வி' என்று சொல்கிறாராம் இளங்கோவன். ''தேர்தல் சமயத்தில் சூழலைப் பொறுத்து, அவசியமானால் தனி அமைப்பு தொடங்கி, ஜெயலலிதா அல்லது விஜயகாந்துடன் கூட்டு சேர்ந்து தேர்தலைச் சந்திக்கவும் தயங்கமாட்டார்,'' என்று அவருக்கு நெருங்கியவர்கள் சொல்கிறார்கள்.





ஜெயலலிதாவுடன் தற்போது தோழமையுடன் இருக்கும் வலது மற்றும் இடது கம்யூனிஸ்ட் கட்சிகளில், இடது கம்யூனிஸ்ட் கொஞ்சம் ஊசலாட்டத்துடன் இருக்கிறதோ என்று சந்தேகப்படுகிறது அ.தி.மு.க. வலது கம்யூனிஸ்ட் தா.பாண்டியன் போல ஜெயலலிதாவுடன் இடது கம்யூனிஸ்ட் பிரமுகர்கள் நெருக்கமாக இல்லாதது மட்டுமில்ல; மக்கள் பிரச்னைகளுக்காக கலைஞரையும் சந்திக்கிறார்கள். ''கம்யூனிஸ்ட்களும் வரலாம்!'' என்று சமீபத்தில் கலைஞர் பேசியது இடது கம்யூனிஸ்ட் கட்சியை மனத்தில் வைத்துதான் என்கிறார்கள். ''தி.மு.க.வோடு காங்கிரஸ் இருந்தால் தோழர்கள் என்ன செய்வார்கள்?'' என்று கேள்வி எழும் பட்சத்தில் ''மத்தியில்தான் அவர்களை எதிர்க்கிறோம். மாநிலத்தில் எங்கள் நிலைப்பாட்டுக்கு அது பொருந்தாது'' என்பார்களாம். அய்யோடா! தலை சுத்துதே!

மாற்றும் தோழர்கள்?

கியபோது, மாறன் சகோதரர்களின் தினகரன் தினசரி ரொம்பவே அடக்கி வாசித்தது. 'ஊழல்' என்ற வார்த்தையைத் தவிர்த்து, 'முறைகேடுகள்' என்றே போட்டது 'தினகரன்'. ஸ்பெக்ட்ரம் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

– சஞ்சயன்

தடுமாறும் தயாநிதி!



அருண் சரண்யா

தீராத விளையாட்டுப் பிள்ளை

பாகம்-2

13



“சரியாகத்தான் யூகித்திருக்கிறீர்கள். சமர்த்த ராமதாசரைத்தான் குறிப்பிட்டேன்'' என்றார் ராமநாதன். சுவையான வரலாற்றைக் கேட்கத் தயாரானோம்.

''பவானி ஆலயத்துக்கு வந்திருக்கிறோம். அவளை வழிபடுவதில் மட்டுமே ஈடுபட லாமே. வெளியே போனபிறகு சமர்த்த ராம தாசரைப் பற்றி விவரிக்கிறேன்'' என்றார் ராமநாதன்.

மூன்றுவித 'காம்போ' நிவேதனத் தட்டுகள் பரவலாக வாங்கப்பட்டன. ஒன்று- 'சிறிய மண்பானையில் தயிர், அட்சதை, வாழைப்பழம், சர்க்கரை, சிவப்பு ரவிக்கைத் துண்டு' ஆகியவை அடங்கிய தட்டு. இரண்டு வளையல் (பெரும்பாலும் பச்சை நிறம்), மோதிரம், காதணி ஆகியவை அடங்கிய செட். மூன்றாவது - குங்குமம், மஞ்சள் அடங்கிய சிறு ஓலைத் தட்டுகள். அவரவரது சக்தி மற்றும் விருப்பத்தைப் பொறுத்து தட்டுகளை வாங்கிக் கைகளில்

ராம தரிசனத்துக்கு சிபாரிசு...?!

ஏந்தியபடி வரிசையில் வந்தனர்.

நீண்ட காத்திருத்தலுக்குப் பிறகு அன்னை பவானியைத் தரிசிக்கும் பேறு கிடைத்தது.

கருவறையில் அசாதாரண வடிவத்தில் காட்சி தருகிறாள் அன்னை பவானி. எட்டுத் திருக்கரங்கள். ஒவ்வொன்றிலும் ஒரு வகை ஆயுதம். கவசமும் மணிமுடியும் அணிந்த நிலையில் போர்க்கோலம்; கீழே அசுரனின் தலை. அதன்மீது பதிந்திருக்கிறது அம்மனின் வலதுகால். அவளது வலதுபுறம் சிங்க உருவம்; அவளது அன்புக்குரிய வாகனம். இடதுபுறத்தில் ஒரு பெண்மணியின் சிறு உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. அவள் தான் அனுபூதி என்று அடையாளம் காட்டி னார் பூசாரி.

கருவறைக்குச் சற்று முன்னே அமைந்த மண்டபத்தில் சிவபெருமானுக்கு ஒரு தனி சன்னிதி. பவானிசங்கர் என அழைக்கப்படு கிறார். லிங்க உருவத்தின் மீது வெள்ளியில் செய்த சிவபெருமானின் முகம்.

பிராகாரத்தில் மும்மூர்த்திகளின் அம்சங் கள் அடங்கிய தத்தாரேயர் காட்சியளிக் கிறார். சற்றுத் தள்ளி சூலங்களுடன் காட்சி தரும் எமாயி தேவி. லட்சுமி நரசிம்மருக்கும் ஒரு தனி சன்னிதி.

பிராகாரத்தில் லட்சுமி நரசிம்மர், கடோபா ஆகியோருக்கான சன்னிதிகள்.

வெளியில் ஆதிமாயா ஆதிசக்தி ஆலயம் ஒன்றும் காணப்படுகிறது. மார்க்கண்டேய ரிஷிக்கு ஒரு தனி சன்னிதி. ஆலயத்தின் பிராகாரத்தில் சிலர் அங்கப் பிரதட்சிணம் செய்துகொண்டிருந்தனர்.

பிராகார முடிவுப் பகுதியில் உள்ள மரத்தின் கீழ் சுமார் இருபது பெண்கள் பஜனை செய்து கொண்டிருந்தனர். அவர் களின் குரலில் இனிமைக் குறைவாக இருந் தாலும் பக்திபாவம் அதை ஈடுகட்டிக் கொண்டிருந்தது. பொதுவாகவே உள்ளூர் பெண்மணிகள் நெற்றி நிறைய மஞ்சள் பூசி பெரிய அளவில் குங்குமம் வைத்திருந்தார் கள்.

கோவிலின் பின்புறம் ஒரு வாசல். அதை சத்ரபதி சிவாஜி நுழைவாயில் என்றே அழைக்கிறார்கள். இதன் வழியாகத்தான் சிவாஜி பெரும்பாலும் ஆலயத்துக்குள் நுழைவாராம்.

ஆலய தரிசனம் முடிந்து வெளியே கிளம்பத் தொடங்கினோம். அப்போது ஜருகண்டி ஒரு கேள்வியை வீசினான். ''இந்தக் கோயிலுக்கு வருபவர்கள் எல்லோ ரும் தவறாமல் ஒன்றைச் செய்கிறார்கள், அது என்ன சொல்லுங்கள் பார்க்கலாம்?''

அம்மனைத் தரிசிக்கிறார்கள் என்று பொதுவான பதிலைக் கூறப் போகிறானா? அல்லது ஏதாவது புதிய சம்பிரதாயத்தை இவன் மட்டும் கவனித்துவிட்டானா?

அதற்குமேல் யோசிக்க விடாமல் அவனே பதிலைக் கூறிவிட்டான். ''எல் லோரும் இந்தப் படிகளில் கொஞ்ச நேரம் உட்கார்ந்துவிட்டுப் போகிறார்கள்'' என்றான். பேருந்து நிலையத்திலிருந்து நடந்தது, அதிக நேரம் வரிசையில் நின்றது என்றானதில் அனைவருக்குமே சிறிது நேரம் உட்காரலாம் என்ற யோசனை பிடித்துப் போனது.

உட்கார்ந்தோம். மூன்று நிமிடங்கள்தான் ஆகியிருக்கும். ''களைப்பு ஓரளவாவது தீர்ந் ததா?'' என்று ராமநாதனை அக்கறையுடன் விசாரித்தான் ஜருகண்டி.

"சமர்த்த ராமதாசரின் கதை வேணும்னு நேரடியாகவே கேளேன்" என்று சிரித்தார் ராமநாதன். தொடங்கியது வீர சிவாஜியின் வணக்கத்துக்குரிய குருவின் சரிதம்.

சூர்யாஜி என்ற பண்டிதர் சிறந்த ராம பக்தர். ஒருநாள் அவரது கனவில் சூரிய பகவான் காட்சி தந்தார். 'உனக்கு இரண்டு பிள்ளைகள் பிறப்பார்கள். பெரியவன் எனது அம்சத்தையும், இரண்டாமவன் ஆஞ்சநேயர் அம்சத்தையும் கொண்டிருப்பார்கள்'என்றார்.

ஏதோ கனவு என்று இதை ஒதுக்க முடியவில்லை பண்டிதரால். அதை உடனே தன் மனைவி ராணுபாயிடம் பகிர்ந்து கொண்டார். அந்தப் பெண்மணியும் ஒரு சிறந்த ராம பக்தைதான். 'சூரிய வம்சத்தில் பிறந்தவர் ராமர். ராமரின் தலைசிறந்த சீடன் அனுமன். ஆக ராமர் தன் இன்னருளைத் தங்களுக்கு அளிக்கப் போவதற்கான அறிகுறியே அந்தக் கனவு' என்று கருதி மகிழ்ந்தார்.



காலம் கடந்தது, கனிந்தது. அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். கங்காதரன் என்று அவனுக்குப் பெயரிட்டனர்.

இரண்டாவது மகன் பிறந்தபோது அனைவருக்கும் வியப்பு! அந்தக் குழந்தையின் பின்புறம் சிறு வால் ஒன்று காணப்பட்டது. முதலில் அதிர்ச்சி அடைந்தாலும் பண்டிதருக்கு, தான் கண்ட கனவு நினைவுக்கு வந்தது. 'ஓ, இவன் அனுமனின் அம்சம்.' இரண்டாவது மகனுக்கு நாராயணன் என்று பெயரிட்டனர்.

நாராயணன் மிகவும் விஷமக்காரனாக இருந்தான்.

வருடங்கள் சென்றன. முதல் மகன் கங்காதரனுக்குத் திருமணம் நடந்தது. நாராயணனுக்குக் கல்வி நன்றாக வந்தது. ஆனால் போதிய அளவு கற்று முடித்ததும் வேறெதிலும் ஆர்வமின்றி இருந்தான். ஏட்டறிவு இருந்தது, உலக அறிவு கிடைக்கப் பெறவில்லை. அவனுடைய அம்மா அவனிடம் 'ஏதாவதொரு தொழில் செய்ய வேண்டாமா? படித்துவிட்டால் போதுமா?' என்று கூறினாள்.

நாராயணனுக்குக் குழப்பம் வந்தது. தொழில் செய்வது என்றால் என்ன? யோசித்தபடி நடந்தான்.

ஓரிடத்தில் நெல் மூட்டையை அடுக்கிவிருந்தார்கள். ஒவ்வொரு மூட்டையும் மிகவும் எடை கொண்டதாக இருந்தது. நான்கு நான்கு பேராகச் சேர்ந்து வயல் ஓரத்திலிருந்து ஒவ்வொரு மூட்டையாகத் தூக்கி அந்தப் பகுதியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தனர்.

'ஓ, இதுதான் தொழிலோ? சரி அம்மா விருப்பப்படி நாமும் தொழில் செய்யத் தொடங்குவோம்' என்ற முடிவுக்கு வந்தான் நாராயணன்.

ஒரு நெல் மூட்டையை அனாயாசமாகத் தூக்கிக்கொண்டு தன் வீட்டை நோக்கி நடந்தான். தன் வீட்டு வாசலில் இருந்த திண்ணையில் அதை வைத்தான். 'அம்மா நீ சொன்னபடியே நான் தொழில் செய்யத் தொடங்கிவிட்டேன்' என்றான்.

ராணுபாய்க்கு விளங்கவில்லை. விளக்கம் கேட்க நினைத்தாள். அதற்குள் அந்த மூட்டையின் உரிமையாளர் அங்கே வந்தான். 'என்னுடைய மூட்டையை உங்கள் மகன் தூக்கிக் கொண்டு வந்துவிட்டான்' என்றான். அப்படிக் கூறியபோதே அவன் மனத்தில் ஆச்சர்யம் அலைமோதிக் கொண்டிருந்தது.

மூட்டையைத் தூக்கிக் கொண்டு இந்த நாராயண னால் எப்படி அவ்வளவு வேகமாக நடக்க முடிந்தது? தான் கிட்டத்தட்ட ஓடி அல்லவா அவனைப் பின் தொடரும்படி ஆனது!

ராணுபாய் தன் மகன் அப்பாவி என்பதை விளக்கி, அவனிடம் மன்னிப்பு கேட்டாள். இதில் திருப்தி அடைந்த அவன் அங்கு சென்று கொண்டிருந்த சிலரை உதவிக்குக் கூப்பிட்டு அந்த மூட்டையை எடுத்துச் செல்ல வைத்தான். போகும்போது 'அம்மா உங்கள் மகன் மிகவும் பல சாலி. அவன் ஒருவனாகவே இந்த மூட்டையைத் தூக்கிக் கொண்டு வெகுவேகமாக நடந்திருக்கிறான்' என்றான்.

ராணுபாய்க்கு பெருமை யாக இருந்தது. வீட்டுக்குள் செல்லத் திரும்பினாள். வியப்பு. வீட்டுத் திண்ணையில் இன்னொரு மிகப் பெரிய நெல் மூட்டை இருந்தது!

ஆக நாராயணன் வாழ்வில் அற்புதங்கள் நடக்கத் தொடங்கிவிட்டன.

நாளடைவில் நாராயணனுக்குத் திருமணப் பேச்சு தொடங்கியது. 'எனக்கு எதற்குத் திருமணம்? அண்ணனுக்குதான் திருமணம் செய்துவிட்டீர்களே, அது போதாதா?' என்றான்.

அனைவரும் சிரித்தனர். ஒரு பெண்ணை அவனுக்கு நிச்சயித்தனர். திருமணத்துக்கு நாள் குறித்தனர். அந்த நாளும் வந்தது. மணவறையில் அமர்ந்தான் நாராயணன். அப்போது 'விழிப்புடன் இரு' என்று ஒரு தெய்விகக் குரல் அறிவுரை கூறுவதுபோல் தோன்றியது நாராயணனுக்கு. சட்டென எழுந்தான். 'வேறு உடை மாற்றிக் கொண்டு வருகிறேன்' என்று கூறி அங்கிருந்து கிளம்பினான். தமது திசையை மாற்றிக் கொண்டான். நடக்கத் தொடங்கினான்.

ராமபிரானைத் தரிசிக்க வேண்டும் எனும் எண்ணம் அவன் மனத்தில் ஆழமாக எழுந்தது. தவத்தின் மூலமாகத்தானே தரிசனம் சாத்தியம்? அருகில் இருந்த காட்டுக்குள் நுழைந்தான்; தவம் புரியத் தொடங்கினான். இடையே கடும்பசி எடுக்கும்போது மட்டும் மரங்களில் தொங்கிய கனிகளை உண்டான். மற்றபடி ராம தியானம் மட்டுமே அவனது செயல்பாடாக இருந்தது.



ராமபிரான் வருவதாகத் தெரியவில்லை. 'ராம தரிசனம் கிடைக்க வேண்டும் என்றால் யாராவது என்னை அவருக்கு சிபாரிசு செய்ய வேண்டுமோ?' உடனே அவனுக்கு அனுமனின் நினைவு வந்தது.



அபங்க அமுதம்

காதலா துகாள,
தேதீ ஆலியாஸிதான
ஸந்த உதார உதார, பரலே
அனந்த பாண்டார
மாகத்யாசீ புரே, தணீ
ஆணிகாஸீ உரே
துகாம்ஹணே போதே,
தேவே பரிலே நவ்ஹே ரிதே
- பக்த துகாராம்

"விட்டலனின் பக்தமகான்களான ஸந்த்துக்கள் கடை வைத்திருக்கிறார்கள். வருபவருக்கெல்லாம் பேதமின்றி ஆன்மிக விஷயங்களை வாரி வழங்குகின்றனர். அவர்களது கிடங்கு பெரியதாக உள்ளது. அது நிரம்பி வழிகிறது. கேட்பவர்க்கெல்லாம் வாரி வழங்கியும் மற்றவர்களுக்கும் ஏராளமாக மிச்சம் இருக்கிறது."

பளிச் பரிகாரம்

கே.என்.ஆகாஷ், காரைக்குடி

மச்சங்களுக்கும் அதிர்ஷ்டத்துக்கும் தொடர்பு உண்டா?

"சாமுத்திரிகா லட்சணம் நூலில் உடலின் எந்தப் பாகத்தில் மச்சம் இருந்தால் என்ன பலன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாத்ஸாயனா தமது காமசூத்ராவில் மச்சங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார். பொதுவாக அதிர்ஷ்டசாலிகளை நாம் மச்சக்காரன் என்று பேச்சு வழக்கில் சொல்கிறோம். ஒரு சிலருக்கு யோக தசைகள் ஆரம்பிக்கும்போது உள்ளங் கையில் மச்சம் தோன்றும். அந்தத் தசை முடிந்ததும் அது மறைந்து விடும். மச்சம் என்பது ஒருவரின் அந்தரங்க விஷயம் என்பதால் அதைக் கொண்டு எதிர்கால பலன் சொல்வது நடைமுறையில் சாத்தியமில்லை. மச்சத்துக்கும் அதிர்ஷ்டத்துக்கும் தொடர்பு உண்டு."

சுந்தர், சென்னை - 7

சிவனை வழிபடாமல் நவக்கிரகங்களை வழிபடக் கூடாது என்கிறார்களே உண்மையா?

"ஆமாம். சிவ வழிபாட்டின் ஒரு அங்கம் தான் நவக்கிரக வழிபாடு. சிவன் கோயிலில் ஒரு சன்னிதிதான் நவக்கிரக சன்னிதி. நவக்கிரகத்துக்கென தனிக் கோயிலும் கிடையாது. தனி வழிபாடும் செய்யக் கூடாது. எமதர்ம ராஜா வழிபட்ட சிவன் கோயில்களில்



மட்டும் நவக்கிரக சன்னிதி இருக்காது. பிற சிவன் கோயில்கள் அனைத்திலும் நவக்கிரக சன்னிதி உண்டு."

லக்ஷ்மி, ஸ்ரீரங்கம்

என் மகன் பிறந்த தேதி 2.11.1982. ஜாதகம் இணைத்துள்ளேன். என் கணவர் இறந்த பிறகு அவர் விட்டுச் சென்ற சிறிய பெட்டிக் கடையை அவன் நடத்துகிறான். வேறு நல்ல வேலை கிடைக்குமா? திருமணம் எப்பொழுது நடக்கும்?

"உங்கள் மகனுக்கு 2011ல் திருமணம் நடக்கும். வரப்போகும் மருமகளுக்குத் திருவாதிரை அல்லது சுவாதி நட்சத்திரம். தொழிலை விரிவு படுத்தி மேலும் சிறப்பாக நடத்தலாம். உத்தி யோகத்துக்கான வாய்ப்புகள் சற்று குறைவாகவே உள்ளது."

மச்சத்திற்கு மகிமை உண்டு!



ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்

உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க..
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

லோக வாஸனை!

அருள்வாக்கு



லோக வாசனைகளில் நன்றாகத் தடிப்பேற்றிக்கொண்டு ஒழுங்கு கெட்டுப்போன நாம் முதலில் லோக கார்யங்களை ஒழுங்காகச் செய்து அந்தத் தடிப்பைத் தேய்த்துத் தேய்த்துக் கரைத்துவிட்டு அப்புறந்தான் லோகத்தைவிட்ட ஆத்மாவுக்குப் போக வேண்டும். அதாவது, முதலில் தர்ம மார்க்கத்தில் போய், அப்புறம்தான் ப்ரஹ்மத்துக்கு முயல வேண்டும். தர்மம் என்பது ஸத்கர்மம் வழியாகவே ஆற்றப்படுவது. அதனால்தான் இன்னாருக்கு இன்ன கர்மம் என்று பக்வம் பார்த்து, அதிகார பேதம் பார்த்துப் பிரித்துக் கொடுத்திருக்கும்போது அப்படிப்பட்ட கர்மத்தையே அவரவருக்கும் ஸ்வகர்மம் என்று சொல்லாமல் ஸ்வதர்மம் என்று சொல்லியிருப்பது.

வ்யாதி போன பிற்பாடுதான் விருந்து சாப்பிட முடியும். ஆத்மானந்தமாகிய அம்ருத போஜனம் பண்ணணுமென்றால் முதலில் கர்ம வ்யாதியையும் மனோ வ்யாதியையும் போக்கிக் கொள்ள வேண்டும். (மனோ வ்யாதி என்றால் மனஸுக்கு ஏற்படும் க்லேசம், ப்ரமை போன்ற வ்யாதியைச் சொல்லவில்லை. மனஸே ஒரு வ்யாதியாக ஆத்மாவிலே தோன்றியிருப்பதைத்தான் சொல்கிறேன்.)

மனஸின் உயர்ந்த பண்புகளோடு கலந்து சரீரத்தின் வேலைகளை அதிகமாகக் கொண்டிருக்கும் தர்ம கர்மாக்கள் மூலமும், சரீரத்தின் வேலைகள் குறைவாகவும் மனஸின் உத்தம குணங்களே அதிகமாக இருக்கும் பக்தி உபாஸனையினாலும் கர்ம வ்யாதி, மனோ வ்யாதிகளைப் போக்கிக் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் சரீர ப்ரஜ்ஞை மிகவும் அதிகமாதலால் கர்மாவுக்கு முக்யத்வம். அப்புறம் பக்திக்கு முக்யத்வம். அப்புறம்தான் ஆத்ம விசாரமே முக்யமாகிற நிலைக்குப் போவது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

காதல் + கலாட்டா + கலக்கல் தொடர்கதை



ஒளி கவிகரித்துக்கொண்ட
உன் முத்தங்கள்தாம்
விண்மீன்களாயின
சிறகு முளைத்த முத்தங்களில்
தேவதைகள் தரிசனம் தந்தனர்
முத்தங்களைத் திருடி கூடுகட்டி
தேனீக்களாய் பரிணமித்தன குளவிகள்
முத்தங்கள் எட்டாது தலைசுளுக்கவே
நரிகள் சொல்லின
அந்த முத்தம் புளிக்கும்
உன் முத்தங்களின் ஆழத்தில்
முத்தம் குடித்து முத்தம் குடித்து
முத்தமானேன் நான்

-கதிர்பாரதி

வயோதிகத்தின் நிழல் படிந்த வேதனை உடலின் பரப்பெங்கும் வெளிப்பட அந்தப் பெரிய கழுகு சிரமத்துடன் பறந்து கொண்டிருந்தது. 'காற்று வெளியிடை' சிறகுகளுக்குத் தோழமையாக இருந்த காலம் காலாவதியாகிவிட்டது போலும். அது தளர்வோடு பறந்தது. உயர உயரமாய் ஓங்கி வளர்ந்திருந்த மலைகளின் இடையிலிருந்த வான் பாதையைக் கவனமுடன் தேர்ந்து பறந்து, ஒரு செங்குத்தான உச்சிப்பாறையில் அமர்ந்தது. மின்சாரம் வடிந்துபோன அதன் கண்கள் ஒரு தியானத்துக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்வதுபோல் நிச்சலனமாய் இருந்தன.



வே.எழிலரசு

10

சட்டென்று தமது நீண்டு வளைந்து தொங்கிய அலகை, தான் அமர்ந்திருந்த பாறை மீது மோதியது. மீண்டும் மோதியது. வலியை உச்சாடனம் செய்வது போல் மீண்டும் மீண்டும் மோதியது. அலகில் ரத்தம் வழிய, உபாதையில் கழுத்து துடிக்க, ஆனாலும் விடாமல் மோதியது. இத்தனை நாளாகத் தமது உடலின் அங்கமாக இருந்த அலகை, தம்மிடமிருந்து பிய்த்து எறிந்துவிட வேண்டுமென்ற வெறியுடன் மோதியது. திரையில் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த ஆனந்த் அதிர்ச்சியோடு நிமிர்ந்து உதயகுமாரைப் பார்த்தான்.

''இன்னும் படம் முடியல பாரு.''

உதயகுமார் சொல்வதற்கு முன்னாலேயே ஆனந்தின் கண்கள் திரையில் படிந்துவிட்டிருந்தன.

இப்பொழுது கேமரா, கழுகை மட்டும் காட்டாமல், கழுகு, கழுகு அமர்ந்திருந்த பாறை, பாறை பொருந்தியிருந்த மலை, மலையைக் கோத்துப் பிணைந்திருந்த மலைத்தொடர், மலைத்தொடருக்குக் கரங்கள் விரித்திருக்கும் வானம்- வானத்தைப் புன்னகைத்துக் கொண்டிருந்த வனம்... என சூழல் பின்னணி முழுமையையும் காட்டியது. கழுகு தமது அலகைப் பாறையில் மோதுவதும், பின்னணியில் வெயில் காயும், மழை பொழியும் பொழுதுகளுமென காலங்களின் மாறுதல்கள் DISSOLVE காட்சிகளாயின. மழை, வெயில், பனி, உதயங்கள், அஸ்தமனங்கள் என சூப்பர் இம்போஸ் காட்சிகள். உருண்டோடும் காலத்தைப் பார்வையாளனுக்கு உணர்த்திவிட்ட கேமரா, இப்பொழுது கழுகின் மீது மட்டும் காட்சியைக் குவிக்கிறது. கழுகின் பழைய சக்தி இழந்த அலகு உதிர்ந்து புதிய அலகு முளைத்துவிட்டிருக்கிறது.

வீரியம் பூரித்த தமது புதிய அலகினால் கழுகு இப்பொழுது தமது சிறகுகளைப் பிய்த்து எறிகிறது. தனது கிழட்டு நகங்களையும் பிய்த்து எறிகிறது. நகங்களும் சிறகுகளும் அற்ற அந்தப் பறவை, தான் அமர்ந்திருந்த பாறை மீது தம் உடலை ஒடுக்கி மோனநிலையில் வானத்தைப் பார்த்தபடி காலத்தை அடைகாக்கிறது.

மீண்டும் பின்னணி காட்சிகள், கால மாறுதல்கள். இப்பொழுது கழுகு புதிய நகங்களும் புதிய சிறகுகளும் முளைத்த புதிய பறவையாகிறது.

சக்தி புதிது. எனவே வானம் புதிது, காற்று புதிது என்பதான உற்சாக உந்துதலோடு, அது பாறையை விட்டு மேலெழும்ப காற்று வந்தனத்தோடு அதற்கு வழிவிட்டது. கழுகு தமது வேட்டைக்கான பயணத்தைத் தொடர... காட்சி முடிந்தது.

ஆனந்த் ஒரு புதிய காட்சி அனுபவத்தைக் கண்டடைந்த திருப்தியோடு உதயகுமாரைப்

காதல் கேம்பஸ்

பார்க்க, தம் உள்ளங்கையில் விரிந்திருந்த திரையை அணைத்துவிட்டு உதயகுமார் சொன்னான்:

''ஆனந்த் ஒரு கழுகோட ஆயுள் எழுபது வருஷம் - ஆனா அது தம்மோட நாற்பதாவது வயசுல இப்ப நீ ஆரம்பத்துல பார்த்த காட்சி மாதிரி கிழட்டுத்தனமா ஆயிடும்.''

ஆனந்த் கழுகின் தளர்ந்தொடுங்கிய பறத்தலை நினைத்துப் பார்த்தான்.

''அப்படியே இருந்தா அது தன்னோட இரையை வேட்டையாடக்கூட முடியாம, பறக்க முடியாம செத்துப் போயிடும். ஆனா கழுகு மரணத்தை எதிர்த்துப் போராடுது. தம் இருப்புக்கு சவால் விடும் தம்மோட அங்கங்களை உதிர்த்துட்டு காத்து இருக்குது. சிறகுகளும் நகங்களும் புதுசா மொளைக்கிறதுக்குக் காத்து இருக்குது. இந்த ப்ராசஸிங் ஆறு மாசம் நடக்கும். தம்மோட எஞ்சிய முப்பது வருஷ ஆயுளைக் கம்பீரமா வாழறதுக்காக இந்த ஆறு மாச சுயவதை.''

ஆனந்துக்குப் புரிந்துவிட்டது. உதயகுமார் சுற்றி வளைத்து எங்கு வருகிறான் என்பதை சந்தேகமில்லாமல் உணர முடிந்தது. ''எங்க அம்மாவைப் பிரிஞ்சு என்னால எங்கேயும் வரமுடியாது. அம்மாவைப் பிரிஞ்சு இருக்கிறது எனக்குச் சித்திரவதை''-ன்னு சொன்னதுக்காகத்தான் உதயகுமார் இப்போது இந்த கிளிப்பிங்க காட்டறான். நேத்து ஃபாதர் நவமணி ஆபிரகாம் இவனை அழைச்சுட்டு வந்து அறிமுகப்படுத்தினப்போ... ''நீ சென்னைக்கு வந்துடறியா... அங்க நான் காலேஜ்ல உன்னைச் சேத்து விடறன்''-னு, சொன்னப்ப, நானும் ஆர்வமா தலையாட்டிட்டேன்.

ஆனா நேத்து ராத்திரி கண்ணுமேல தூக்கம் வந்து உக்காரவே இல்லியே. நாள் முழுக்க உக்காராம நடக்கறது அல்லது நிக்கறது... படிகள்ல ஏறுறது... வாய்வலிக்க பேசறது... இருந்தாலும் சந்தோஷமாதான் இந்த 'கெய்டு' வேலைய செய்யறேன்... தினம் தினம் அதே குமரி முனை, அதே வள்ளுவர் சிலை, அதே விவேகானந்தர் மண்டபம், அதே பகவதி அம்மன் கோயில், சுசீந்தரம், திருவட்டாறு, திற்பரப்பு, தொட்டி பாலம்-ன்னு சுத்தன இடங்கள்லயதான் சுத்தறன்.

ஆனா புதுப்புது மனிதர்கள். எல்லோரும் ஃபாதருக்குத் தெரிஞ்சவங்க, அவுங்க சபையில இருக்குற கன்னியாஸ்திரிகள், துறவிகள்-னு நிறைய பேரு வர்றாங்க. அவுங்களையெல்லாம் சுவாரஸ்யமா வெச்சுக்கணும்னு நிறைய புதுப் புது விஷயங்களைச் சொல்றேன். உலகத்துல இருக்கிற எல்லா மதங்களையும் பத்தி ஆழமா படிக்கற அவங்களுக்கே சொல்றதுக்கு என்கிட்ட புது விஷயங்கள் இருக்கு... இந்த நெனப்பு தர்ற சந்தோஷத்துலதானே... படுத்ததும் தூக்கம் வந்துடுது. ஆனா நேத்து மட்டும் ஏன் தூக்கம் வரலை. இத்தனைக்கும் நேத்து என் வாழ்க்கையில இன்னொரு கதவு திறக்கிற மாதிரி வாய்ப்பு.

அப்பா முதமுதல்ல அண்ணனைக் கடலுக்கு அழைச்சிட்டு போனப்ப அம்மா சொன்னாங்களே... 'படிக்கற புள்ளைய உன் தொழில்ல இறக்கிவிடாதய்யா... அவன் மெட்ராஸுக்குப் போய் பெரிய படிப்பெல்லாம் படிக்கணும்-னு நான் கனவு கண்டுக்கினு இருக்கேன்...'

ஐந்து வயதுச் சிறுவனாக இருந்தபோது நிகழ்ந்த அந்தக் காட்சி இப்பொழுதும் ஆனந்துக்கு அப்படியே ஆழ்மனச் சித்திரமாக



சகஜம்தானே பாஸ்?

கஞ்சா கருப்புவிடம் ஒரு கேள்வி:

எப்படிப் போகிறது உங்கள் குடும்ப வாழ்க்கை. மனைவியிடம் அடி வாங்குவதுண்டா?

அடியும் உண்டு. இடியும் உண்டு. குடும்பம்னு இருந்தா இதெல்லாம் சகஜம்தானே பாஸ்! வம்பிலே மாட்டிவிட பார்க்கிறீகளே இது நியாயமா அப்ப! ம்... நடத்துங்க...

- விஜய் கோபால்

இருந்தது.

ஆனந்தின் அண்ணன் பத்து வயதே நிரம்பிய சிங்காரவேலன் சொன்னான்: ''அம்மா, அப்பா என்னை மீன் பிடிக்கக் கூட்டிட்டு போகலைம்மா.''

''பின்ன எதுக்குடா ராசா அப்பாகூட கடலுக்குப் போற?''

''அம்மா, கரையில நின்னு பார்த்தாலே நெலா இம்புட்டு அழகா இருக்குதே... கடலுக்குள்ளாற போயி நெலாவைக் கிட்டத்துல பார்த்தா எம்புட்டு அழகா இருக்கும்...''

''அப்படியா ராசா...''

அம்மா முழந்தாளிட்டு அமர்ந்து அண்ணன் முகத்தைத் தாங்கிப் பிடித்திருந்தாள்.

''ஆமாம்மா... இன்னிக்குப் பௌர்ணமி இல்ல?''

''ஆமா.''

''கடலுக்குள்ளாற போயி நின்னா... நெலாவுல இருந்து அப்படியே மியூசிக் வரும்மா...''

''ஆங்...''

அம்மா மூக்கின் மேல் விரலை வைத்தாள்.

''அந்த மியூசிக்கைக் கேட்டு கடல்ல இருக்குற எல்லா மீனும் தண்ணிக்கு மேல வந்து டான்ஸ் ஆடும்மா...''

''உனக்கு இதெல்லாம் யாரு சொன்னா?''

அண்ணன், அப்பாவைக் காட்டினான்.

அம்மா நிமிர்ந்து அப்பாவைப் பார்த்தாள்.

ஆனந்துக்கு குஷியாக இருந்தது.

இப்பொழுது அம்மா, அப்பாவைத் திட்டப் போகிறாள். அப்பா பதிலுக்கு அம்மாவை முத்தமிடப் போகிறார்.

எப்பொழுதும் அப்படித்தான். அம்மா அப்பாவைத் திட்டும்பொழுதெல்லாம் அப்பா, அம்மாவின் கன்னத்தில் முத்தமிடுவார். அப்பாவிடம் முத்தம் பெறுவதற்காகவே அம்மா, அப்பாவைத் திட்டுகிறாளோ என்று ஆனந்துக்குத் தோன்றும்.



"அப்பா, குனிந்து என்னை முத்தமிட்டார். அதுதான் அப்பா எனக்குத் தந்த கடைசி முத்தம்"

அப்பொழுது அம்மா அப்பாவைப் பார்த்துச் சொன்னாள்:

''ஏன்யா... பேசிப் பேசித்தான் என்னைக் கவுத்த... இப்ப புள்ளைங்கள...''

''ஏய் இல்லடி...''

''நீ பேசாத. எனக்குத் தெரியும் உன்னைப் படைச்சவன் உனக்குக் கையில மட்டுமா வலைய குடுத்தான்? வாய்லயும் ஒரு வலைய வெச்சுட்டான்ல்ல...''

''இல்லடி சத்தியமாத்தான் சொல்றன். இவன் சொல்றதெல்லாம் எனக்கே புதுசா இருக்குடி.''

அம்மா, அண்ணனையே உற்றுப் பார்த்தாள். அண்ணனைக் கட்டி அணைத்தாள். ''எல்லாம் என் புள்ளையோட பேராசைய்யா. நீ வேணா பாரு அவன் பெரிய அறிவாளியா ஆவான்...''

அண்ணனின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அதுதான் அம்மா அண்ணனுக்குக் கொடுத்த கடைசி முத்தம்.

அண்ணனுக்குக் கிடைத்த முத்தப் பரிசைக் கண்டு பொறாமை கொண்டு ''அம்மா எனக்கு'' என்று கன்னத்தைக் காட்டினேன்.

அப்பா குனிந்து என்னை முத்தமிட்டார். அதுதான் அப்பா எனக்குத் தந்த கடைசி முத்தம்.

அம்மாவைப் பிரிந்து தனியே சென்னைக்குச் செல்ல வேண்டும் என்ற நினைப்பில் நேற்று இரவு முழுதும் தூக்கம் வரவில்லை. அதனால்தான் உதயகுமாரிடம் நான் சென்னைக்கு வரவில்லை என்று சொல்ல, உதயகுமார் எனக்குத் தன்னம்பிக்கைக் குறைபாடு என்று தப்பர்த்தம் செய்து கொண்டு 'கழுகு' படம் காட்டுகிறான்.

அவனுக்கு எப்படிச் சொல்வது? அந்த முழுநிலா இரவு விட்டுவிட்டுப் போன இருட்டைப்பற்றி!

(தொடரும்)

சொல்லும் செயலும் அவரே

இல்லம் வந்த இறைவன்!

"சாயிபாபாவை நான் முதல் முதல் தரிசனம் செய்தது 1970ல் மஹா சிவராத்திரி தினத்தன்று. அதுவும் என் மனைவிக்குத் துணையாகத்தான். எந்த ஒரு involvementம் இல்லாமல் சென்றிருந்தேன். ஆனால், அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் அமைதியுடன், கட்டுப்பாட்டுடன் அவர் முன் அமர்ந்திருந்தனர். மனிதாபிமான சேவைகளுக்கு அவர் கொடுத்த முழு மையான அர்ப்பணிப்பு என்னை முதல் தரிசனத்திலேயே ஈர்த்துவிட்டது.

கோவை வந்திருந்த சத்ய சாயிபாபாவிடம் சமிதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தி ஏழை எளியவர்களுக்குச் சிகிச்சைகள் தரலாம் என்று கேட்டோம். மருத்துவர்களையெல்லாம் சேர்த்துக்கொண்டால் பாதியில் நேரமில்லை என ஒதுங்கிவிடுவார்கள் என்று கூறினார்கள். நானே மருத்துவ முகாம் நடத்த ஒரு chart தயார் செய்து பாபாவிடம் சென்றேன். நான் அமர்ந்திருந்த இடத்துக்கே பாபா வந்தார். என்னிடம் சார்ட்டை வாங்கிப் பார்த்து என்னை ஆசீர்வதித்தார். அன்றுமுதல் இதுவரை பாபாவின் ஆசியால் மாநிலம் முழுவதும் 400 சத்ய சாயி நல மருத்துவ மையங்களை நிறுவி உள்ளோம். ஒரு லட்சத்து 59 ஆயிரம் பேருக்கு இலவச கண் சிகிச்சை. 10 லட்சத்துக்கும் அதிகமான பேருக்கு மருத்துவ முகாம்கள். ஏழை மாணவர்களுக்கு ஆயிரக்கணக்கானோருக்குப் படிப்புக்கான உதவிகள். ஆயிரக்கணக்கான ஏழை எளியவர்களுக்கு புட்டபர்த்தி பல்நோக்கு மருத்துவ மையத்தில், உயர்தரமான அறுவை சிகிச்சைகளுக்கு ஏற்பாடு செய்வது என 40 வருடங்களாகச் செய்கிறோம். எங்கள் மூலம் பகவான் இதைச் செய்கிறார். பகவானின் பிள்ளைகள் பயன் பெறுகிறார்கள். இதில் எங்கள் பங்கு ஏதுமில்லை" என்கிறார்கள்... டாக்டர் புன்னைவனம் சரஸ்வதி தம்பதியினர்.



"1986ல் எனது பணிக்குப் பரிசாக இறைவன் இல்லம் வந்து உணவு அருந்தினார். ஊர் மக்களுக்குக் காட்சி தந்து எனது இல்லத்தில் அருளாசி வழங்கினார். இதைவிட எங்களுக்கு வேறு என்ன பேறு வேண்டும்?" என்கின்றனர் இந்தத் தம்பதியினர்.



பகவானுடன்...
டாக்டர் புன்னைவனம் சரஸ்வதி தம்பதியினர்

■ ஆர்.பாலா

''ரம்யா, நாம ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கலாமா?''

''அடப்பாவி... இருந்த ஒத்தை பைக்கையும் வித்துட்டியா!''

- வீ. விஷ்ணுகுமார்

''ஒரு மாதம் கழித்து உன்னைப் பார்க்க வந்த என்னைப் பார்த்ததும், எழுந்து ஓடி வராமல் மெதுவா வர்றியே?''

''உங்களைப் பார்த்த சந்தோஷத்தில் 'ஸ்லோமோஷன்'ல வர்றேங்க.''

-காயல் ஹாஜா



''நாயா திரிஞ்சீங்க, மாடா உழைச்சீங்க, குடும்ப பாரத்த கழுதையா சுமந்தீங்க, எறும்பா தேஞ்சீங்க, இப்படிக் குரங்கு புத்தியோட இருக்கீங்களே!''

''ஏண்டி! தெரியாமத்தான் கேட்கிறேன்... எப்போ என்னை மனுஷனா பார்க்கப்போற!''

- எம்.எஸ்.மயில்



மனுஷனா பாருடி..!

I LOVE You!

கவிதை கஃபே



காதல் அகராதி

அழகு

உன் பலம்
என் பலவீனம்

நீ உதிர்த்த வார்த்தைகள்

எனக்கு வாக்குமூலம்
உனக்கு
சமுத்திரத்தின் மீதெழுதிய சாசனம்

உன் சிரிப்பு

என்னிடமிருந்து
பறிக்கப்பட்டது

என் அழுகை

சிரிப்புக்கு
நீ தந்த கைம்மாறு!

வெட்கம்

உன்னிடம்
இயல்பாய்
இருந்த நடிப்பு

மௌனம்

என்
உயிர் பருக
நீ செய்த ஆயுதம்

- ஆதலையூர். சூரியகுமார்

I LOVE You! I LOVE You! I LOVE You!



எப்படிச் சொல்ல நான்...

பிரிவு

தொலைதூரப் பயணத்தைத்
தோளில் சுமந்து கொண்டு
இறுதியாக என்னிடம்
என்ன வேண்டுமென்கிறாய்?
நீ தான் வேண்டுமென
எப்படிச் சொல்ல நான்?

- ம.கணேசன்

காணக்கிடைக்காதது

மணக்கோலத்திலிருந்த
சித்தப்பா சித்திக்கு
நடுவிலிருந்த
தமது படத்தைப் பார்த்து
வேகவேகமாக
ஆல்பத்தைப் புரட்டியது
குழந்தை.
அதேமாதிரியாக
அம்மா அப்பாவுடன்
இருக்கும் தமது படத்தைத் தேடி.

- விஜயலட்சுமி

'கவிதை கஃபே' பகுதியில் இடம்பெறும் கவிதைகளுக்கு சன்மானம் உண்டு.

அனுபவங்களைச் சொல்ல
அனுமதி மறுக்கப்பட்ட
நாளிலிருந்து
என்னால் இயலவில்லை
கவிதையேதும் எழுத.

- எஸ்.ஓ.வீரன்

அனுகூலம்

ஆறேழு பேர் நிறைந்த
சந்திப்பொன்றில்
அதைப் பற்றி
நீயும் பேசவில்லை
நானும் கேட்கவில்லை

இருவர் மட்டுமே
அறிந்த விஷயமென்று
இருப்பதில் உண்டு
இப்படி ஓர் அனுகூலம்.

- செல்வராஜ் ஜெகதீசன்

வாசகர்களே!

உங்க க்யூட் கவிதைகளைச் சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்னு குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

நீங்கள் பகுதி நேர பக்தர்களா?



ஒருதடவை பிரசாந்தி சேவைக்குப் புட்டபர்த்திக்குச் சென்றபோது ஆஸ்பத்திரியின் உணவு விடுதி ஒன்றில் சேவை செய்யும் பாக்கியம் கிடைத்தது. நான் ஆர்.எச்.உணவகத்தில் காசாளராகப் பணியாற்றினேன். பவானி என்ற பெரிய பாத்திரங்களில் சாதம் வரவழைக்கப்படும். மதிய உணவு முடிந்ததும் சாதம் எஞ்சியிருந்தால் இரவு உணவுக்கு முதலில் கொடுப்பதற்காக வைக்கப்படும். புதிய சாதம் வைக்கப்பட்ட பவானிகளிடையே இது எப்படியோ இடம்மாறிவிட்டதால் இறுதியாக இது பரிமாறப்பட இருந்தது. ஆனால் சாதம் பழுதடைந்துவிட்டதால் சாப்பாட்டை இடைநிறுத்த வேண்டியிருந்தது. பணம் கட்டி, டோக்கனுடன் வந்தவர்களும் சேவாதளத் தொண்டர்களாகிய நாங்களும் விவாதித்துக் கொண்டிருந்தபோது, அந்த அற்புதம் நிகழ்ந்தது. எது சாப்பிட உகந்தது அல்ல என்று ஒதுக்கிவைக்கப்பட்டதோ அந்தப் பவானியில் உள்ள சாதம் சூடாகி ஆவி பறந்து கொண்டிருந்தது. சாப்பிட வந்தோர்களும் நாங்களும் அதைப் பிரசாதமாகவே உண்டு, ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினோம். "மது, மாமிசம், புகைத்தல் பழக்கம் உடையவர்கள் எனது பகுதி நேர பக்தர்கள்தான்" என்று பாபா கூறியதைக் கேட்டு இவைகளைத் தூர எறிந்து முழு நேர பக்தராக மாறியவர்களுள் நானும் ஒருவன். மொத்தத்தில் எங்களது வாழ்வில் சாயி கங்கை பாயத் தொடங்கியதில் இருந்து புனிதர்களாக மாறிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் கடவுளைக் கண்டு விட்டோம். தொட்டுவிட்டோம். கடவுள் எங்களோடு வாழ்கின்றார் என்ற பூரிப்பில் இருக்கிறோம்.



- இரா. தெய்வராஜன்

கடவுளோடு



பிரசாந்தி நிலையத்தின் செல்ல யானையின் பெயர் சாய்கீதா. வயது 30. பிரசாந்தி நிலையத்தில் முக்கிய விழாக்கள் நடைபெறும்போது, சாய்கீதா வண்ணமயமாக அலங்கரிக்கப்படும். இங்கிருந்து அரை கி.மீ. தொலைவில் கோகுலம் என்ற கோ சாலை உள்ளது. அதன் நுழைவாயிலில் கிருஷ்ணரது உருவம் வரையப்பட்டுள்ளது. அதனை வரைந்தவர் பாபாதான் என்பது பலரும் அறியாத சேதி.

- மாலா



வாசக அனுபவங்கள்

என் கணவர், 1993-94 ஆண்டுகளில் மலேசியா நாட்டில் ஒரு பிரபல இயற்கை எரிவாயு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்த சமயம். நிறுவனத்துக்கு அருகிலேயே ஒரு சிறிய நகரத்தில் ஒரு வீட்டில் தனிமையில் வசித்து வந்தார். நான் அங்கு சுற்றுலாச் சென்று திரும்பிய நேரம்.

ஓர் இரவுப் பணிக்குப் பின் வீடு திரும்பிய கணவர், பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானார். வீட்டின் கதவு, அலமாரிகள் உடைக்கப்பட்டு, விலையுயர்ந்த அனைத்துப் பொருட்கள், ஆடைகள் ஆகியன முற்றிலுமாகச் சூறையாடப்பட்டிருந்தன. அடிக்கடி இடம்பெயர்ந்து செல்லும் வெளிநாட்டுத் தொழிலாளர், இவ்விதம் செய்வது அங்கு வழக்கம் என பின்னர், காவல் துறையினரால் தெரிவிக்கப்பட்டது.

என் கணவர், எல்லாவற்றையும் இழந்த பின்பு திறக்கப்படாமலிருந்த அவருடைய கைப்பை மட்டும் உடைக்கப்பட்ட அலமாரியில் கண்டெடுத்தார். அந்தக் கைப்பையில் ஸ்ரீ சாயிநாதன் படம், கடப்பிதழ் (passport) மற்றும் விபூதிப் பிரசாதம், அந்நாட்டில் உழைக்கத் தேவையான முக்கிய ஆவணங்கள் ஆகியவை வைக்கப்பட்டிருந்தன. வெளிநாட்டில் தங்கியிருக்கும்பொழுது அந்த ஆவணங்களை இழந்துவிட்டால், அதன் பாதிப்பு என்ன என்பதைக் கூறத் தேவையில்லை. கைப்பையில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீசாயி பகவான் படமும், விபூதிப் பிரசாதமும்தான் இந்த ஆவணங்களை என் கணவர் இழக்காமலிருக்க அருள் புரிந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர் அருளால் நாங்கள் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் என்பதை ஒவ்வொரு நொடியும் நினைத்து வாழ்கிறோம். ஸ்ரீசாயிநாதனின் அற்புதங்கள் விவரிக்க இயலாதவை. நீங்களும் உணர்ந்து கொள்ளப்பட வேண்டும்.”

- கல்கி வாசகி

வாழ்கிறோம்!



வரும் நவம்பர் 23 சத்ய சாயி பாபாவின் 85வது பிறந்தநாள். சத்ய சாயி பாபாவின் பெற்றோர்கள் பெத்த வேங்கப்ப ராஜு, ஈஸ்வரம்மா. பிரசாந்தி நிலையத்துக்கு எதிரே உள்ள நந்தவனத்தில் பாபாவின் பெற்றோர் சமாதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் தமது அவதார தினத்தன்று பாபா இந்தச் சமாதிகளுக்கு வந்து தமது பெற்றோர்களை வணங்குவது வழக்கம்.

- மானஸா



நெய்வேலி பாரதிக்குமார்

ஊர்ப்பாசம்



ஒவ்வொரு தேசமும் தமக்கென்று அருங்காட்சியகங்கள் வைத்திருப்பது போல, ஒவ்வொரு மனிதனும் தமக்கென ஓர் அருங்காட்சி அறையை அவரவர் வீட்டில் அவரவர் வசதிக்கேற்ப வைத்துக்கொண்டால் என்ன என்று எனக்கு அடிக்கடி தோன்றும்.

அப்படியான என் அருங்காட்சியகத்தில் பால்யத்தின் ஒவ்வொரு துளியும் ததும்பி சிந்தாமல் இன்னமும் நினைவில் நிரம்பி வழியும் தஞ்சை மாவட்டத்தில் பந்தநல்லூர் செல்லும் வழியில் கீழக்காட்டூர் கிராமம் இருக்கும்.

காட்டூர் என்றாலே காளியாட்டம்தான் நினைவுக்கு வரும். சித்திரை மாதங்களில் ஊர்ப் பெரியவர்களால் தீர்மானிக்கப்படும் அந்தத் திருவிழாவில் காளி வேஷம் போடுவதற்காகவே பிரத்தியேகமான நபர்கள் இருப்பார்கள். தெருதோறும் ஆடிக்கொண்டே செல்லும் காளி, வீடுதோறும் சென்றமர்ந்து ஆசுவாசமாய் ஆசீர்வாதம் செய்துவிட்டுப் போவாள். மூன்று நாட்களுக்குக் குறையாமல் நடக்கும் அந்தத் திருவிழா முடிந்து, சிறுவர்கள் வாழை மட்டைகளைக் கொண்டு கை, கால் பட்டைகளாக்கி முகமும் தயாரித்து அட்டைக் கத்திகளோடு காளியைப் பிரதியெடுத்து ஆடுவது பெரியவர்களுக்குக் கிடைக்கும் உபரி தரிசனம்.

பொங்கலை விட மாட்டுப் பொங்கல்தான் சிறுவர்கள் மத்தியில் பிரசித்தம். தங்களின் பிரத்தியேகப் பிரியத்துக்குரிய மாட்டையோ, கன்றையோ நெட்டி மாலைகளாலும், கொம்புகளில் நெட்டி குஞ்சலங்களாலும் அலங்கரிப்பதில்தான் எத்தனை நேர்த்தியிருக்கும்!! ஆனால் இன்று அதே கிராமங்களில் பராமரிக்க சோம்பல்பட்டு அவரவர் கைகளில் பாலித்தீன் பாக்கெட் பால்... இருக்கும் ஒன்றிரண்டு வண்டி மாடுகளுக்கும் கொம்புகளில் கட்சிகளின் வண்ணம் தீட்டி உறுப்பினர் அட்டை இல்லாத அங்கத்தினர் ஆக்கிவிட்டனர். 'யாருடையது' என்ற பேதம் இல்லாமல் கைகளை நீட்டினால் வாஞ்சையோடு நாவால் வருடும் செல்லப்பிராணியாய் இருந்த அந்த ஜீவன்களை, இன்று எதிர்கொள்ள அச்சப்படும் அளவுக்கு எதிரிகளாக்கிவிட்டனர்.

பண்டிகை காலங்களில் எந்நேரமும் குதூகலித்து விழித்திருக்கும் எல்லாத் தாழ்ப்பாள்களையும் தொலைக்காட்சி சிறப்புத் திரைப்படங்கள் வீட்டுக் காவலில் வைத்துவிட்டன. நடு இரவில் மயானத்தில் கூட நடந்து செல்ல முடிகிற அளவு பயமற்று இருந்த கிராமங்களில், இன்று பகலில் நடக்கக் கூட அச்சப்படும் அளவுக்கு வீதிகள் வெறிச்சோடி கிடக்கின்றன. விளம்பர இடைவேளைகளில் மட்டும் பேசும்படி மக்கள் ப்ரோக்ராம் செய்யப்பட்டு விட்டார்கள்.

கார்த்திகை தீபத்தையொட்டி சிறுபிள்ளைகள், 'கார்த்திகைப் பந்தம்' சுற்றும் வழக்கம் உண்டு.

வாசகர்களே! மண் மணம் மாறாத உங்கள் ஊர் பாசத்தை நெகிழ்வோடு 10 வரிகள் குறிப்புடன் 'ஜம்'முன்னு எழுதி அனுப்புங்க... உங்க ஃபோட்டோ மறந்திடாதீங்க.



முதலில் பனம்பூக்களைச் சேகரிப்பர். வளையும் தன்மையுள்ள ஆடுதொடா, அகத்திக் குச்சிகளுள் ஏதாவதொன்றை வெட்டி வந்து இரண்டடி ஆழக் குழி தோண்டி, அதனுள் பரப்பி, அதன் மேல் பனம்பூக்களைக் கொட்டி, அதற்கும் மேல் தேங்காய் மட்டை நார் அல்லது நிலக்கடலைத் தோல் தூவி பற்றவைத்து மேலாக பூசணி இலைகளைப் பரப்பி, மண் தூவி மூடிவைக்க வேண்டும்.

குறைந்த காற்றோட்டத்தில் கனன்று... கனன்று பற்றும் நெருப்பு, பனம் பூக்களைத் தணலாக்கும். பெரிய கார்த்திகைக்கு முதல் நாள் இந்த முன்னேற்பாடெல்லாம் முடிந்து விடும். திருவண்ணாமலையில் தீபமேற்றும் பெரிய கார்த்திகைத் திருநாளன்று, கவைக் குச்சிகளை மேலும் கீழுமாய் இணைத்து, நடுவில் கிடைக்கும் வெற்றிடத்தில், பதப்படுத்தப்பட்ட பனம்பூக்களை வரகு உமியுடன் துணியில் நன்றாக இறுகச் சுற்றி நெருப்பேற்றுவர். பிடித்துச் சுற்ற வாட்டமாய் இரு முழக் கயிறு ஒன்றும் இணைக்கப்படும்.

தத்தம் வீட்டு வாசலில் சூழ்ந்திருக்கும் இருளை, ஆண்பிள்ளைகள் தம் சாகசத் திறன் மூலம் உருவாக்கிய கார்த்திகைப் பந்தத்தின் கயிறு பிடித்துத் தலைக்கு மேல் சுழற்றிக் கிளம்பும் தீப்பொறிகளால் விரட்டி வெளிச்சமாக்குவர். தொடக்கத்தில் இலேசாகச் சுழலும் பந்தம், நேரமாக நேரமாக வேகமெடுத்து, அப் பிள்ளைகளைச் சுற்றிலும் தீப்பொறிகளை இறைப்பது பரவசமான காட்சி. 'பொரி'யும் 'பொறி'யுமாகக் கழியும் கார்த்திகை தீபத் திருநாள் இன்று அகல் விளக்குகளில் மட்டும் துளியாய்ச் சுடர்விட்டுக் கொண்டிருக்கிறது. எரியும் விளக்குகளில் ஊற்றிய எண்ணெய் போலத் தீர்ந்து கொண்டிருக்கின்றன நம் மண்ணின் திருவிழாக்கள்.




வீட்டுக்கு வந்து ஆசியளிக்கும் காளி!











மனுஷனே ஒரு மொட்டுதான்!



திருநெல்வேலிக்காரரான ராஜகிருஷ்ணன் (24) சிற்பத்தில் முதுகலைப் பட்டப் படிப்பை முடித்தவர். உணர்வுகளையும் இயற்கையோடு பின்னிப் பிணைந்த நம் உறவுகளையும் சொல்ல சிற்பம்தான் சரியான மொழி என்கிறார். ஆதிவாசி ரூபத்தில் சிவனையும் சங்கு பூக்களோடு தானும் ஒரு பூவாக மாறி நிற்கும் மனிதனும், இயற்கையைப் பார்த்து வியக்கும் பிம்பமும், ஒரு மரக்கட்டையே மலராக மாறி நிற்கும் பாவனையும் இவரின் விசேஷ பிரதிபலிப்புகள். தன்னையே ஒரு மொட்டாகப் பார்க்கும் தன்மை மனிதர்களுக்கு வாய்த்துவிட்டால் இயற்கைக்கும் தனக்குமான இடைவெளி குறையும்தானே!

- சசிகலா

✲போட்டோ: சின்னராஜ்












ஃபோட்டோ உதவி:
சந்திரமௌலி





அருள்மழையின் ஆன்மிகச் சுவடுகள்...





நடிகர்-இயக்குனர் சுந்தர். சி:

● உங்க மனைவி குஷ்பு அரசியலில் இறங்கியது எப்போதாவது மனத்தில் தவறென்று தோன்றியதுண்டா?

''குஷ்புவுக்கு அரசியல்லே ஒரு நல்ல இடம் காத்திருக்கு. பாத்துக்கிட்டே இருங்க... அரசியலில் ஒரு சிறந்த பெண்ணாகவும் அவரை அடுத்த பரிமாணத்தில் பார்க்கப் போறீங்க!'' (வரும் எலக்ஷனில் கொள்கை பரப்புச் செயலாளரா?)





நீங்க பார்க்கத்

நடிகர் நாசர்:

●நீங்கள் நடிப்புத் துறையில் பிஸியாக இருக்கிறீர்கள்! உங்கள் மனைவி 'கஸ்தூரி' சீரியலுக்கு கிரியேட்டிவ் ஹெட்டாக உள்ளார். வீட்டில் 'டென்ஷன்' வராதா?

''வராது. என் மனைவி எம்.ஏ., எம்.ஃபில்., படித்த 'சைக்யாட்ரிஸ்ட்'. எனவே கவுன்சிலிங் வைத்துப் பல பேருக்கு ஆலோசனை சொல்லியுள்ளார். அவருக்குத் தெரியும், குடும்பத்தையும் தொழிலையும் சமன் செய்யும் யுக்தி. 'கஸ்தூரி' சீரியலுக்காக காலை 11 மணி முதல் இரவு 12 மணி வரை உழைத்தாலும், வீடு என்பது எங்களைப் பொறுத்த வரை இறைவன் தந்த சொர்க்கம் என்பதை நாங்கள் அறிவோம்.''





நடிகர்-இயக்குனர் சிங்கம்புலி:

●சம்பளத்தை உயர்த்தி விட்டீர்களாமே? இனி இயக்குனர் அவதாரம் உண்டா?

தொகுப்பு: விஜய்கோபால்

ஒரே ஒரு கேள்வி



பாலுமகேந்திரா:

● உங்களின் அடுத்த படம் எப்போது? இப்போது வரும் சினிமாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்?

''பேசிப் பேசி எனக்கே சலிப்பாகிவிட்டது. எனது அடுத்த படம் ஏப்ரலில் தொடங்குகிறேன். அதற்கு முன் எனது 'சினிமா பட்டறையில்' மூழ்கி நல்ல கலைஞர்களை உருவாக்குவதுதான் என் முதல் வேலை.''

தான் பேஸீங்க!

''பத்தொன்பது வருடங்கள் துணை இயக்குனராய் பணிபுரிந்து நான் சம்பாதித்த பணம் 590 ரூபாய்தான். அதனால் பணம் அதிகம் கேட்பது உடன்பாடில்லை. காமெடி எழுதுபவருக்கு 2 லட்சமும், நடிப்பவர்க்கு 15 லட்சமும் தருகிறார்கள். நான் என்றுமே இயக்குனர்; தயாரிப்பாளர்களின் நடிகன்தான். 2011ல் 'செங்காத்து' என்ற படம் இயக்கப்போகிறேன்.''



திருமாவளவன்:

● தமிழ் உணர்வாளரான நீங்கள் டாக்டர் சீனுவாசனுக்கு power star என்று ஆங்கிலத்தில் பட்டம் வழங்கியுள்ளீர்களே?

''அவர் நல்ல கொள்கை சிந்தனையாளர். நம்மவர்களை நாம் கௌரவிப்பதில் தவறு ஒன்றும் இல்லை. அதே 'லத்திகா' பட இசைத்தட்டு விழாவில், அடுத்து இப்படி ஒரு திரைப்பட விழா நடப்பதற்குள் 'பவர் ஸ்டார்' என்ற பட்டத்தைத் தமிழில் சூட்ட, நல்ல மொழிபெயர்ப்போடு எழுதித்தர சொல்லியிருக்கிறேன்.''

மேஷம்: பத்திரிகைகளில் பெயர் வரும். சுபகாரியப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். ஆரோக்கியம் பற்றிக் கவலைப்படத் தேவை இல்லை. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். பொன் பொருள் சேரும். விருந்தினர் வருகை மனத்துக்கு சந்தோஷத்தை அளிக்கும். கடன் சுமை தீரும். வீடு, மனை வாங்க உகந்த நேரம். மனசஞ்சலம் தீரும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். உடன் பிறந்தவர்களால் மன வருத்தம் உண்டாகும். உத்தியோகத்தில் இடமாற்றம் வரலாம்.

ரிஷபம்: நீண்ட காலம் தடைபட்டு வந்த திருமணம் தங்குதடையின்றி நடக்கும். வரவேண்டிய நிலுவைகள் வரத் தொடங்கும். மன கிலேசம் விலகி மனத்தில் புத்துணர்ச்சி ஏற்படும். பொருளாதாரச் சிக்கல்

தஞ்சை பரத்வாஜ்

தீரும். கூட்டாளிகளை விட்டுப் பிரிந்து செல்ல நேரிடும். கடல் கடந்து செல்லும் பாக்கியம் உண்டாகும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும்.

மிதுனம்: உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகும். மன பயம் விலகும். வீடு மாற்றம் ஏற்படும். வியாபார ஸ்தாபனத்தை மாற்றி அமைக்கும் சூழ்நிலை உருவாகும். பணப் பிரச்னை இருக்காது. இல்லற வாழ்வில் அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. உடல்நிலை பாதிக்காது. குழந்தைகள் வழியில் சுபகாரியம் நடக்கும். புதிய வாகன யோகம் கிட்டும். சனி, ராகு, கேதுவை வழிபட்டு வர சங்கடங்கள் தீரும்.

கடகம்: நல்ல ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது. புதிய பதவி தேடி வரும். தடையான சுபநிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும். பண வசதி பெருகும். கௌரவங்கள் தேடி வரும். குழந்தைகள் இடமாறிப் போகலாம். பிள்ளைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். ஆரோக்கியம் சீராகும். கடன் சுமையிலிருந்து விடுதலை கிட்டும். சிலருக்கு வீடு, வாகன சேர்க்கை உண்டாகும். உத்தியோகத்தில் பதவி உயர்வு கிட்டும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும்.

சிம்மம்: தேவை இல்லாத பகைமை வரலாம். குழந்தைகளால் மனச்சங்கடம் ஏற்படும். குழந்தைகள் இடமாறிப் போவார்கள். கூட்டுத் தொழில் செய்வோர் உஷார். கூட்டாளிகளிடம் பகைமை ஏற்படும். பூர்விகச் சொத்து வேறு கைக்கு மாறிப்போகும். இருந்தாலும் பணப் பிரச்னை இருக்காது. மறைமுக எதிரிகளால்



தொல்லை வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வீடு மாற்றம் ஏற்படும்.

கன்னி: நீண்ட நாட்களுக்குப் பிறகு நல்ல திருப்பம் ஏற்பட்டு இருக்கிறது. உடல் நிலை சீராகும். சுபச் செலவு கைகூடும். தடைகள் விலகும். எதிரிகளால் தொல்லைகள் விலகும். வீடு, மனை வாங்கும் யோகம் ஏற்படும். சுபகாரியப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். வேலையில் இருந்து வந்த தொல்லைகள் விலகும். புதிய வேலை கிட்டும். புதிய தொழில் முயற்சி பலன் கொடுக்கும். கடன் தொல்லை தீரும். வசதிகள் பெருகும். சனி, ராகு, கேதுவை வழிபட்டு வரவும்.

துலாம்: உடல் நலத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். கை, கால்களில் கட்டுப் போடும் சூழ்நிலை உருவாகும். எதிரிகளால் தொல்லை ஏற்படும். நீண்ட காலம் முடிவு பெறாத வழக்கு மூலம் தொல்லை வந்து சேரும். பண விரயங்கள் அதிகமாகும். தேவை இல்லாத தகராறுகள் ஏற்படும். குழந்தைகள் பற்றின மனக் கவலை ஏற்படும். குலதெய்வ கோயில் சென்று பிரார்த்தனை செலுத்தி வரவும். சங்கடம் போகும். மகாவிஷ்ணு தரிசனம் கிட்டும். வீடு மாற்றம் உண்டாகும். கடன் சுமை அதிகரிக்கும்.

விருச்சிகம்: மிகவும் அற்புதமான வாரம். எண்ணியவை யாவும் நிறைவேறும். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். வீடு, மனை வாங்க உகந்த தருணம். வேலைப் பளு குறையும். இல்லற வாழ்க்கையில் அனுசரித்துப் போவது நல்லது. பலருக்கும் ஜாமீன் போடக்கூடாது. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கைத் தேவை. கடன் சுமை தீரும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். கூட்டாளிகளை விட்டு விலக நேரிடும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை.

தனுசு: வீடு மாற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் மாறுதல் வரவேண்டிய தருணம். மனக்குழப்பம் விலகும். வேலைப் பளு குறையும். கடன் பிரச்னை தீரும். சுபச் செலவு உண்டாகும். தொழில் வழியில் முன்னேற்றம் உண்டாகும். மனக் குழப்பம் விலகும். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும்; தரித்திரம் பீடை விலகும். ராகு, கேது சனியை வழிபட்டு வர சங்கடங்கள் தீரும்.

மகரம்: புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். மகான்களின் தரிசனம் கிட்டும். கடன் தொல்லை தீரும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். வீடு மனை வாங்க சிறந்த தருணம். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி கிட்டும். உறவினர் வருகை மனத்துக்கு சந்தோஷம் கொடுக்கும். முயற்சிக்கும் காரியம் அனைத்தும் பலிதமாகும். செலவுகள் சுபமானதாக இருக்கும்.

நடக்கும்!

21.11.2010 முதல் 27.11.2010 வரை

கும்பம்: நல்ல அற்புதமான பலனை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த உங்களுக்கு நல்ல பலனை அள்ளித்தரும் வாரம் இது. பண வசதி பெருகும். பொன் பொருள் சேரும். கடன் பிரச்னையிலிருந்து வெளியே வருவீர்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நல்ல மதிப்பும் கிட்டும். புதிய ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வேலையில் உயர்வு ஏற்படும். பூர்விகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். விலகிப்போன நண்பர்கள் திரும்பி வருவார்கள். பண வசதி பெருகும்.

மீனம்: உத்தியோகத்தில் இட மாறுதல் ஏற்படும். புதிய வேலைவாய்ப்புத் தேடி வரும்; நீண்ட தூரம் நடந்து செல்ல நேரிடும். மனசஞ்சலம் ஏற்படும். வரவேண்டிய பணம் வந்து சேரும். கடன் தொல்லை தீரும். பூமி மூலம் ஆதரவு கிட்டும். உறவினர் வருகை நஷ்டம் அளிக்கும். ஆரோக்கியம் சீராகும். எதிர்ப்புகள் மறைமுகமாக இருக்கும். ராகு, கேது, சனியை வழிபாடு செய்து வர சங்கடங்கள் தீரும்.

எழுத்தாளர் லேனா தமிழ்வாணன் சேலம் வந்திருந்தபோது, ஒரு நண்பர் மூலம் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சந்தித்துப் பேசியது மட்டுமின்றி அவருடன் சேர்ந்து மதிய உணவு சாப்பிட்டு, அவருடன் கிரிக்கெட் விளையாடிய அனுபவமும் அன்று கிடைத்தது எனக்கு. இவ்வளவு பெரிய மனிதர் கொஞ்சம்கூட பந்தா இன்றி நெருங்கிய நண்பர் போலப் பழகியது கண்டு வியந்தேன். சேலத்திலுள்ள அவருடைய நண்பர் வீட்டில் அவருடன் சேர்ந்து நான் எடுத்துக்கொண்ட இந்த ஃபோட்டோ என்னைப் பொறுத்தவரை ஒரு பொக்கிஷம்தான். இதைப் பார்க்கும்போதெல்லாம் சொல்லிக் கொள்வேன். 'நண்பேன்டா!'

- குட்டி பிரசன்னா,
ஹரூப்ளி



ஆஹா ஆல்பம்



ஃபோட்டோவுடன் இடம்பெறும் ஒவ்வொரு அனுபவத்துக்கும் பரிசு ரூ.50/-

நான் குமாரபாளையத்தில் திருவாளர்கள் எஸ்.எஸ்.எம். பிரதர்ஸ்சில் பணியாற்றி வந்தவன். எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி எம்.ஜி.ஆர். ஒருமுறை எஸ்.எஸ்.எம்.சவுண்டப்பன் அவர்களின் இல்லத்துக்கு வந்தார். அப்போது ஜானகி எம்.ஜி.ஆருடன் எடுத்துக்கொண்ட இந்தப் படத்தை இதுநாள் வரை பாதுகாத்து வருகிறேன்.

- மு.அம்மையப்பன், ஈரோடு

வாசகர்களே!

திருமண ஃபோட்டோ மட்டுமல்ல, நீங்கள் பெரிதும் ரசிக்கும், பொக்கிஷமாகப் பாதுகாக்கும் ஃபோட்டோ எதுவாயினும் 10 வரிகள் குறிப்புடன் எழுதி அனுப்புங்க...

பாண்டிச்சேரி 'பீச்'சில் உள்ள இந்த காந்தி சிலை அருகே பலரும் புகைப்படம் எடுத்துக் கொள்வதுண்டு. காந்தி சிலை முழுமையாகப் 'பளிச்'செனத் தெரியக்கூடிய பின்னணியில் புகைப்படம் எடுக்க விரும்பிய என் கணவர், நீண்ட நேரம் யோசித்து, அந்தக் குறிப்பிட்ட இடத்தில் என்னையும் என் மகளையும் நிற்க வைத்து, இந்தப் புகைப்படம் எடுத்தார். எடுக்கும்போது, எதிர்பாராமல், என் மகள் என்னிடம் கொஞ்ச, புகைப்படம் இன்னும் சிறப்புப் பெற்றதாக ஒரு ஃபீலிங். புகைப்படத்தில் இருக்கும் என் மகள் இப்பொழுது +2 படிக்கிறாள் என்றால், பார்த்துக்கொள்ளுங்கள் இந்தப் படத்தின் சிறப்பை!

-கே.பி.ஜெயந்தி, மதுரை



அது 1980ஆம் வருடம் என்று நினைக்கிறேன். அப்போது எங்கள் அண்ணன் வைத்திருந்த ஒரு சாதாரண கேமராவை வாங்கி நான் எடுத்த புகைப்படம்தான் இது. அப்போது வடுகவிருட்சியூர் என்ற எங்கள் கிராமம் பச்சைப் பசேல் என்று ஆல், அரசு, மா, வாகை, தூங்குமூஞ்சி என்று ஏராளமான மரங்களுடன் ஒரு சிறு கானகம்போல இருந்தது. இப்போது நேர்மாறாக இந்த இடத்தில் ஒரு மரம்கூட இல்லாமல் வெற்றுத் திடலாக இருக்கிறது. அதோடு கிராமத்திலும் பெரும்பாலான மரங்கள் அழிந்து, நீர்நிலைகளும் ஐப்பசி மாதத்தில்கூட வற்றிக் கிடக்கின்றன. அப்போது நான் அந்தக் காலத்தில் எடுத்த இந்த முதல் புகைப்படத்தை அந்தப் பசுமையான நினைவுகளுக்காகவே பொக்கிஷமென கம்ப்யூட்டரில் பாதுகாப்பாக வைத்திருக்கிறேன்.

- எஸ்.செல்வராணி, மங்கைநல்லூர்



ஜெயம் ஷீலா சிவக்குமார்



"மஞ்சள பூசி குளிக்காதனு சொன்னா கேட்டா தான? சுடுகாட்டைத் தாண்டில்ல பள்ளிக்கூடம் போகணும்? பேய், பிசி புடிச் சதுன்னா என்னா பண்றது?" என்று திட்டிக்கொண்டே, கிழிந்து போன அழுக்குத் துண்டை எடுத்து, பேத்தி வள்ளியின் தலைக்கு முக்காடிட்டாள் அன்னம்மா கிழவி.

"பேயும் பிடிக்காது. பிசாசும் பிடிக்காது. இந்த அழுக்குத் துண்டைப் போர்த்தி விட்டா எனக்கு ஏதாவது நோய்தான் பிடிக்கும்" என்று சொல்லிக்கொண்டே, அந்தத் துண்டை குடிசை வாசலில் இருந்த மண் திண்ணை மீது வீசினாள் வள்ளி.

ஆசையாய் நேற்று கட்டி வைத்த குண்டு மல்லிகையைத் தலையில் வைத்துக்கொண்டாள் வள்ளி.

"அடிப்பாவி மகளே, இத வேற வக்கிறியே! பேய் உன் பின்னாலயே வந்துடும்மா!" அன்னம்மா பயமுறுத்தினாள்.

"இப்பலாம் காலம் எவ்வளவோ மாறிப் போச்சி. உன்னோட பழைய பேய் பேச்சை விடுறியா?" பார்வதி குரலை உயர்த்திச் சொன்னாள்.

"ஏய்... வள்ளி, இன்னைக்கும் உங்க அப்பாயி கூடயா?"

வள்ளி திரும்பிப் பார்த்தாள்.

முதுகில் புத்தக மூட்டையுடன் அவளது தோழிகள் பாப்பாத்தியும், கற்பகமும் நின்றிருந்தனர்.

"நீ ஒண்ணும் என் கூட வரவேணாம் அப்பாயி. நான் இவங்க கூடவே சேர்ந்து போயிக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே, அவசரமாகப் புத்தகப் பையைத் தோள்களில் மாட்டினாள் வள்ளி.


"அடியே, பார்வதி... வயசுக்கு வந்த புள்ளை தனியா போறேங்கிறா. இதையும் பார்த்துக்கிட்டு நான் வாயை மூடிக்கிட்டு இருக்கணுமா?" கிழவி இரைந்தாள்.

"அதான் ஒரு மாசம் முடிஞ்சதில்ல. சேத்தாளிங்க கூடத்தானே போவுது. போவட்டும் விடு அத்த..." என்றாள் பார்வதி.

அம்மாவின் பதிலில் குதித்துக்கொண்டு தன் தோழிகளுடன் கிளம்பினாள் வள்ளி. பேச்சும், சிரிப்புமாக அவர்கள் சென்றனர்.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான சிறுகதைகள்

14



நேர்த்திக் கடன்!

''கலி முத்திப்போச்சு'' என்று முனகிக் கொண்டாள் அன்னம்மாள் கிழவி.

'**வ**ள்ளிக்கு சோளக்கருது என்றால் கொள்ளைப் பிரியம்' என்று மனத்துக்குள் நினைத்துக்கொண்டே, கருதுகளை உரித்துக் கொண்டிருந்தாள் பார்வதி.

''ஏ... பார்வதி... உம் மவ அங்க சுடு காட்டு ஆலமரத்துல வெளையாண்டுகிட்டு இருக்கா.'' காட்டிலிருந்து விறகுக் கட்டோடு வந்த முத்தம்மாள் சொல்லிவிட்டுச் சென்றாள்.

''சாயந்தரமும் அதுவுமா, சுடுகாட்டுல... வயசுப்புள்ள... ஐயோ! காத்து, கருப்பு புடிச்சிக்குமே!'' என்று அலறியடித்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக மரத்தடிக்கு வந்து சேர்ந்தாள் பார்வதி.

''இந்த மரத்துலதான விஜயா தூக்குல தொங்குனா, இங்க போயி வயசுப்பிள்ளைங்க ஆடிக்கிட்டு இருக்கிங்களா...''

மூவரையும் பார்த்து சத்தம் போட்டாள்.

''உனக்கு அடி தின்னு நாளாச்சி. இரு...இரு உங்கப்பன் வரட்டும். இன்னைக்குப் பேய் ஓட்டச் சொல்றேன்'' என்று சொல்லி மகளின் காதைப் பிடித்துத் திருகினாள்.

''வலிக்குது விடும்மா'' என்று சொல்லி அம்மாவின் கையைத் தட்டிவிட்டு ஓடி, முன்னே செல்லும் தோழிகளோடு சேர்ந்து கொண்டாள் வள்ளி. அவர்களைப் பின்தொடர்ந்த பார்வதி, அவளுக்குப் பின்னால் மரத்திலிருந்து கீழே இறங்கிய உருவத்தைக் கவனிக்கவில்லை.

நேற்று இரவு முழுக்க வானம் இடித்து மழை பெய்ததில் சுடுகாட்டை ஒட்டிய செம்மண் காட்டில் காளான்கள் பூத்துக் கிடந்தன.

வெட்ட வெளியில் அரிசிக் காளான்களும், புதர்ச் செடிகளின் மறைவில் பெருங்காளான்களும் பூத்திருந்தன. 'அப்பனும், மகளும் காளான் குழம்புனா ரெண்டு வட்டி சோறு தின்னுவாங்க!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, அவற்றைத் தேடித் தேடி பிடுங்கிக் கொண்டிருந்தாள் பார்வதி.

கிசுகிசுவென ஏதோ சத்தம் கேட்க திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

காளான் தேடிய மும்முரத்தில் சுடுகாட்டுக்கே வந்துவிட்டது உறைத்தது. கை எலும்போ, கால் எலும்போ காலடித்தடத்தில் மண்ணில் புதைந்து அரைகுறையாகத்தெரிந்தது. ''உச்சிப்பொழுதாச்சே!'' புலம்பிக்கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தாள். அந்த ஊரில் அந்த நேரத்தில் அந்த இடத்தில் யாருமே இருக்க மாட்டார்கள். அருகிலிருந்த 'ஆவா'ச் செடியின் இலைகள் ஆடிக் கொண்டிருந்தன. பார்வதிக்குப் பயம் தொண்டைக் குழியை அடைத்தது.

''ஆனாப்பழம் சாப்பிடுறியா? நல்லாருக்கும்'' என்றது ஓர் ஆண் குரல்.

''எனக்கு அதெல்லாம் வேண்டாம்...'' என்ற குரல், பார்வதிக்கு மிகவும் பழக்கப்பட்ட குரலாய் இருந்தது. 'அம்மா, காளியாத்தா...அப்படி எதுவும் இருக்கக் கூடாது!' என்று நெஞ்சம் நடுங்க மனத்துக்குள் கூறிக்கொண்டாள்.

''சினிமால்லாம் நீ பார்த்ததேயில்லியா.''

''கவர்ன்மெண்ட் கொடுத்த பெட்டி எங்க வீட்டுல தூங்கிட்டு தான் இருக்கு. மாசமான்னா கேபிளுக்கு யாரு காசு கொடுப்பா?''

ஆண் குரலும், பெண் குரலும் மாறி மாறிக் கேட்க, பார்வதியின் இதயம் படபடவென்று அடிக்கத் தொடங்கியது.

''மஞ்ச கலர் தாவணி உனக்கு

'**ம**ன்மதன் அம்பு' படத்தில் சொந்தக் குரலில் பேசப் போகிறாராம் திரிஷா. ட்ராமாவுக்கு ரிகர்சல் பார்க்கும்போது ஏன் சினிமா மட்டும் பார்க்கக் கூடாது என்று கமல் யோசித்ததன் விளைவு, ஒவ்வொரு காட்சிக்கும் ரிகர்சல் பார்த்திருக்கிறார்கள்.

கதை, திரைக்கதை, வசனம் இவற்றுடன் பாடல்கள் எழுதும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார் கமல்!

- மதன்

ரொம்ப அழகா இருக்கு தெரியுமா?''

இரத்தத்தில் கோபம் கொப்பளிக்கத் தொடங்கியது பார்வதிக்கு. நடுங்க ஆரம்பித்த கால்களை அந்தப் புதரை நோக்கி நகர்த்தினாள்.

''ச்சீ. கையை எடு. இந்த வேலையெல்லாம் என்கிட்ட வேணாம்.''

புதருக்குள்ளிருந்து வேகமாய் எழுந்தாள் வள்ளி! அவளைத் தொடர்ந்து எழுந்த உருவம் தங்கராசு மகன் முருகேசன்.

''ஏய்... ஏய், போகாத, வா...'' என்றபடியே அவள் கையைப் பிடித்து இழுத்தவன் வள்ளியின் அம்மாவைப் பார்த்து திடுக்கிட் டான்.

பார்வதிக்குள்ளிருந்து ஏதோ ஒன்று புறப்பட, அப்படியே, வள்ளி யின் முடியைக் கொத்தாக வளைத்துப் பிடித்து, முதுகில்



'கும், கும்' என குத்துக்களை அடுக்கினாள்.

''அக்கா, அக்கா அடிக் காதக்கா...'' என்றான் முருகேசன்.

''அட எ(ன்) ஒடுகாலி மவனே, ஓடுறா மொதல்ல'' என்று சாமி வந்தவள்போல் குதிக்க, அவன் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே ஓடி மறைந்தான்.

நடுமுதுகில் விழுந்த பேயடி யில், மூச்சுத் திணறிய வள்ளி கண்கள் செருக, கீழே விழுந்தாள்.

''என் வயித்துல பால வாப் பனு நெனச்சா, நெருப்பள்ளிக் கொட்டிட்டியேடி...'' என்று சொல்லிக்கொண்டே இரண்டு கைகளாலும் வள்ளியின் கன்னங்களில் அறைய, நேரங்கழித்து தான், மகள் நிலை பார்வதிக்கு உறைத்தது.

செத்துதான் போய்ட்டாளோ? என்ற பயம் எழ, மூக்கில் கை வைத்துப் பார்த்தாள். வெறி பிடித்தவள் போல் கத்திக்கொண்டே ஓடினாள். பாறையின் மீது தேங்கியிருந்த மழை நீரை இரண்டு கைகளிலும் அள்ளிக்கொண்டு வந்து முகத்தில் தெளித் தாள், வாயில் ஊட்டினாள்.

''அடியே வள்ளி... எழுந்திருடி... என் னைப் பழிகாரியா ஆக்கிடாதடி...!'' என்று ஒப்பாரி போல இழுத்து ராகம் பாடி அழு தாள்.

பார்வதிக்கு என்ன செய்வதென்று புரிய வில்லை. மகளை இழுத்து மடியில் வைத் துக்கொண்டு, கன்னத்தை இலேசாகத் தட் டிக்கொடுத்தாள்.

வள்ளி மெல்ல கண் திறந்தாள்.

''ஆளாயி மூணு மாசங்கூட ஆகலை. அதுக்குள்ள என்ன வேலை பண்ணற நீ? மாரியாத்தா... எத்தன நாளா இந்தக் கூத்து நடக்குதோ தெரியலையே...'' பார்வதி நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுதாள்.

''அம்மா, இன்னைக்குத்தானம்மா நான் தனியா அவன் கூட வந்தேன். அவன் நல் லவன் இல்லம்மா. தப்புத் தப்பா தொட நாண்ம்மா... இனிமே அவன் இருக்க பக்கம் திரும் பிக்கூட பார்க்கமாட்டேம்மா. என்னைய நம்பும்மா...''

வள்ளி அழ, அவளை மார்போடு சேர்த்துக் கட் டிக்கொண்டு பார்வதி அழுதாள்.

''சுடுகாட்டுல பொம்மனாட்டி சத்தம் கேட் குது. வாங்கடா டேய்!'' என்று சொல்லிக்கொண்டே வெள்ளையனும், செல்லப்பனும் தூரத்தில் ஓடி வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பின்னால் நாலைந்து ஆண்களும், பெண்களும் ஓட்டமும், நடையுமாக வந்து கொண்டிருந்தனர்.

'யார் கண்ணிலாவது முருகேசன் பட்டுட்டா...?' அவன் ஓடிப்போன திசையைப் பயத்துடன் பார்த்

தான் பார்வதி. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அவனைக் காணவில்லை. மனம் கொஞ்சம் நிம்மதியானாலும்,

''நெருப்பில்லாமலே புகையுதுனு சொல்ற சனமாச்சே! வெறும் வாய்க்கு அவல் கிடைச்ச கதையாயிடுமே! ஒண்ணுமே இல்லாத விஷயத்தைப் பிள்ளைக் கலைச்சிட்டாங்கிற வரைக்கும் கொண்டு போய் கதை பண்ணிடுவாங்களே! என்ன பண்ணுவேன்?'' என்று புலம்பினாள்.

அருகில் வந்துவிட்டனர். வெள்ளையனும், செல்லப்பனும்.

''மகமாயி... மாரியாத்தா... நீதான் காப்பாத்தணும்'' என்று சொல்லிக் கொண்டே, சூடாகக் கண்ணீர் விட்டாள்.

''ஏம் பார்வதி, என்னாச்சி?'' செல்லப்பன் கேட்டான்.

''என்னமோ தெரியலண்ணே... நானும் வள்ளியும் காளான் பறிக்கலாம்னு வந்தோம்... திடீர்னு இவளுக்கு என்னமோ ஆயிடுச்சு...'' நடுங்கிய குரலில் பார்வதி

''மனு வாங்கப் போன இடத்துல தலைவர் பெரிய கலாட்டாவே பண்ணிட்டாரு!''

''எதுக்காக?''

''மனுவைக் கொடுத்த ஒருத்தர் அதைப் படிச்சுப் பார்க்கச் சொல்லிட்டாராம்.''

- பி.பாலாஜி கணேஷ்



சொல்ல, வெள்ளையன் வள்ளியை உற்றுப் பார்த்தான். பயந்திருந்த வள்ளி அலங்க மலங்க விழித்தாள்.

''பார்வதி, தெரியலையா...? வள்ளிக்குப் பேய் பிடிச்சிருக்கு'' என்றான்.

''கன்னத்தைப் பாரு. பேய் அறைஞ்சிருக்கு'' என்றான் செல்லப்பன்.

''அப்படியாண்ணா சொல்ற? நேத்து கூட சேத்தானிகள கூட்டிக்கிட்டு, ஆலமரத்துல ஆடிக்கிட்டிருந்தா!''

''அப்ப, சந்தேகமே இல்ல. பிடிச்சிருக்கறது விஜயா பேய்தான்! சின்னதுரையோட சுத்திக்கிட்டு இருந்துதான அவ செத்துப் போனா. காதல் தோல்வியில செத்தவ வள்ளி மூலமா சின்னதுரையப் பிடிக்கத்தான் வந்திருக்கா'' உறுதியாகச் சொன்னான் வெள்ளையன்.

''வயசுப்பிள்ளையத் தனியா விட்டா, இப்படிப் பேய் பிடிக்காம என்ன செய்யும்? சரி சரி வா. பூசாரிகிட்ட மந்திரிச்சி ஒரு தாயத்து கட்டிடலாம்'' என்று செல்லப்பன் சொல்ல,

''அது எதுக்குப்பா? நம்ம பிச்சாண்டியண்ணங்கிட்ட நேரா கூட்டிட்டுப் போயிடலாம். எந்தெந்த ஊருக்கெல்லாம் போயி அவரு பேய் ஓட்டிட்டு வர்றாரு தெரியுமா?'' வெள்ளையன் சொன்னான்.

பேய் விரட்டும் பிச்சாண்டி வீட்டு ஜன்னலின் வழியே வேப்பஞ்சிமிறுகளை வைத்து அவர் பேய் பிடித்த பெண்களை அடித்து, மிரட்டுவதும், அந்தப் பெண்கள், ''ஐயோ, அம்மா, நான் போயிடுறேன். விட்டுடு'' என்று அலறுவதையும் ஓரிரண்டு முறை பார்த்திருக்கிறாள் வள்ளி.

அந்த அடி இப்போது எனக்கா? என்று நினைத்தபோதே, பயம் வள்ளியின் மனத்தில் நிறைந்தது.

''அம்மா, நான் அங்க வரலைம்மா. நான் வரமாட்டேன்'' என்று அலறிக் கொண்டு ஓடினாள் வள்ளி.

''வயசுப் பொண்ணு பேயில்ல? அதான் அழிச்சாட்டியம் பண்ணுது'' என்று சொல்லிக் கொண்டே வெள்ளையனும், செல்லப்பனும், ஆளுக்கொரு கைகளைப் பிடித்துக் கொண்டனர். வள்ளி தம் பலம் கொண்ட மட்டும் அவர்களிடமிருந்து விடுபட திமிறிக்கொண்டிருந்தாள்.



"ஆத்தா.. மாரியாத்தா... எப்படியோ என் அத்தை ரூபத்துல வந்து என் புள்ள பேர்ல பழி வராம காப்பாத்திட்ட."

''பார்வதி, விஜயா பேய் ரொம்ப ஆட்டங்காட்டுது. நேரா பிச்சாண்டியண்ணன் வூட்டுக்குத்தான் போகணும்.'' வெள்ளையன் கட்டளையிட்டான்.

வள்ளியை 'விஜயாப் பேய்' பிடித்த செய்தி, நவீன தகவல் தொழில்நுட்பம் எதுவுமில்லாமலேயே அந்த வட்டாரம் முழுக்கப் பரவிவிட்டிருந்தது.

செய்தி கிடைத்து அன்னம்மாள் ஓடோடி வந்தாள்.

பயத்தால் விழித்துக்கொண்டிருந்த பேத்தியைப் பார்த்துக் கண்ணீர் விட்டாள்.

''ஆளானப் பிள்ளைங்க மஞ்ச பூசக் கூடாது, மல்லியப்பூவை வைக்கக்கூடாது, பெரியவங்க துணை இல்லாம தனியா போகக்கூடாதுனு, பெரியவங்க எதுக்கு சொல்லி வச்சாங்க? எல்லாத்தையும் மீறிக்கிட்டு பிள்ளைய வளத்த. இப்பப் பாரு நெலமையை!''தம் பேச்சைக் கேட்காத மருமகளைக் குறை கூறினாள் அன்னம்மாள்.

''இப்படியெல்லாம் ஆகும்னு நான் நெனக்கலையேத்த... இப்பத்தான தெரியுது.''

''சரி சரி... பிச்சாண்டிகிட்ட கூட்டிட்டு போயி வெரட்டிட்டு வந்துடலாம்.'' வெள்ளையன் சொன்னான். பேய் விரட்ட கூட்டிவரும் நபருக்குப் பிச்சாண்டி கமிஷன் தருவது வழக்கம். இன்றைய தண்ணிக்குக் காசு கிடைத்து விடும் என்ற நப்பாசை வெள்ளையனுக்கு இருந்தது.

''அவன்கிட்ட போனா, ஆயிரம் ரெண்டாயிரம்னு செலவாகும். முதல்ல நம்ம ஊரு மாரியாத்தா கோயிலுக்குப்போயி, மந்திரிச்சி நீறு பூசலாம். எந்தப் பேயாயிருந்தாலும் ஓடிப்போயிடும். அப்படியும் போகலைன்னா பிச்சாண்டிகிட்ட போலாம்'' அன்னம்மாள் முடிவாய் சொன்னபோது, வெள்ளையன் முகம் சிறுத்து விட்டது.

கிழவி சொல்வதுதான் சரி என்று ஒத்துக்கொண்ட கூட்டம், மாரியம்மன் கோயிலுக்கு நகர ஆரம்பித்தது..

''ஆத்தா... மாரியாத்தா... எப்படியோ என் அத்தை ரூபத்துல வந்து, எம்புள்ள பேர்ல பழி வராம காப்பாத்திட்ட. உனக்கு இந்த வருஷம் அலகு குத்தி, பூச்சட்டி எடுக்கறேன் ஆத்தா.'' மகளை அணைத்தபடி நடந்த பார்வதி, மனத்துக்குள் நேர்ந்து கொண்டாள்.

கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்திருந்த முருகேசன், 'பேய் புடிச்ச புள்ளக்கிட்டயா சேட்ட பண்ணப் பார்த்தேன்? அறைஞ்சிருந்தா என்னாவறது? அப்பா, சாமி, இனிமே இந்த வள்ளியோட சகவாசமே ஆகாதுடாப்பா...' என்று தமக்குள் முடிவு செய்துகொண்டான்.

பகவான் ரசித்த கலை



கடவுள் கொடுத்த கணையாழி!

அது 1988-வது வருடம், மே மாதம் முதல் தேதி. சாயி பக்தரான சாய்ராம் ரொம்ப சந்தோஷமாகவும், டென்ஷனாகவும் இருந்தார். சந்தோஷத்துக்குக் காரணம் சத்ய சாயி பாபா பற்றின வில்லுப்பாட்டு ஒன்றை நடத்த வேண்டும் என்ற அவரது நெடுநாள் கனவு, அன்று கொடைக்கானலில் பாபா முன்னிலையிலேயே நிறைவேற இருந்தது. தம்முடன் இன்னும் சில சாயி பக்தர்களை இணைத்துக்கொண்டு வில்லுப்பாட்டுக் குழுவாக வில், தபேலா, டோல் சகிதம் கொடைக்கானல் போய் இறங்கினார். நிகழ்ச்சி நேரத்துக்கு முன்னதாக பாபா அவரது குழுவினரைத் தம் அறைக்கு அழைத்து, ''எங்கே! உங்கள் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை ஒரு முன்னோட்டமாக என் முன்னே சில நிமிடங்கள் நடத்துங்கள்'' என்று சொல்லிவிட்டார். சாய்ராம் குழுவினரது முன்னோட்டம் அவரைக் கவர்ந்துவிட, அவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்.

அன்று மாலை, பாபா முன்னிலையில் அவரைப் பற்றிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சியைக் கேட்டு மகிழ ஏராளமான பக்தர்கள் திரண்டு இருந்தார்கள். சாய்ராமுக்குக் கொஞ்சம் டென்ஷன். பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டு வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை ஆரம்பித்தார். அடுத்த வினாடி பாபா முகத்தில் புன்னகை. ''ஏன் பதற்றப்படுகிறாய்? உன் முன்னால் இருக்கும் மைக்கை ஆன் பண்ணவில்லையே?'' என்று அவர் சொன்ன பிறகுதான், மைக் ஆன் செய்யப்படாததைக் கவனித்தார் சாய்ராம்.

அப்புறம் வில்லுப்பாட்டை ஆரம்பித்து சாயியின் அவதாரம், பால சாயியின் லீலைகள், பகவானின் அற்புதங்கள், சத்ய சாய் அமைப்புகளின் பணிகள் எல்லாவற்றையும் பற்றி இரண்டு மணி நேரத்துக்கு வெகு சிறப்பாக நடத்தி முடித்தார். ஒரு மோதிரத்தை வரவழைத்து, அவருக்கு அணிவித்துப் பாராட்டினார் பாபா. 12 சாய் பக்தர்கள் அடங்கிய வில்லுப்பாட்டுக் குழு, இதுநாள் வரை நூற்றைம்பதுக்கும் அதிகமாக வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நடத்திவிட்டார்கள்.

■ பரத்ராம்

வருங்கால ஊழலே வருக!



''எஃப்.எம். ரேடியோவுல நிகழ்ச்சித் தொகுப்பாளராக என்ன தகுதி வேணும்?''

''சுமா, ஃபுல் ஸ்டாப் இல்லாம பேசத் தெரியணும்! அவ்வளவுதான்!''

- சம்பத் குமாரி



''பொது அறிவில் நம்ம தலைவர் ரொம்பவும் மோசமா இருக்கார்.''

''எப்படி?''

''கௌரவ டாக்டர் பட்டம் அவருக்குக் கொடுக்கும்போது, இது அலோபதியா ஹோமியோபதியான்னு கேட்டாரே.''

- பொள்ளாச்சி கே.சித்ரா





''பாவம், அந்த நடிகர்!''

''ஏங்க?!''

''அவர் அரசியலுக்கு வரப்போறேன்னு அறிவிச்ச உடனேயே, 'நாளைய ஊழலே வருக'ன்னு போஸ்டர் அடிக்க ஒட்டிட்டாங்க!''

- அனன்யா



திரும்பிப் போய்விடுவாரா?



திப்பு சுல்தான் ஹிந்துக்களைப் பலாத்காரமாக மொட்டையடித்து இஸ்லாம் மதத்தில் சேர்த்ததாகவும் நாம் சரித்திரப் புத்தகங்களில் படித்தது உண்டு. அவ்வளவு மத பக்தி அவனுக்கு இருந்திருக்கக் கூடும் என்று சில காரணங்களால் நம்ப முடியாமலிருந்தது. உதாரணமாக, ஹைதரும், திப்பு சுல்தானும் வாழ்ந்து, அரசு புரிந்து, போரிட்டு, உயிர்துறந்த அந்த ஸ்ரீரங்கப் பட்டணத்தில் இரண்டு பெரிய கோயில்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று பிரசித்தி பெற்ற ரங்கநாதர் கோயில். இந்தக் கோயில் ஏறக்குறைய ஆயிரம் வருஷத்துக்கு முன்னால் கட்டப்பட்டது (ஸ்ரீரங்கபட்டணம்

அமரர் கல்கி 'ஆதிரங்கம்' என்று வழங்கும் பிரசித்தி பெற்ற க்ஷேத்திரம் என்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம்). அப்படிப்பட்ட இடத்தில், தன்னுடைய சொந்த ஆதிக்கத்தில் இருந்து வந்த அந்தப் புராதனக் கோயிலை இடிக்காமல் விட்ட திப்பு சுல்தானா ஹிந்துக்களை பலாத்காரமாய் இஸ்லாம் மதத்தில் சேர்த்திருக்கப் போகிறான்? எனக்குத் தோன்றவில்லை.

கோயிலுக்குள் சென்று ஸ்ரீரங்கநாதரைச் சேவித்தோம். நமது தெய்வங்களுக்குள் ரங்கநாதரைப் பற்றி மட்டும் எனக்கு எப்போதும் கொஞ்சம் பயம். "பகவானே! தாங்கள் இருக்கிற இடத்திலேயே என்றைக்கும் இருந்து அருள் புரியுங்கள்" என்றுதான் பிரார்த்திப்பேன். ஏனென்றால், பகவான் ஒரு நாள் தமது படுக்கையைச் சுருட்டிக் கொண்டு நம்முடைய வீட்டுக்கு வந்து, படுக்க இடம் கேட்பாரானால் ஆபத்தாய்ப் போய் விடும்.

கல்வெட்டுகள்

அவருடைய படுக்கையைப் பார்த்ததும் வீட்டை அவரிடமே விட்டு, விழுந்தடித்து ஓடிப் போக வேண்டியது தான். பாம்பென்றால் படையும் நடுங்கும் பொழுது, நாம் எம்மாத்திரம்?

ஒரு திருப்தி மட்டும் நமக்கு உண்டு. நம்ம வீட்டில் எந்த அறையும் அவர் படுத்துக் கொள்வதற்கு வேண்டிய நீளமுடையதாயிராது. படுக்கையை விரித்துப் பார்த்துவிட்டு முடியாமல் தாமே திரும்பிப் போய்விடுவார்.

- 'கல்கி களஞ்சியம்' நூலிலிருந்து...

முதல் தரிசனம்...

கண்டேன் வைகுண்ட தரிசனம்!



ஜயேந்திர சரஸ்வதி கல்லூரி நிறுவனங்களின் சேர்மன் தனலட்சுமி ஜெயச்சந்திரன்:

"**கோ**வை சத்ய சாயி சமிதியில் இருந்து எங்கள் மாண வர்கள் 108 பேரைத் தேர்ந் தெடுத்து புட்டபர்த்திக்கு வாலண்ட்டியர்ஸ் ஆக 15 நாட் களுக்கு அனுப்பச் சொன்னார் கள். பெற்றோர்கள், கல்வி அதிகாரி இவர்களிடம் அனுமதி வாங்க இரண்டு மாதங்கள் போராடினோம். எத்தனையோ பேர் ஆண்டுக் கணக்கில் காத்துக் கொண்டிருந்தும் கிடைக்காத அரிய வாய்ப்பு. தங்கத் தேரை சுத்தம் செய்வது, சுவாமிகளின் பூஜை அறை, விருந்தினர் தங்கும் அறை, மருத்துவமனை யைச் சுத்தம் செய்தல் ஆகிய பணிகள் என் மாணவர்களுக்குக் கிடைத்திருந்தது.

அவர்கள் அங்கு இருக்கும் பொழுதே என்னைத் திடீர் என்று புட்டபர்த்திக்கு வரும்படி ஃபோன் வந்தது. எத்தனையோ அவசர வேலைகளையும் ஒத்தி வைத்துவிட்டுக் கிளம்பி ஓடி னேன். முதலில் பின்னால்தான் அமர முடிந்தது. வி.ஐ.பி.பாஸ் கிடைத்தும் தூண் மறைவில் அமர்ந் தேன். பாபாவின் தரிசனம் கிடைக்கா மல் அல்லாடினேன். ஆதங்கப்பட்டேன்.

திடீரென அங்கு உயர் பொறுப்பில் இருந்த அமெரிக்கப் பெண்மணி ஒருவர் என்னைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய் முதல் வரி சையில் அமர வைத்தார்.



ஆஹா! ஒரு பக்கம் வேதங்கள் முழங்க, பக்தி இசை ஒலிக்க, தெய்விக நறுமணம் கமழ, பல சூரியன்கள் அங்கு உதித்திருப்பது போல் ஒளி வெள்ளம். இலட்சக் கணக்கானோர் அமர்ந்திருந்தும் இனம் புரியாத தெய்விக மணத்துடன் அத்தனை ஒரு பேரமைதி. இதற்கு எல்லாம் மையமாக பாபா காட்சி தந்தார்! ஒரே ஒரு கணம் வைகுந்த தரிசனம். இப்படித்தான் இருக்கும் என்று என் மனம் எண்ணியது.

பரவசத்தில் என்னை அறியாமல் எனது இரண்டு கை களையும் தலைக்கு மேல் உயர்த்தி பாபாவை வணங்கி னேன். அப்பொழுது பாபா தனது மடி மீது வைத்திருந்த தனது கரத்தை மெல்ல உயர்த்தி, தனக்கே உரித்தான புன்னகையுடன் என்னை ஆசீர்வதித்தார். அன்று முதல் நான் பாபாவின் அடிமையானேன். இதுதான் என் முதல் தரிசன அனுபவம்."

படம்: **கோவை பாலா**

■ தனலட்சுமி ஜெயச்சந்திரன்

பேங்க்?

செல்வம்,
மங்களபுரம்

நான் ஒரு தனியார் வங்கியில் வாங்கிய வீட்டுக் கடனை முழுமையாக அடைத்து விட்டேன். ஆனால், அவர்களிடம் இருந்து இன்னும் என்னுடைய வீட்டின் சொத்துப் பத்திரம் வரவில்லை. தேடிக்கொண்டு இருக்கிறார்கள். பலமுறை போய் கேட்டுவிட்டேன். ஒவ்வொருமுறையும் தேடுவதற்கான நேரத்தைத்தான் நீட்டித்துக்கொண்டே இருக்கிறார்கள். நான் என்ன செய்யவேண்டும்? சொத்துப் பத்திரம் காணாமல் போய் விட்டால், மீண்டும் பத்திரத்தைப் பதிவுத் துறையில் இருந்து பெற முடியுமா?

டி.பாலசுந்தரம்:

"சொத்துப் பத்திரம் தொலைந்து போவது சாதாரண விஷயமல்ல. இது பல பிரச்னைகளை உங்களுக்குத் தரலாம். தொலைந்த பத்திரம் சொத்தின் மீது உங்களுக்கு உள்ள பிடிமானத்தை நன்றாகக் குறைக்கவே செய்கின்றது. நீங்கள் சொத்தை விற்க நினைத்தால் வாங்க முயற்சிப்பவர்கள் உங்கள் சொத்தை சந்தேகக் கண்ணுடனே பார்ப்பார்கள். ஒரு சொத்தின் உரிமையாளர் சொத்துப் பத்திரத்தை சிம்பிளாக ஒரு வங்கியில் கொடுப்பதன் மூலமே (மார்ட்கேஜ் பதிவு தேவையில்லை) 30 வருடம் வரை செல்லுபடியாகும் படியான கடனுக்கான அடமானத்தை (மார்ட்கேஜ்) ஒருவர் வங்கிக்குச் செய்து கொடுக்கலாம். எனவே, ஒரிஜினல் பத்திரம் இல்லாமல் சொத்தை ஒருவர் உங்களிடம் இருந்து டிமாண்ட் டிராப்ட் கொடுத்து வாங்கிப் பத்திரப் பதிவு செய்து கொண்டால் கூட, வங்கி அந்தச் சொத்தின் மீது க்ளைம் போட்டால் சொத்து வங்கிக்குத்தான் சொந்தமாகும். அதனால்தான்,



டி.பாலசுந்தரம்



மூலதனம், சட்டம், நுகர்வோர் பாதுகாப்பு சம்பந்தமான கேள்விகளை 'கொஸ்டின் பேங்க்' செல்ஃபோனில் KAFIN என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, கேள்வி, பெயர், ஊர்

பத்திரத்தை பத்திரமாக மீட்பது எப்படி?

சொத்தை வாங்குபவர்கள் மிகவும் பயப் படுவார்கள். அல்லது சொத்தின் மதிப் பைத் தாறுமாறாகக் குறைத்து விலை கேட் பார்கள். அதேபோல் ஒரிஜினல் பத்திரம் இல்லாத இந்தச் சொத்தின்மீது யாரும் கடனும் கொடுக்க மாட்டார்கள். எனவே, இதனைக் கொஞ்சம் ஜாக்கிரதையாகக் கையாளவேண்டும்.

காணாமல் போன சொத்துப் பத்தி ரத்தின் அத்தாட்சி பெற்ற நகலை அந்தச்



சொத்து இருக்கும் இடத்துக்கு சம்பந் தப்பட்ட பத்திரப் பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இந்த விதமாக விண்ணப்பித்துப் பெறுவது நீங்களாகவே பத்திரத்தைத் தொலைத்தால் வேறு வழியில்லை என்று நியாயப்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் சொல்வதைப் பார்த் தால் பத்திரம் தொலைந்தது வங்கியின் தவறு போல் தோன்றுகிறது. எனவே, வங்கியி லிருந்துதான் தொலைந்தது என்பதற்குச் சரியான மற்றும் நிலையான ஆதாரங்களை உருவாக்கிக்கொள்வதுதான் உங்கள் தரப்பில் மிகச்சிறந்தது. அதாவது, வங்கியை விட்டே வங்கியின் கையில் இருக்கும் போதே பத்திரம் தொலைந்து போனதை உறுதி செய்வதற்காக ஒரு போலிஸ் கம்ப் ளெயின்ட் கொடுக்கச் சொல்லியும், உங்களுக்கு அந்த கம்ப்ளெயின்டை யும் இணைத்துப் பத்திரம் தொலைந்துபோன விவரத்தைத் தெரிவிக்கும் வகையில் கடிதத் தையும் நீங்கள் பெறவேண்டும். மேலும், அந்தக் கடிதத்தில் உங்கள் லோன் முடிந்துவிட்ட விஷயத்தையும் வேறெந்த விதமான அடமானமும்/ பிடிமானமும் அந்த வங்கிக்கு உங்கள் சொத்தில் கிடையாது என்பதையும் தெளிவு படுத்தியும் வாசகங்கள் இருக்க வேண்டும். உங்களைப் பத்திர அத்தாட்சிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறு அந்தக் கடிதம் கேட் டுக்கொள்ள வேண்டும். இதுபோக வேறு ஏதாவது சட்டரீதியாக உறுதிசெய்ய என்னென்ன நடவடிக்கை உண்டோ அத்தனையையும் எடுத்துக் கொள்ளுங்கள். எதற்கும் உங்கள் ஊரில் உள்ள சிவில் விவகாரத்தில் சிறந்த அனுபவமிக்கதொரு வழக்கறிஞர் ஒருவரைக் கலந்து கொண்டு மேற்கொண்டு முடிவெடுங்கள்.''

று குறிப்பிட்டு அனுப்பலாம். kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம்.
யவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.



உலகம் சுற்றிய வாலிபன்!

அவர் உலகம் சுற்றிய தமிழர், உலகத்தைப் பலமுறை சுற்றியிருக்கிறார்! எதற்காக காந்தியைத் தேடி... ஒரு லட்சம் மைல் தூரம் பயணம் செய்து நூற்றுக்கும் மேற்பட்ட ஒளிப்பதிவுக் கலைஞர்களைச் சந்தித்து, காந்திப் படங்களைத் திரட்டியிருக்கிறார்? அதுவும் இனவெறி தலைதூக்கிய காலங்களில். 1937-1940 வரையில் உலகம் முழுவதும், தான் சேகரித்த காந்தி பற்றிய படங்களுடன், அவரே காந்தியைப் பல்வேறு சூழ்நிலைகளில் ஒளிப்பதிவு செய்த படங்களையும் அத்துடன் இணைத்து காந்தியைப் பற்றிய ஆவணப்படம் ஒன்றைத் தயாரித்தார். இந்தியாவின் முதல் ஆவணப் படம் என்ற பெருமையும், காந்தி வாழ்ந்த காலத்திலேயே அவரைப் பற்றி எடுக்கப்பட்ட முதல் ஆவணப்படம் என்ற பெருமையும் அந்தப் படத்துக்கு உண்டு.



அப்படி ஓர் படத்தை உருவாக்கியவர் வேறு யாருமல்ல; 'ஏ.கே.செட்டியார்' என்று அறியப்பட்ட அ.கருப்பன் செட்டியார், சுமார் 50,000 அடி நீளமுள்ள அந்தப் படத்தை 12,000 அடி நீளமுள்ள ஒரு தொடர்ச்சியான படமாக உருவாக்கினார். உலகம் முழுவதும் புகழ்பெற்ற அந்தப் படத்தை எடுத்த ஏ.கே.செட்டியார், 'காந்தியைப் படம் எடுப்பது அவ்வளவு சுலபம் அல்ல. கேமராவுக்குச் சிக்கவே மாட்டார். அப்படியே சுற்றிவளைத்துப் படம் பிடித்தாலும் முகத்தை மறைத்துக் கொள்வார்' என்று தெரிவித்திருக்கிறார். இந்தப் படத்தினை உருவாக்கும்போது ஏ.கே.செட்டியாருக்கு வயது 29. அபூர்வமான அந்தப் படத்தினை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தின் தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம், மாணவர்களுக்காகத் திரையிட்டது.

அதிகம் அறியப்படாத, ஆனால் அறிய வேண்டிய கலைஞர் அவர். ஒருவர் கண்ணிலும் படாமல் எவர் நெஞ்சிலும் உதிக்காமல் ஏ.கே.செட்டியார் நூற்றாண்டு கடந்து விடுமோ என்று அவரைப் பற்றி அறிந்தவர்கள் எண்ணிக்கொண்டிருந்தபோது ஒருவரும் எதிர்பாராத வகையில் பல்கலைக் கழகம் நவம்பர் 3 அன்று அவரின் நூற்றாண்டு விழாவினைத் தொடங்கி வைத்தது. விழாவில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கல்யாணி அன்புச் செல்வன், ''தமிழ், வரலாறு, பண்பாடு, ஊடகவியல் துறைப் பாடங்களில் ஏ.கே. செட்டியாரைப் பற்றிய பாடங்கள் இடம்பெற வகை செய்யப்படும்'' என அறிவித்தார்!

அந்தக் காலத்திலேயே ஜப்பான் - அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று கேமரா தொழில் நுட்பங்களைக் கற்று, பன்னாட்டு நிறுவனங்கள் பலவும் கொழுத்த சம்பளத்துக்கு அழைத்தும் காந்திப் படம் எடுப்பதற்காகவே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவருக்கு நூற்றாண்டு விழா எடுத்த தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம் பாராட்டுக்குரியது.

- பா.யாழினி



தண்ணீர் தந்த தயாளன்!

என் குழந்தைகளின் தாகம்!

சுமார் 45 லட்சம் மக்கள் தொகை கொண்ட சென்னை நகரத்தின் தினசரி குடி நீர்த் தேவை 75 கோடி லிட்டர். ஆனால் நமக்கு சப்ளை ஆவதோ இதில் மூன்றில் ஒரு பங்கு கூட இல்லை. இந்நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு, ஜனவரி 2002ஆம் ஆண்டில் சத்ய சாயி பாபா, எந்த அரசாங் கத்தையும் எதிர்பார்க்காமல் தாமே 200 கோடி நிதி ஏற்பாடு செய்வதாகக் கூறினார். ஆந்திர அரசு அதற்கான அனுமதியை வழங்க, அதே ஆண்டு ஜூலை மாதத்தில் சாய் கங்கா திட்டம் தொடங்கப்பட்டது.

கண்டலேறு அணையைச் சீர்படுத்தி, அதன் கொள் ளளவு நான்கு மடங்காக அதிகரிக்கப்பட்டது. அங்கிருந்து பூண்டி ஏரிக்கு கிருஷ்ணா நதி நீர் வரும் சுமார் 150 கி.மீ. கால்வாயையும் புதுப்பிக்கும் பணி ஒன்றரை வருடம் சுறுசு றுப்பாக நடந்தது. சுமார் 8000 தொழிலாளர்கள் இரவு பகலாக உழைத்தார்கள்.

2004ஆம் ஆண்டு நவம்பர் 23 பாபாவின் 79வது பிறந்த நாளன்று கண்டலேறு அணை திறக்கப்பட்டு, சத்ய சாய் கங்கா கால்வாய் வழியாக கிருஷ்ணா நீர் நான்கே நாட்களில் பூண்டி ஏரியை வந்தடைந்தது.

நன்றி சொல்ல பாபாவிடம் மக்கள் வந்தபோது... 'தாகத்தில் தவிக்கும் என் குழந்தைகளுக்குத் தண்ணீர் கிடைத்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி!' என்கிறார் பாபா.

– மௌலி



வாசகர் அனுபவம்

சர்வம் சாய் மயம். சாயி நாதனின் மகிமை எனக்கும் வாய்த்ததுதான் வரப் பிரசாதம். நான் ஒரு நல்ல நிறுவனத்தில் வேலை செய்ய வேண்டும் என்பது என் அம்மாவின் ஆசை. பணம், சிபாரிசு மூலம் வேலை வாங்க என்னால் முடியாது. வேலைக் காக பாபாவுக்கு ஒரு கடிதம் எழுதி ஒரு சாய் பக்தரிடம் கொடுத்தனுப்பினேன். ஒரு வாரத்தில் பாரம்பரியமிக்க நல்ல நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அன்றிலிருந்து நான் சாய் அடிமை!

– எஸ்.குமரேசன், பூந்தமல்லி

சென்னையில் மட்டுமல்ல; ஆந்திராவில் கடும் குடிநீர்ப் பிரச்னை நிலவும் மாவட்டங் களிலும் தாகம் தீர்த்திருக்கிறது சத்ய சாயி மத்திய அறக்கட்டளை. அதன்படி, 300 கோடி ரூபாய் செலவில் அனந்தப்பூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டத்தின் மூலம் 730 கிராமங்களின் 12 லட்சம் பேர் பயன டைந்துள்ளனர். 27 கோடி ரூபாய் செலவில் மேடக் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டத்தால் 179 கிராமங்களைச் சேர்ந்த நாலரை லட்சம் மக்கள் பயனடைந்திருக்கிறார்கள். மகபூப்நகர் மாவட்டத்தின் 141 கிராமங்களின் மூன்றரை லட்சம் பேர் பயனடையும் வகையில் 26 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன.

கனவு பல காட்டல்!

கனவில் வந்த ஒட்டகம்!

'**பு**கைச் சுவருக்கு அப்பால்' என்ற யுவன் சந்திரசேகரின் கவிதை தொகுப்பில் 'கனவில் வந்த ஒட்டகம்' என்ற தலைப்பில் ஒரு கவிதை இருக்கிறது. இத்தொகுப்பு வெளியான ஆண்டிலிருந்து (2002) இ கவிதையை நான் சிலமுறைகளாவது நினைவுக்குக் கொண்டு வந்திரு பேன். கவிதையின் தலைப்பே சிந்திக்கத் தூண்டுகிற ஒன்று. கனவி ஒட்டகம் வந்தது என்றால் கனவு ஒரு பிரதேசமாகவும் அங்கு ஒ ஒட்டகம் வந்தது போலவும் பொருள்படுகிறது. ஒட்டகம் இந்தப் பிரதே சத்துக்கு வெளியே இருந்து இதற்குள் பிரவேசிப்பதாகவும் நினைக்கத் தூண்டுகிறது. இக்கவிதையில் ஒரு புலியும் உள்ளது ஆனால் அது கனவில் வந்ததாகக் கூறப்படவில்லை. இரு தாலும் கனவில் வந்ததாகத்தான் வைத்துக்கொள்ள வேண் டும்.


ஞானக்கூத்தன்

நிம்மதியற்று வன்மமாய் / நடை பழகின புலி

அது ஒட்டகம் நின்றிருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டு வதற்காக மட்டுமே புலி, அதன் கூண்டு, உதவுகிறது கனவில் புலி வந்தது என்று கவிதை அமையாததற்கு காரணம் என்ன? பயமற்ற கனவைக் கூற வேண்டும் என்பதற்காகவா? புலியும் ஒட்டகமும் ஒன்றுக்கு மற்றது மாற்றானதாகக் கவிதையில் காட்டப்படுகிறது. புலி நிம்மதியற்று இருக்கிறது. அதன் நடை வன்மமாக இருக்கிறது. ஆனால் அது கூண்டில் அடைபட்டிருக்கிறது. ஒட்டகம் புலியைப் போல கானகத் தில் வாழும் விலங்கல்ல. பாலையில் வாழ்வது. புலியின் நடையும் அதற்குரிய வன்மமும் விசேஷமாகக் குறிப்பிடப்படுவதால் அது கூண் டுக்குள் வர நேர்ந்ததைப் பற்றிய ஒரு கதை இருப்பது போல் தொனிக் கிறது. ஒட்டகமும் அதன் திணையை விட்டு அகற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அகற்றலைப் பற்றிப் பெரிய பாதிப்புடையதாக ஒட்டகம் காட்டப்படவில்லை.

ஒட்டகம் ஏதோ ஓர் இலையையோ / ஞாபகத்தையோ/ அசை போட்டபடி/ நின்றிருந்தது /கனவில் வந்த அதே இடம்

என்கிறது கவிதை. ஆனால் இடம் என்று பொதுவாகக் கூறப்பட்டிருக் கிறதே தவிர அது ஓர் உயிர்த்திருக்கும் விலங்குகளின் நிலையம் என்றோ அது ஒரு சர்க்கஸ் கூடாரத்துக்கு வெளிப்புறம் என்றோ கூறப்பட வில்லை. கனவைச் சூழ்ந்திருக்கும் வெளி, பல சமயங்களில் அடையாளம் காண முடியாதபடி அமைந்துவிடும். இந்த இரண்டு இடங்களில் ஒன் றைக் கூறினாலும் கனவுக்கு உரியதான இருண்மை கவிதைக்குக்

4



* யுவன்

கிடைக்காமல் போய்விடும். 'கனவில் வந்த அதே இடம்' என்பது கனவு கண்டவருக்கு மட்டுமே புலனாகக்கூடிய ஒன்று. எனவே கவிதையில் குறிப்பிடப்படும் கூற்று, தனக்குத் தானே சொல்லிக் கொண்டதாகும்.

என் கனவில் / தான் வந்ததை / ஒட்டகம் அறியுமா?

என்கிறது கவிதையின் அடுத்த கட்டம். இந்தக் கேள்விதான் விஷயத்தைக் கவிதையின் பக்கம் நகர்த்துகிறது.

ஒரு வேளை/ தான் கண்ட அதேநேரம் / அதே கனவை / ஒட்டகமும் கண்டிருந்தால்/ கேட்கும் அவசியம் நேராது

அதே கனவென்றால், என்ன கனவு? கனவில் வந்த ஒட்டகம் ஏதாவது செய்ததா? இவை எல்லாம் சொல்லப்படவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயமாகக் கூறலாம்.

பின்னொருநாள்/ அதைப் பார்க்கப் போனேன்.

என்று சொல்லப்படுவதால் கனவில் வந்த ஒட்டகம் கனவைக் கண்டவனிடம் நேசத்தைத் தான் உண்டு பண்ணியிருந்தது என்று நிச்சயமாகச் சொல்லலாம். 'அந்த ஒட்டகத்தைப் பார்க்கப் போனேன்' என்று கவிதை சொல்லியிருந்தால் கூட சற்று அன்னியத் தன்மை இருப்பதாகக் கொள்ள முடியும். ஆனால் 'அதை' என்ற சுட்டு மிகவும் சுருக்கமாக நேசத்தைத்தான் உணர்த்துகிறது.

கவிதையின் கடைசிப் பத்தி பௌதிக உலகத்தையும், அனுபவித்ததைப் படிமமாக மாற்றி ஆராயும் அபௌதிக மன உலகத்தையும் இடைவெளியையும் பற்றிப் பேசிக் கவிதையைப் பிரகாசமாக்க முயல்கிறது.

...அப்போது/ கனவுக்கும் இப்போதுக்குமான/ இடைவெளியும்/ இருக்காதோ

என்று முடிகிறது கவிதை. இவனது கனவில் வந்த ஒட்டகம் அப்படி அவன் கனவில் வந்ததை அறியுமா என்று கேட்கிறது கவிதை. தனித்தனியான இரண்டுபேர் ஒருவர் கனவில் மற்றவர் நுழைய முடியுமா?

'விழிப்பில் கிட்டும் அனுபவம் எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் கனவில் கிட்டும் அனுபவம் அதைக் காண்பவனுக்குப் பிரத்தியேகமானது' என்றார் கௌடபாதர். கனவைப் பொத்திக் கொண்டு கை நீட்ட முயல்கிறது யுவன் சந்திரசேகரின் கவிதை.

யதார்த்த உலகின் விதிகளைப் புறக்கணித்து யதார்த்த உலகின் பொருள்களைக் கொண்டே ஓர் உலகத்தை எழுப்புகிறது கனவு. கனவில் மனநிலை ஒரு திணையாகலாம். ஒரு பொருள் மற்றொரு பொருளாகலாம். இப்படி மாற்றம் செய்யக்கூடிய கனவின் ஆற்றல் மற்றொரு மனத்தை எட்ட முடியுமா என்ற கேள்வியை எழுப்பிப் பார்க்கிறது யுவனின் கவிதை. எண்ணம் சர்வ வியாபகத் தன்மை உடையதென்றால், கனவும் அதன் விளைவைத் தோற்றுவிக்க முடியுமோ?

(அடுத்த வாரம் பார்ப்போம்...)



ஆறறிவு கொண்ட மனிதப் பிறவிக்கு, ஆனந்தப் பாதைகளாக விளங்குபவை ஐம்புலன்களாகும். கண், செவி, நாசி, நா, மேனி என்னும் ஐந்து பொறிகளும் அவற்றின் செயல்பாடுகளால் கிடைக்கும் புலன் அனுபவங்களும் இல்லாமல் வாழ்க்கையில்லை. சொல்லப்போனால், மனிதன் பெறுகிற அறிவு, இந்த ஐந்து பாதைகளில் ஏதேனும் ஒன்றின் வழியாகத்தான் வரவேண்டும்.

ஆனந்தப் பாதைகளான இவையே, ஆற்றல் பாதைகளாகவும் விளங்குகின்றன. மானுட வாழ்க்கையைத் தேர் என்று உருவகப்படுத்தினால், அந்தத் தேரை இழுக்கிற குதிரைகளே

ஆனந்தப் பாதை!

புலன்களாகும். தேருக்கான ஆற்றல், தேர் உருண்டோடுவதற்கான ஆற்றல், தேரிலிருந்து வராது: குதிரைகளிலிருந்து மட்டுமே வரும். குதிரைகளின் ஆற்றலே தேரை அசைத்து, இழுத்து, உருண்டோடச் செய்கிறது. ஆகவே, புலன்களை இன்பமுறச் செய்தால், ஆனந்தமும் ஆற்றலும் கிடைத்து விடும்.

புலன்களைத் திருப்திப்படுத்த ஒருவர் புறப்பட்டார். 'நல்ல இசை கேட்டால் நலம்' என்றது செவி. வீணையிசையை விடவும் நல்லிசையுண்டோ! வீணைக் கச்சேரியில் போய் அமர்ந்தார். காதுகளில் நாதம் நிறைந்தாலும், அரங்கின் செயற்கை விளக்கு, கண்களை உறுத்தியது. 'இதுவே குளிர்நிலவாக இருந்தால் எப்படியிருக்கும்?' -எழுந்தவர், அரங்கின் வெளிப்பகுதிக்கு வந்தார். தலைக்கு மேலே தண்ணிலவு, எட்டிப் பார்த்து இனிமையாய்ச் சிரித்தது. கண்ணுக்குக் களிப்பு கிட்டினாலும், குளிர்காற்று உடலைச் சூழ்ந்தபோது, 'இதுவே மென்மைத் தென்றலானால், எவ்வளவு மேன்மை' என்று சருமம் சொன்னது; தென்றலைத் தேடி மேனியும் நகர்ந்தது.



இவ்வாறே ஒவ்வொன்றாய்... தென்றல் தொட்டால் உடலுக்குச் சுகம்; இளவேனில் காலத்துக் காய்களும் கனிகளும் நாவுக்குச் சுகம்; பொய்கைக் கரையில், வண்டுகள் ரீங்காரித்துக் கொண்டிருக்கும் தோட்டத்தில் மலர்ந்திருக்கும் மலர்களின் வாசம், நாசிக்குச் சுகம். இப்படி, ஒவ்வொரு புலனுக்கும் ஒவ்வொரு சுகம். ஆனாலும் ஒரு சங்கடம்; ஒன்று கிடைத்தால், மற்றது கிடைப்பதில்லை.

அனைத்துப் புலன்களும் சுகப்பட்டால், வாழ்க்கைத் தேருக்கான ஆற்றல் அதிகப்படும். என்ன செய்யலாம்?

எல்லாப் புலன்களும் இன்பமடைகிற இடத்தை அடைந்துவிட்டால் போயிற்று! அந்த இடம் எங்கே இருக்கிறது?

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும்
போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே


(திருநாவுக்கரசர் -- தனிக்குறுந்தொகை -- 01)

அனைத்துப் புலன்களும் ஆனந்தமடையும் இடத்தை அடையாளம் காட்டுகிறார் அப்பர் பெருமானாம் திருநாவுக்கரசர். இறைவனுடைய இணையற்ற திருவடிகளில், வீணையின் நாதசுகமும், மாலை நேரத்து நிலவின் மெல்லொளியும், தென்றலின் குளிர் வருடலும், இளவேனிற் காலத்துக் கனிச்சுவையும், பொய்கைப் பூங்காவின் வாச மணமும் வற்றாது கிட்டும். ஆண்டவன் பாதை -- அது ஆனந்தப் பாதை -- அதுவே ஆற்றலின் பாதையாகும்.

(மந்திரம் ஒலிக்கும்...)

இடம்பெறும் ஒவ்வொரு அனுபவத்துக்கும் பரிசு ரூ.50/- சன்மானம் உண்டு!

எனக்குப் பிடித்த பாடல்!



நான் மிகவும் ரசித்த பாடல் கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய ஜீன்ஸ் படத்தில் வரும்,

''பூவுக்குள் ஒளிந்திருக்கும்
கனிக் கூட்டம் அதிசயம்
வண்ணத்துப்பூச்சி உடம்பில்
ஓவியங்கள் அதிசயம்''

என்று தொடங்கும் பாடல் வரிகளும் காட்சி அமைப்புகளும் பார்வையாளரை, உலக அதிசயங்கள் இருக்கும் இடங்களுக்கே கொண்டு செல்வது போல் இருக்கும். வைரமுத்து, உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் எந்த ஒரு நிகழ்வையும் கவிதையாக, பாடல்களாக உருவாக்கிவிடுகிறார்.





''**வ**ளையோசை கலகலகலவென கவிதைகள் படிக்குது'' என்ற பாடல் வரிகளே வளையோசைபோல் கலகலவெனச் செவிகளில் விழுகிறது. இப்பாடலுக்கு இசை அமைத்த இளையராஜாவின் இசையும் சோடை போகவில்லை. எஸ்.பி.பாலசுப்ரமணியம் பாடும்போது, அவர் குரலும் தடுமாறவில்லை. இதைச் செவிமடுக்கும் நம் மனம்தான் நிலை தடுமாறும். பாட்டும் இசையும் இப்படித்தான் இருக்கணும். என் மனத்தை மிகவும் கவர்ந்த பாடல் இது.







- ஆர்.உத்ரா,
சென்னை - 91

உனக்கும் கூட வோட்டு!



மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று- (அவன் நான் மனிதன் படத்தில்) நடிகர் திலகம் சிவாஜி விரக்தியாகப் பாடும் பாடலின் இறுதி வரிகளில்...

தந்தை தவறு செய்தார்
தாயும் இடம் கொடுத்தாள்
வந்து பிறந்து விட்டோம்
வெறும் பந்தம்
வளர்த்து விட்டோம்...

என்ற வாழ்க்கைத் தத்துவ வரிகள், எனக்குப் பிடித்த பாடல் வரிகள்.

- த.ஜெகன், சாலூர்



இதேபோல் இன்னொரு வரி...

"ஒரு வாசமில்லாக்
கிளையின் மேல்
ஒரு வாசமுள்ள பூவைப்பார்
பூவாசம் அதிசயமே!"

என்ற வரிகள் என்னை மெய்சிலிர்க்க வைத்த வரிகளாகும்.

- சு.மோகன், மங்கலம்

வாசகர்களே!
உங்களுக்குப் பிடித்தமான பாடல்
என்னவென்று 10 வரி
கமெண்ட்டுடன் எழுதி அனுப்புங்க...
kalki@kalkiweekly.comக்கும்
அனுப்புங்க.

சமுதாயத்தையே சந்திரபாபுவின்
"சிரிப்பு வருது சிரிப்பு வருது
சிரிக்கச் சிரிக்கச் சிரிப்பு வருது..."

என்ற பாட்டின் மூலம் படித்துவிட முடிகிறது. அரசியல்வாதிகளின் செயல்களைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல் அமைந்த சொற்கள் அற்புதம். "மேடை ஏறிப் பேசும் போது ஆறு போல பேச்சு கீழே இறங்கிப் போகும்போது சொன்னதெல்லாம் போச்சு"

"காசை எடுத்து நீட்டு கழுதை பாடும் பாட்டு / ஆசை வார்த்தை காட்டு உனக்கும் கூட ஓட்டு"





ஒவ்வொரு வரியையுமே அனுபவிச்சு எழுதியுள்ளார் கவிஞர் அன்றே. உண்மையிலேயே இந்தப் பாட்டைக் கேட்கும்போதெல்லாம் சந்திரபாபுவின் அபிநயங்களும், பாடல் வரிகளில் உள்ள கிண்டலும் சேர்ந்து நம்மைச் சிரிக்க வைக்கிறது. இன்றைய சூழலுக்கு மிகப் பொருத்தமான பாட்டு என்றால் மிகையல்ல.

- மன்னை சதிரா,
மன்னை-614 012



எலிசபெத் ராணி, சென்னை வந்தப்போ, தமிழக அரசு சார்பா, அவங்களுக்கு விருந்து கொடுத்தாங்க. அப்போதான் கமலோட ட்ரீம் ப்ராஜக்ட் 'மருதநாயகம்' ஷூட்டிங்கையும் ராணி பார்த்தாங்க. மேடையில் எலிசபெத் ராணி, கலைஞர், ஸ்டாலின், பிரிட்டிஷ் ஹை-கமிஷ்னர் உட்காரணும். சுத்தி, இருநூறு பேர். எல்லோருக்கும் ஃப்ரெஞ்சு ஃபைன் டைனிங் ஸ்டைல்ல ஒரே நேரத்துல சர்வீஸ். நாலு கோர்ஸ் மீல்ஸ். சூப், ஸ்டார்ட்டர், மெயின் கோர்ஸ், டெஸர்ட்.

டின்னர் நடக்கற ஹால், 25,000 சதுர அடி கொண்ட மிகப் பெரிய ஹால். அதுக்கு எட்டு வாசல். ஒவ்வொரு வாசல்லேயும் ஒரு கிச்சன் செட் பண்ணினோம். அப்போதான், ஒரே நேரத்துல ஐட்டம்களை பிக்-அப் பண்ணி சர்வ் செய்ய முடியும். மேடையை ஒட்டி இருக்கிற கிச்சன்தான் ராணிக்கானது. அங்க, மேடையில் இருக்கற நாலு பேருக்கு மட்டுமே சமைச்சா போதும்.

ஒரே போட்டி. யாரு ராணியோட கிச்சன்ல இருக்கிறது? கடைசியா நானு, நடராஜன், சர்க்கார்னு மூணு சீனியர் ஷெஃப்கள் தேர்வானோம்.

ராணி வர அன்னிக்குக் காலையில, பாதுகாப்பு அதிகாரிகள் எல்லா இடத்தையும் சானிடைஸ் பண்ணி, முழு கண்ட்ரோல் எடுத்துக்கிட்டாங்க. உள்ளே போய் வெளியே வரவே, பயங்கர பாதுகாப்பு.

சாயங்காலம் எல்லாரும் வர ஆரம்பிச்சுட்டாங்க. பிரிட்டிஷ் கவுன்சில் சார்பா 110 பேர், தொழிலதிபர்கள், பெரிய மனிதர்கள் 90 பேர். சரியான நேரத்துக்கு விருந்து ஆரம்பிக்குது. ராணி பக்கத்துல இருக்கிற கிச்சன்ல நாங்க பரபரப்பா இருக்கோம். எல்லாம் நொடி பிசகாம நடக்கணும். ஒவ்வொரு ஐட்டத்தையும் தயாரிக்க இவ்வளவுநேரம் ஆகணும் கணக்கு வேற!

சூப்பர் ஷெஃப் வெங்கடேஷ் பட்

முதல்ல, சூப். ராணி, மஷ்ரூம்ல செஞ்ச சூப் சாப்பிட்டாங்க. அடுத்தது, சிக்கன் சாலட் ஸ்டார்ட்டர் அனுப்பி வைக்கிறோம். சாப்பிடறாங்க. அடுத்தது, மெயின் கோர்ஸ். அதுல மூணு வகை. பிரான், சிக்கன், வெஜிடேரியன். எதை வேணும்னாலும் ராணி ஆர்டர் செய்யலாம். காத்துக்கிட்டிருக்கோம்.

ராணி, பிரான் டிக்கா சொல்றாங்க. கலைஞரும் மத்தவங்களும் வெஜிடேரியன், சிக்கன் மெயின்



கோர்ஸ் சொல்றாங்க. 'மெயின் கோர்ஸ் பிக்-அப்' ஆர்டர் வந்துடுச்சு. அடுத்த இரண்டு நிமிடங்களுக்குள் ஐட்டம்கள், டேபிளுக்குப் போகணும். நான், ஏற்கெனவே மேரினெட் செஞ்சு வெச்ச பிரானை எடுத்து நெய்யைச் சேர்த்து, கைபடாம, அப்படியே ஓவன்ல

வைக்கறேன். 380 டிகிரி வெப்பம். 45 நொடிகள் டைமர் செட் பண்ணிட்டேன்.

45 நொடிகள் ஆச்சு. ஓவன் சத்தம் போட்டுது. கையில நான் கெட்டியான கிளவுஸ் போட்டிருக்கேன். ஓவனை அப்படியே திறந்து, பிரானை எடுத்து பிளேட்டுல வெச்சு, டேபிளுக்கு அனுப்பிட்டேன். அடுத்த ஆர்டர் என்னன்னு தெரிஞ்சுக்க காத்துக்கிட்டிருக்கேன்.

சில நிமிடங்கள். எக்ஸிகியூட்டிவ் ஷெஃப் நான் அனுப்பின தட்டை



எடுத்துக்கிட்டு உள்ளே ஓடி வராரு. முகமெல்லாம் வேர்வை. ''இன்னியோட அத்தனை பேரும் ரிசைன் பண்றீங்க. நீங்க யாரும் இங்க வேலை செய்யவே தகுதி இல்லாதவங்க...வேஸ்ட்'' கத்தறார். ஒண்ணும் புரியாம நான் நிக்கறேன். சர்க்கார் நிக்கறார். நடராஜன் நிக்கறார்.

மூடியைத் திறந்து பார்த்தா, பிரான் சதை சதையா இருக்கு. வேகவே இல்லை. ஓவன்லே கோளாறு. சரியான நேரத்துக்குச் சத்தம் போட்டு எல்லாம் செஞ்ச ஓவன், உள்ளே வேலை செய்யலை. என்ன செய்யறதுன்னு தெரியலை.

என் வாழ்க்கையில நான் செஞ்ச மிகப் பெரிய தவறு அது. கையில கெட்டி கிளவுஸ் போட்டிருந்ததால், பிரான் வெச்ச தட்டு சூடா இருக்குதான்னு பார்க்க முடியலை. அப்படியே எடுத்து அனுப்பிச்சுட்டேன். ராணிகிட்ட மன்னிப்பு கேக்கறதுன்னு முடிவு பண்ணி, வெளியே போனோம்.

பிரிட்டிஷ் ஹைகமிஷ்னர்





ரசித்து சாப்பிட்ட ராணி!



உருளை பொடிமாஸ்

நறுக்கிய உருளை - 200 கிராம், தேங்காய் துருவல் - 50 கி, கடுகு, உளுந்து - தலா 5 கி, எண்ணெய் - 50 கி, வெங்காயம் - 50 கி, பச்சை மிளகாய் - 5 கி, இஞ்சி - 5 கி, கடலைப் பருப்பு - 10 கி, முழு சிவப்பு மிளகாய் - 1, கறிவேப்பிலை, மஞ்சள் பொடி, உப்பு - தேவைக்கேற்ப.

உப்பு, மஞ்சள் பொடி போட்டு உருளையை வேக வைக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு, கடுகு, உளுந்து, கடலைப் பருப்பு ஆகியவற்றை பொன்னிறமாக வறுக்கவும். மேலே பச்சை மிளகாய், இஞ்சி, முழு சிவப்பு மிளகாய், வெங்காயம், கறிவேப்பிலை ஆகியவற்றைப் போட்டு வதக்கவும். தேங்காய் துருவலைச் சேர்க்கவும். நன்கு வதங்கிய பிறகு, உருளையைப் போட்டு, உப்பு சேர்க்கவும். ஒரு நிமிடம் வதக்கிய பிறகு, சூடாக பரிமாறவும்.

பதற்றத்தோட எழுந்து நிற்கிறார். ராணி சாப்பிடாம உட்கார்ந்திருக்காங்க. கலைஞரும் ஸ்டாலினும் என்ன சொல்றதுன்னு தெரியாமல் எங்களைப் பார்க்கறாங்க. அது தமிழக அரசு தரும் விருந்து. எவ்வளவு அவமானம்? சர்வ நாடியும் ஒடுங்கிப் போச்சு.

ராணிகிட்ட போய் மன்னிப்பு கேக்கறோம். அவங்க, சட்டுன்னு ஒரு திரும்பு திரும்பினாங்க. அழகா சிரிச்சாங்க. "Don't worry Chef. Mistakes do happen. The prawns were too fresh..." அவங்களோட நகைச்சுவை உணர்ச்சி, மேன்மை, பரிவு, கனிவு, சமயோசிதம் எல்லாம் பிரமிக்க வெச்சுது. எல்லோரும் சிரிக்க, சூழ்நிலையோட இறுக்கம் தளர்ந்தது. எங்க வேலைகளும் தப்பிச்சுது.

அதைவிட முக்கியமானது, அடுத்து நடந்தது. இந்தத் தவறு எங்களை பாதிக்கடக் கூடாதுன்னு, மறுநாள் மூணுவேளையும் எங்களையே ராணியோட பேண்ட்ரியில சமைக்க அனுமதிச்சாங்க. அன்னிக்கு நான் தெரிஞ்சுகிட்ட விஷயங்களுக்கு அளவே இல்லை.

ராணிக்கு கிட்னி பீன்ஸ் ரொம்பப் பிடிக்கும். சீஸ் பிடிக்கும். ஸ்வீட்ஸ் கம்மியா சாப்பிடுவாங்க. மத்தியான லஞ்சக்குக் கறி கண்டிப்பா வேணும். ராத்திரி, ரொம்ப லைட்டா சாலட்டும் சூப்பும் மட்டும் சாப்பிடுவாங்க. பெரிய சிந்தனாவாதி. யோசிச்சுக்கிட்டே இருப்பாங்க.

அவங்களோட செய்கைகளே பல விஷயங்களைச் சொல்லும். ஒரு ஃபோர்க்கும் ஸ்பூனும் என்ன எடை இருக்கணும்னு கூட அவங்களுக்குத் தெரியும். சாப்பிடும்போது, தட்டு மேல் ஃபோர்க்கையும் ஸ்பூனையும் தனித்தனியா வெச்சா, இன்னும் வேணும், சாப்பிட்டு முடிக்கல, அடுத்த ஐட்டம் கொண்டு வாங்கன்னு அர்த்தம். தட்டுக்கு வெளியே ஃபோர்க்கையும் ஸ்பூனையும் வெச்சாங்கன்னா, ஏதோ பேசப் போறாங்கன்னு அர்த்தம். தட்டுக்குள்ளேயே, ஃபோர்க்கையும் ஸ்பூனையும் சேர்த்துப் பக்கத்துப்பக்கதுல வெச்சாங்கன்னா, சாப்பிட்டாச்சு, எழுந்துக்க போறேன், ஃபிங்கர் போல்ஸ் கொண்டு வாங்கன்னு அர்த்தம். அப்பப்பா!

ரொம்ப ஃபார்மலான ராணி. அவங்களோட ஒவ்வொரு அசைவும் ஏற்கெனவே திட்டமிட்டது. மௌனம் தான் பெரிய அணிகலன். அதுக்கு எவ்வளவு அர்த்தங்கள்!

இந்த மாதிரி ஃபார்மாலிட்டி எதுவும் இல்லாம, ரொம்ப ஜாலியா சாப்பிடுறவங்க நடிகை ஸ்ரீதேவி. போனி கபூரும் ஸ்ரீதேவியும் என் சமையலை மறக்கவே மாட்டாங்க.. ஏன்னா?

(அடுத்த வாரம்)

கல்கி

அடுத்தடுத்த
இதழ்கள்...

சேலம்
மாவட்ட ஸ்பெஷல்ஸ்



- முருகனுக்கு மூத்த தலம்!
- இருக்குமா ஏற்காடு?
- வேடந்தாங்கலை உருவாக்குறோம்!
- தயாநிதிக்குச் சொல்லி விடுங்க!
- ஹாரன் அடிச்சா அவமானம்!
- புத்தருக்குப் பொங்கல்!
- சேலத்துக்கு என்ன தேவை?
- காரிய சித்திக்கு கந்தாசிரமம்!

இன்னும் Exclusive தகவல்களோடு
அடுத்த இரண்டு வாரங்களும் (05.12.10 & 12.12.10)
சேலம் மாவட்ட ஸ்பெஷல்ஸ்

சேலம் மாவட்ட
வாசகர்களுக்குப் பரிசுப் போட்டி!

சேலம் மாவட்டச் செய்திகளிலிருந்துதான்
கேள்வி கேட்கப்படும்.
பதில் தலைப்புகளில் ஒளிந்திருக்கும்.

கண்டுபிடிக்கும்
வாசகர்களுக்கு சிறப்பு பரிசுகள்...

கூடுதல் விவரங்கள் அடுத்த இதழில்...

நூல் அறிமுகம்

சினிமா என்பது ஒரு பொழுதுபோக்கு சாதனம் மட்டுமல்ல; அது ஓர் வாழ்க்கைத் தத்துவத்தின் வெளிப்பாடும்தான்.







நல்ல சினிமா, கெட்ட சினிமா எப்படித் தீர்மானிப்பது? நல்ல சினிமாவை எப்படி மதிப்பிடுவது? இவ்வாறான கேள்விகளின் ஊடாக இந்நூலைப் படிக்கும்போது திரைப் படம் பார்க்கும் உணர்வு ஏற்படுகிறது.

நூல்: உலக சினிமா-III; ஆசிரியர்: செழியன், வெளியீடு: விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 600002, விலை: ரூ.120/- ☎: 044-42634283/84.

மனிதனுக்கு எவ்வளவுதான் பிரச்னையிருந்தாலும், எவ்வளவுதான் சோகமிருந்தாலும், சிரிப்பு என்கிற அரு மருந்தை கொஞ்சம் அருந்தினால் அவனுக்குள்ள சோகமும், துன்பமும் நிச்சயமாகப் பறந்துபோகும். இது இயற்கை. இன்றைய நெருக்கடியான சமூக வாழ்வில் மனிதன் சிரிப்பதற்குக் கூட சொல்லித் தர வேண்டிய துரதிர்ஷ்டம் நினைத்துப் பார்க்க முடியாதது. இந்தக் குறையை அகிலா கார்த்திகேயனின் 'மொய்' சிலிர்ப்பு என்கிற இந்த அழகிய நூல் முப்பத்து இரண்டு பொருளடக்கத்தில் நிறைவு செய்கிறது.

நூல்: 'மொய்' சிலிர்ப்பு; ஆசிரியர்: அகிலா கார்த்திகேயன்; வெளியீடு: மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரி முனை, சென்னை - 108, விலை: ரூ.50/- தொடர்புக்கு: 9940326561, 044-22271701.

நல்லவராக இருப்பதென்றால் சும்மாவா ?

வியாசரின் மகாபாரதக் கதையில் எத்தனையோ கதாபாத்திரங்கள் ஜொலிக்கின்றன. ஆனால் அந்தக் கதாபாத்திரங்களைப் போலவா நாம் வாழ்க்கை நடத்துகிறோம்? அந்த மனிதர்களின் பண்பாடு நமக்குப் பாடம் கற்றுத் தருகிறதா? நல்லவர்களாக வாழ்வது எப்படி என்பதை மகாபாரத பாத்திர மனிதர்கள் நமக்கு உணர்த்தி இருக்கிறார்களா? இப்படியாகப் பல வினாக்களை முன்வைத்திருக்கிறது இந்நூல். அனைவரும் படிப்பதற்கு மாத்திரம் அல்ல; படித்து நடப்பதற்கும் பயனுள்ள நூல்.

நூல்: மகாபாரத மனிதர்கள் காட்டும் மகத்தான வாழ்க்கை; ஆசிரியர்: குர்சரண் தாஸ் - தமிழில்: சாருகேசி; வெளியீடு: விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை-600002, விலை: ரூ.115/- ☎: 044-42634283/84.

- G.மகேஷ்

வட்டமேஜை



கெஸ்ஸிங் நோ மிஸ்ஸிங்!

'வாரம் ஒரு மந்திரம்' பகுதிக்கு 'மரணத்திலிருந்து தப்ப வைக்கும் தாமரை' என்று தாமரை ஸ்பெஷல் பேஜஸ்க்குப் பொருத்தமாகத் தலைப்பிட்டிருந்தது ரசிக்கும்படி இருந்தது. இந்த மாதிரி சின்னச் சின்ன விஷயங்களில் கூட அதிகக் கவனம் செலுத்தி வாசகர்களைக் கவர 'கல்கி'யால் மட்டுமே முடியும்.

- மு.மதிவாணன், அரூர்

இந்த வார கார்ட்டூன், காமெடியாகவும் அதே வேளையில் சிந்திக்கும்படியாகவும் இருந்தது! ராஜா பார்வை!

- வே. முருகேசன், ஆதம்பாக்கம்

'மைனா' + 'உத்தமபுத்திரன்' படத்தின், உமது ஜரூரான விமர்சனத்தைப் படித்து, நாங்கள் நினைத்ததையே நீங்களும் சொல்லிவிட்டீர்! உங்கள் கெஸ்ஸிங் நோ மிஸ்ஸிங்!

- அருள்ராஜா, வேலூர்

ஆணாதிக்கத்துக்கு எதிர்க்க வேண்டிய பெண் எடுக்க வேண்டிய ஆயுதம் அறிவுதான் என பாடலாசிரியர் தாமரையின் விளக்கம் அருமை.

- கே.வி.ராமன், சேலையூர்

சம்ஸ்கிருத கிராமம். பிரமிக்க வைத்தது. துங்காநதியின் மத்தூர் சாரதா விலாசம் சம்ஸ்கிருத பள்ளியில் வடமொழி பயில என்றே பல பெற்றோரும் தங்கள் குழந்தைகளை இப்பள்ளிக்கு அனுப்புவது பெருமையாக இருக்கிறது. இஸ்லாமிய இனத்தவரும் இதில் விதிவிலக்கில்லாமல் தங்கள் பிள்ளைகள் சம்ஸ்கிருதம் படிக்க அனுப்புவது சிறப்பு.

- பி.ராம்பிரசாத், ஜமீன் பல்லாவரம்

வாரா வாரம் தனது ஜோக்குகள் மூலம் எங்களைச் சிரிக்க வைத்துக்கொண்டிருக்கும் ஜெ.எஸ்.ராகவனை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியலை! வெல்டன்...

- அ.முரளிதரன், மதுரை-3

'காதல் கேம்பஸ்' விறுவிறுப்பான 'கேம்பஸ்'லாக 'கலகல'வென உள்ளது!

- கே.கஸ்தூரி, காட்பாடி

'தாமரை' பூத்த தடாகமாக இந்த வாரம் கல்கி இதழ் அமைந்து சந்தோஷிக்க வைத்தது. மதுவிலக்கை முழுமையாகக் கொண்டு வரச் சொன்ன முறையில் நம் கண்கள் இரண்டும் நன்றியுடன் பனிக்கின்றன.

- எஸ்.அமிர்தா, வடபழனி


சென்ற வாரத் தலையங்கக் கார்ட்டூனில் 'வசந்தி ஸ்டான்லி' என்பதற்குப் பதிலாக 'வசந்தி ஸ்டாலின்' என்று தவறுதலாக அச்சாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

- ஆர்.

ஓ பக்கங்கள்


ராசா இப்போ.

கடைசியில் ஆ.ராசாவைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள வேண்டியதாகிவிட்டது. ஒரு வருடம் முன்னாலேயே செய்திருக்க வேண்டியதை சோனியாவும் மன்மோகன் சிங்கும் தாமதமாகச் செய்திருக்கிறார்கள். இப்போது செய்ய முடிந்ததற்குக் காரணம் இன்னும் ஆறு மாதங்களில் வரப்போகும் தமிழக சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் உறவைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் தி.மு.க இருப்பதால், இப்போது அது பணியவேண்டியதாயிற்று. இல்லையென்றால், தி.மு.க நிச்சயம் ராசாவை ராஜினாமா செய்ய வைத்திருக்காது. காங்கிரஸ் தலைமையும் கடுமையாக நடந்துகொண்டிருக்காது.



ராசாவை நீக்க, நிச்சயம் ஜெயலலிதாவின் அதிரடி அறிவிப்பு ஒரு காரணம். ஆட்சியை தி.மு.க கவிழ்த்துவிடும் என்ற பயம் இல்லாமல் நீக்குங்கள்; நிபந்தனையற்ற ஆதரவை நான் தருகிறேன் என்று ஜெயலலிதா அறிவித்தது நிச்சயமாக காங்கிரசின் கையைப் பலப்படுத்தியது. நீ இல்லாவிட்டால் அவர் என்ற சாத்தியம் இருக்கும்போது கருணாநிதியிடம் அடித்துச் சொல்லும் தைரியம் காங்கிரஸுக்குக் கிடைத்தது.

இதனால் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் காங்கிரஸ் அணி சேர்ந்துவிடும் என்று சொல்லமுடியாது. ஆனால் காங்கிரசின் பேரம் பேசும் சக்தி அதிகரித்துவிட்டது. தேர்தலில் அதிக இடங்கள், ஆட்சி அமைத்தால், எத்தனை மந்திரி பதவிகள், துணை முதல்வர் பதவி உண்டா இல்லையா என்பதையெல்லாம் அடித்துப் பேசி வாங்கும் சக்தி அதிகமாகியிருக்கிறது. காங்கிரஸ் விரும்பும் அளவை தி.மு.க தர மறுத்தால், நிச்சயம் நஷ்டம் தி.மு.க.வுக்குத்தான். ஏனென்றால் ஜெயலலிதா தயாராக இருக்கிறார். காங்கிரஸ், ஜெ. அணிக்குச் செல்லுமானால், கூடவே



ஞாநி


ச்சயம் பா.ம.கவும் சென்றுவிடும். விஜய்ாந்தும் அங்கே செல்வார். பதிலுக்கு வைகோவும் இடதுசாரிகளும் தி.மு.க.வுக்குச் சென்றாலும்கூட, எண்ணிக்கை செல்வாக்கு லம் காங்கிரஸ்-அ.தி.மு.க கூட்டணிக்குத் ான் இருக்கும். எனவே மறுபடி ஆட்சியைப் பிடிக்க ஜெயலலிதாவுக்குக் காங்கிரஸ் தேவைப்படும் அதே அளவுக்குக் கருணாநிதிக்கும் தன் ஆட்சியை மறுபடியும் தக்கவைத்துக் கொள்ள காங்கிரஸ் தேவைப்படுகிறது. ஜெயலலிதாவின் அறிக்கையால் நிகர லாபம் காங்கிரசுக்குத்தான். அதன் அடையாளம்தான் ஆ.ராசாவுக்குக் கொடுத்த கல்தா.

ஸ்பெக்ட்ரம் 2ஜி முறைகேட்டில் ராசா செய்ததாகக் கணக்குத் தணிக்கைத் தலைவர் அறிக்கையில் சொல்லியிருப்பதைப் பார்ப்போம். பழைய முறைப்படியே முதலில் விண்ணப்பிப்போருக்கு ஒதுக்கீடு என்ற அடிப்படையைப் பின்பற்றியது தவறு. ஏனென்றால் ஸ்பெக்ட்ரம் உரிமத்தின் சந்தை மதிப்பு பல மடங்கு உயர்ந்துவிட்டது. ஆனால் பழைய விலைக்கே விற்றிருக்கிறார். வேண்டிய கம்பெனிகளுக்குக் கொடுப்பதற்காக, விண்ணப்பத் தேதியைத் திடீரென முன்னதாக மாற்றியிருக்கிறார். இப்படிச் செய்யாமல் ஏலத்தில் விட்டிருந்தால், அரசுக்குப் பல கோடி ரூபாய்கள் லாபம் கூடுதலாகக் கிடைத்திருக்கும்.

பழைய விதிகளை அப்படியே பின்பற்றினேன். அதிலென்ன தவறு என்பது ராசா, கருணாநிதி வாதம். நிர்வாகத்தில் செய்பவை, செய்யத் தவறுபவை இரண்டுமே முக்கியமானவை. செய்யத் தவறிய குற்றம் இது. அதனால் பெரும் நஷ்டம் என்பது வெறும் யூகம்தான் என்பது ராசா-கருணாநிதியின் இரண்டாவது வாதம்.

இதுவும் சரியல்ல. ஏனென்றால் உரிமத்தை 1651 கோடி ரூபாய்களுக்கு (சுமார் 40 கோடி டாலர்) அரசிடம் வாங்கிய கம்பெனிகள் தங்கள் பங்குகளை வெளியாருக்கு விற்றிருக்கின்றன. ஸ்வான் 45 சதவிகிதப் பங்குகளை 90 கோடி டாலருக்கும், யூனிடெக் 60 சதவிகிதப் பங்குகளை 136 கோடி டாலருக்கும், எஸ்டெல் 49 சதவிகிதப் பங்குகளை 22.5 கோடி டாலருக்கும், டாட்டா 26 சதவிகிதப் பங்குகளை 27 கோடி டாலருக்கும் விற்றிருக்கின்றன. அதாவது 40 கோடி டாலருக்கு வாங்கியதைப் பயன்படுத்தி 275 கோடி டாலருக்குப் பங்கு விற்றிருக்கிறார்கள். ஏழு மடங்கு லாபம் அவர்களுக்கு. அது அரசுக்கு நஷ்டம். தணிக்கைக் குழு வெவ்வேறு மதிப்பீடுகளின்படி நஷ்டம் ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி வரை இருக்கலாம் என்று கூறுகிறது.

அந்தக் கம்பெனிகளுக்கு லாபம் செய்து கொடுத்ததற்கு, பதிலுக்கு அதில் எவ்வளவு பங்கு அரசியல்வாதிகளுக்குக் கிடைத்தது என்பதுதான் முக்கியமான கேள்வி. இவ்வளவு கோடி ரூபாய்கள் சம்பந்தப்படும் ஒரு விஷயத்தை ராசா தனியே தன்னந்தனியே செய்ய வாய்ப்பில்லை. நிச்சயம் கட்சியும் தலைமையும் கட்சிக்குள் ராசாவின் புரவலர்களும் சம்பந்தப்படாமல் இருக்க முடி



ரிவாரங்கள் எப்போ?

யாது. அந்தச் சம்பந்தம் இருப்பதனால்தான் கடைசி நிமிடம் வரை ராசா குற்றமற்றவர் என்று கருணாநிதியும் கனிமொழியும் மீடியாவிடம் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். ஸ்பெக்ட்ரம் தில்லு முல்லுவில் லாபமடைந்தவர்கள் தி.மு.கவில் உள்ளவர்கள் மட்டுமா, அல்லது கூட்டணிக் கட்சியான காங்கிரசிலும் உண்டா என்பதெல்லாம் இனிமேல்தான் துருவப்பட வேண்டும்.



முக்கியப் புள்ளிகள் பலர் சம்பந்தப்படவில்லை என்றால் ராசாவை எப்போதோ பலி கொடுத்திருக்கலாம். ஒரே ஒரு டெலிஃபோன் பேச்சுக்காகத் தமிழகத்தில் பூங்கோதையை அமைச்சர் பதவியிலிருந்து தூக்கி எறிந்தார் கருணாநிதி. தம் உறவினர் மீதான லஞ்சப் புகார் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரியுடன் டெலிஃபோனில் பேசியதுதான் பூங்கோதையின் குற்றம்.

ராசா தொடர்பான இரண்டு டெலிஃபோன் பேச்சுகள் ஏழு மாதங்களுக்கு முன்னால் மே மாதத்தில் அம்பலமாகின. இரண்டும் சி.பி.ஐ பதிவு செய்த பேச்சுகள். தில்லியில் அதிகார மையங்களுடன் கார்ப்பரேட் நிறுவனங்கள் சார்பில் தொடர்புகொண்டு காரியமாற்றும் பிரபல தரகரான நீரா ராடியா என்ற பெண்மணியுடன் கனிமொழியும் ராசாவும் பேசிய பேச்சுகள் இவை. ராடியாவை சி.பி.ஐ கண்காணித்து வந்தது. ஆகஸ்ட் 2008 முதல் 300 நாட்களுக்கு அவர் ஃபோனை ஒட்டுக் கேட்டது.

ஹெட்லைன்ஸ் டுடே சேனல் அம்பலப்படுத்திய பேச்சுகளில் சில பகுதிகள் மட்டும் இதோ:

பேச்சு 1. கனிமொழியுடன் மே 21, 2009, காலை 8:41

கனிமொழி : ஹலோ

ராடியா : வேலை இன்னும் உறுதிப்படவில்லை. பிரதமர் இன்றும் அதுபற்றிய விவாதங்களில்தான் இருக்கிறார்.

கனிமொழி: தொலைத் தொடர்புத் துறை எங்களுக்கு என்று வாக்குக் கொடுத்திருக்கிறார்கள். இனி அதில் ஏதாவது மாற்றங்கள் ...

ராடியா : என்ன?

கனிமொழி: எங்களுக்குத் தொலைத் தொடர்பு என்பதை உறுதிப்படுத்தி விட்டார்கள். ஆனால் அது 'அவருக்குப்' போய் விடக் கூடாது. ஏனென்றால் அவர் மீடியாவில் அப்படியான செய்திகளை வரவழைத்துக் கொண்டிருக்கிறார். ('அவர்' என்பது தயாநிதிமாறன்தான்!)

இந்த வார பூச்செண்டு!

பல லட்சம் பட்டதாரிகளும் ஆசிரியர்களும் அலட்சியமாக இருக்கும்போது, சமூகப் பொறுப்புடன் தங்களை மேலவை வாக்காளர்களாகப் பதிவு செய்துகொண்டிருக்கும் தமிழகப் பட்டதாரிகள் 3 லட்சத்து 11,681 பேருக்கும் ஆசிரியர்கள் 72 ஆயிரம் பேருக்கும் இ.வா.பூ.

பேச்சு இரண்டு: மே 24, 2009 காலை: 11:05

ராசா: என் பெயரை 'கிளியர்' பண்ணியாச்சா?

ராடியா: நேற்றிரவு உங்கள் பெயரை கிளியர் பண்ணியாச்சு.

ராசா : சரி, தயாநிதி விஷயம் என்னாச்சு? ஜவுளித் துறையா அல்லது ரசாயனம் / உரத்துறையா?

ராடியா: தயாவுக்குக் கிடைக்காது. அழகிரி, தயா இருவரில் ஒருவர்தான் நுழைய

முடியும்.

ராசா : இல்லை, இருவருமே நுழைய லாம்.

ராடியா : இருவருமா? பாலுவால்தான் பிரச்னை இருக்குமென்று நினைக்கிறேன். மூன்று குடும்ப உறுப்பினர்களை நுழைப் பதில் கஷ்டம்தான்.

ராசா: (சிரிக்கிறார்) ஆமாம். ஆனால் எல்லோருக்கும் தெரியுமே.

ராடியா : இல்லை, கனி(மொழி) என்னி டம் நேற்றிரவு சொன்னார், அவர் தந்தை அவரிடம் நேற்று கூறியதாக, மூன்று குடும்ப உறுப்பினர்களை உள்ளே நுழைப்பது கஷ் டம், இதிலுள்ள பிரச்னையை அவரால் உணரமுடிகிறது . . .

ராசா : பொறுத்திருந்து பார்ப்போம். நாம் போராடிப் பார்ப்போம்.

இந்த இரண்டு டேப்களுக்கு இன்ற ளவும் பிரதமர் முதல் கருணாநிதி வரை விளக்கம் தரவில்லை. ஃபோன் குரல்கள் எங்களுடையதல்ல என்றால் டெஹல்கா விவகாரம் போல கோர்ட்டுக்குப் போய் டேப்பை சோதனையிட்டு நிரூபிக்க சேனல் தயாராக இருந்தது. இப்படி ஒரு டேப்பில் ஜெயலலிதா சிக்கியிருந்தால், கருணாநிதி வானத்துக்கும் பூமிக்குமாக எம்பிக் குதித்து மாபெரும் மீடியா தாண்டவமே ஆடியிருப் பார்.

பூங்கோதைக்கு ஒரு நீதி; ராசாவுக்கு இன்னொரு நீதி என்று கருணாநிதி நடந்து கொண்டது ஏன்? ராசா மீதான சி.பி.ஐ விசாரணை ஏன் ஒரு வருட மாகியும் தாமதம், என்று உச்ச நீதிமன்றம் கடிந்துகொண்ட பின்னரும் அவர் ராசாவை ஏன் விலகச் செய்யவில்லை?



அரசியல் சட்டப்படி சுயேச்சையான அமைப்பாக இருக்கும் கணக்குத் தணிக்கை அதிகாரி பற்றி கருணாநிதி அடித்த கமெண்ட் படு கேவலமானது. 'பிர தமர், அமைச்சர்கள் பத்தியெல்லாம் அவங்க எப்பிடி ரிப்போர்ட் எழுதறாங்கன்னு எங் களுக்குத் தெரியும்' என்றார். இவரேதான் 1989ல் ஆடிட்டர் ரிப்போர்ட்டைத் தெருத் தெருவாக எடுத்துக் கொண்டு போய் பேசி இன்றைய நண்பர் சோனியாவின் கணவர் ராஜீவ்காந்தி ஃபோபர்ஸ் பீரங்கி ஊழல் செய்ததாகக் கடும் பிரசாரம் செய்தார். அதன் பயனாகத் தான் தேசிய முன்னணி ஆட்சி ஏற்பட்டு மத்தியில் மந்திரி பதவி அடையும் முதல் வாய்ப்பு தி.மு.கவுக்கு வந்தது. ராஜீவுக்கு எதிராக ஆடிட்டர் ரிப்போர்ட்டை நம்பி பிரசாரம் செய்ததற்கு இப்போது சோனியாவிடம் கருணாநிதி மன்னிப்பு கேட் பாரா?

ராசாவின் விலகலுக்கு இப்போது சொல்லியிருக்கும் காரணம்தான் சூப்பர் நகைச்சுவை. இந்த விவகாரத்தால் சில எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தை நடக்க விடாமல் முடக்குகிறார்களாம். ஜனநாயகத் தைக் காப்பாற்றுவதற்காக ராஜினாமாவாம். அவையை முடக்குபவர்கள் அநியாயம் செய்கிறார்கள் என்றால் அதை எதிர்க்காமல் அடங்கிப் போவது எப்படித் தீர்வாகும்? இதுபோல ஒவ்வொரு முறையும் ஒரு சிலர் அவையை முடக்கினால் இதேபோல ராஜி னாமாக்கள் செய்வார்களா?

மக்களைப் பொறுத்தமட்டில் ராசாவின் நீக்கம் தீர்வல்ல. இது ஓர் ஆரம்பமாக மட்டுமே இருக்க வேண்டும். ஸ்பெக்ட்ரம் ஊழலில் லாப மடைந்த ராசாவின் கூட்டாளி கள் யார் யார் என்பது அம் பலப்படுத்தப்பட்டு தண்டிக் கப் பட்டால்தான் எதிர்கால அரசியல்வாதிகளுக்கும் தொழிலதிபர்களுக்கும் பயம் இருக்கும். இல்லாவிட்டால் ராசா ராஜினாமா, ஊழலை அமுக்க நடந்த உத்தியாக முடிந்துவிடும்.

காலை எழுந்தவுடன் சிரிப்பு!

நான் படிக்கிற காலத்தில் ஸ்கூல் போகும் வழியில் இருக்கும் அந்த நபர் என்னை எப்போதும் உறுத்திக்கொண்டே இருப்பார். அரசு அலுவலகக் கட்டடத்துக்கு வெளியே இருக்கும் பிளாட்பாரத்தில் அவரின் வாசம். எப்போதும் யாராவது உறவினர்கள் அவரை வந்து பார்த்தபடி இருப்பர். அவர்களுக்கு அதைச் செய்... இதைச் செய் என உத்தரவிட்டபடி இருப்பார். எல்லோரையும் எறிந்து விழுவார். சமயங்களில் கடித்து விடுவாரோ என்றுகூட தோன்றும். சாந்தம் என்ன விலையுன்னு கேட்பது மாதிரியான கடுகடுப்பான முகம். அரசு வேலை. உறவினர் மதிப்பு ஆனாலும் பிளாட்பார வாழ்க்கை. என்னால இது ஏன் இப்படின்னு தெரிஞ்சுக்கலேனா பைத்தியம் பிடிச்சடும் போலத் தோணுச்சு.

'தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசி இருக்கும்... என்ற விஜய் நடிச்ச படத்துப் பாடல் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அந்தப் பாட்டுல வர் மாதிரி இப்போதைக்கு அந்த ஆளின் சுபாவம் இப்ப இஞ்சி தின்ன குரங்காக இருப்பதுதான் இயல்பா பிளாட்பார வாழ்வின் ரகசியம் என்னன்னு தேட ஆரம்பிச்சேன்.

விடை என்னன்னா... உடம்பு சரியில்லாம இருந் இந்த மனுஷன் செத்துட்டாராம். சொந்த பந்தமெல்லா கூடி ஆடிப்பாடி அடக்கம் பண்ண சுடுகாடு எடுத்து கிட்டு போறப்ப விழிப்பு வந்து எழுந்துட்டான் மனு ஷன். செத்தவன் பொழைச்சுக்கிட்டான். கோமா ஸ்டே ஜில் இருந்தாரோ? இல்ல வாழ்வில் நமக்குத் தெரியா பல விஷயம் மாதிரி எமன் ஆள் மாறி தப்பா எடுத்து போன உயிரைத் திருப்பித் தந்தாரோ? யாருக்குத் தெரியும் பிழைத்தது சந்தோஷம்தான். பிணம்னு சுடுகாட்டுக்கு போனவரை வீட்டுலேயோ கிராமத்திலேயோ சேர் துக்க முடியாது. அதுதான் ஆச்சாரம்னு சொல்லிட்டாங்க அதுதான் பிழைச்ச இந்த மனுஷனத் தேடி உறவும் இர மமும் வந்து போகுது. நடுத்தெருவுல நிற்க வெச்சிங்களே மேலே ஆழ்மனசு வெறுப்பு இப்படி எரிச்சலாதானே வரும். ஆக அவரோட சுபாவத்துக்கு அவர் பொறுட் பில்ல. நம்முடைய பழைமையான சடங்கு... நம் பிக்கை... ஆச்சாரம்தான் காரணம்னு சொல்ல வந்தேன்.

இதே விஷயம்தான்... போன வாரம் பார்த்த தாம ரைக்கா விஷயத்திலேயும் நடந்தது. அக்கான்னா பெரிய வயசு இல்லே. நான் அவ மேல இருந்த மதிப்புல அப்படிக் கூப்பிட்டேன். இப்போ முப்பது வயதிருக்கும். தாமரை பூப்பெய்தி சில மாதம் ஆகி இருந்த நேரம். ஊர் திருவிழா களைக்கட்டியிருந்த சமயம்... இரவு முழுக்க ஆட்டம் பாட்டம்னு களைக்கட்டி ஜனங்க



அசந்து எழுந்திருக்கும்போது அசைவே இல்லாம ஆலமரத்தாண்ட அலங்கோலமா கிடந்தாள் தாமரை. காப்பு கட்டி இருந்தாலும் ஏதோ கறுப்பு ஆடு வரம்பு மீறி நுழைஞ்சு ஒரு மொட்டுவை மென்று துப்பி இருக்கு. யார் அந்த அயோக்கிய ஆடுன்னு கண்டு பிடிக்க முடியல. தப்பே செய்யாத தாமரைக்கு இன்னொரு தண்டனை கெட்டுப் போனவங்கிற முத்திரையோடு ஊர் ஆச்சாரப்படி அவளை விலக்கி வெச்சிடுச்சு. அலறி அழுத அம்மா, அப்பவே போய்ச் சேர்ந்தாள். தன்னந்தனியா மனுஷத் தன்மை இல்லாத ஆச்சார சேறு மிகுந்த இந்தக் குளத்துல கிராமத்தில தான் யாரோடும் ஒட்டாமல் பேசாமல் ஒரு ஆண்போல பெண் சிங்கம் போல உறுமிக்கிட்டே தன்னந்தனியா மௌன விரதத்தோடு வாழ ஆரம்பிச்சுட்டுட்டா. அவளுக்கு அவள் முக்கியம். அதனாலதான் நான் ஒருத்தரையும் அண்டி வாழல. நான் 'என்னால வாழுறவ' என்று சொல்ல முடிந்தது. என்னைப் பாதித்த இந்தப் பெண்ணின் வாழ்க்கையைத் தான் நான் படமா எடுக்கப் போறேன். ஆனா எப்படி முடிக்கிறதுன்னு தெரியல. எப்படி முடிச்சா நல்லா இருக்கும். உங்களுக்குத் தெரிஞ்சா எனக்கு எழுதி அனுப்புங்க... அப்படி இப்படின்னு 21 வாரங்கள் உங்ககிட்ட நான் பேசிக்கிட்டு இருந்தது இப்போ ஒரு முடிவுக்கு வந்துடுச்சு, வெறும் சினிமா பற்றி மட்டும் பேசாமல் சினிமாவை ஒரு பின்புலமா வைத்து எல்லா விதமான விஷயங்களையும் சுதந்திரமா பேச வைத்த கல்கி நிறுவனத்துக்கும் அடர்த்தியான வாசகர்களாய் அமைந்திருக்கும் உங்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றிகள். இது தாற்காலிகமாக விடைபெறும் காலம்தான். மீண்டும் பட்டுப் புடைவை பரிசளிப்பில் சந்திப்போம்.

(முற்றும்)

ஈஸி போட்டி சில்கி சாரி!

மாதம் 3 புடவைகள் பரிசு



வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டு அம்மாதத்துக்கான அதிர்ஷ்ட சாலிகளாகப் புடைவைப் பரிசு பெறுவார்கள். நவம்பர் மாதக் கூப்பன்களை இணைத்து அனுப்ப

கடைசித் தேதி : **10.12.10**

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....

முகவரி : ....

....

....

..........................பின்கோடு:....................

தொலைபேசி : ....

இ-மெயில் : ....

நவம்பர் - 28

ஊர்வசி படமாக்கப் போகும் நபரின் பெயர்?

விடையை டிக் செய்யவும்

- ☐ நடிகை ரேவதி
- ☐ ரம்யா கிருஷ்ணன்
- ☐ ரோகிணி
- ☐ தாமரை அக்கா

மெகா பரிசுப் போட்டி!



★ பட்டுப் புடவை பரிசுப் போட்டிக்கும் இந்த மெகா பரிசு போட்டிக்கும் தொடர்பு இல்லை.

★ ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி: **10.12.10**

தொடரின் இறுதியில் ஒரு மெகா பரிசு உண்டுன்னு அறிவிச்சோம். அது என்ன? எப்படிக் கலந்துக்கிறது? ஃபுல் டீட்டெய்லா இப்போ...

★ யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம்.

★ கீழே கேட்கப்பட்ட ஊர்வசியோடு தொடர்பு உடைய 5 கேள்விகளுக்குப் பதில் எழுத வேண்டும்.

★ கூடவே இந்தத் தொடர் பற்றிய விமர்சனத்தை சுவையா ரசிக்கும்படி ஒரு 20 வரிகளுக்குள் எழுதி அனுப்பணும்.

★ பதில்களும் விமர்சனங்களும் தனி வெள்ளைத் தாளில் பெயர், வயது, தொலைபேசி எண் மற்றும் சுய முகவரி குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

★ கட்டாயம் கீழ்கண்ட கூப்பனைப் பூர்த்தி செய்து இணைத்து அனுப்ப வேண்டும்.

★ சரியான விடைகளும் ரசனையான விமர்சனமும் ஒன்று சேர எழுதியவர்களில் ஒருவர்க்கு மட்டும் குலுக்கல் முறையில் மெகா பரிசு.

கேள்விகள்:

1. ஊர்வசியின் செல்லப் பெயர் என்ன?
2. ஊர்வசி பிறந்த ஊர்?
3. ஊர்வசி தமிழ் சேனலில் நடித்த நிகழ்ச்சியின் பெயர் என்ன?
4. ஊர்வசி தமிழில் நடித்த முதல் படம்?
5. ஊர்வசி இதற்கு முன் தொடர் எழுதியது உண்டா?

இந்தக் கேள்விக்கான பதிலோடு ஊர்வசி தொடர் பற்றிய விமர்சனத்தையும் சேர்த்து அனுப்புங்கள்.



மெகா பரிசுப் போட்டி
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆ.ராசாவின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்(?) நினைத்தாலே பிரமிக்க வைப்பதாகவும் வியப்பாகவும் இருக்கிறது. 1995-96களில் தி.மு.க.வின் இளம் ஹீரோவாக இருந்து ஜொலித்தவர் இப்போதைய சீனியர் பிரமுகரான அமைச்சர் பரிதி இளம் வழுதி. திருச்சி சுற்றுவட்டாரத்தில் அவர் எங்கு பொதுக்கூட்டம் பேசினாலும் அங்கே ஆஜராகி அவருக்கு அறிமுகமானவர் வனத்துறை ஊழியர் ராமச்சந்திரன்.

ஒரு சமயம் ராமச்சந்திரன், தமது தம்பி ராசாவை பரிதியிடம் அறிமுகப்படுத்தி, ''இவர் என் தம்பி. தி.மு.க. கொள்கைகளில் ரொம்பப் பிடிப்பு உடையவர். எங்கள் பகுதியில் நமது கழகத்தில் ஆர்வமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வாங்கித்தர வேண்டும்,'' என்று கேட்டுக்கொண்டார். அதன் பின் ராசா அவ்வப்போது சென்னைக்கு வந்து செல்வார். அவரை முரசொலி மாறனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் பரிதி.

ராசா முதலில் எம்.எல்.ஏ. தேர்தலில் போட்டியிடத்தான் விருப்பமாக இருந்தார். ஆனால் பட்டமேற்படிப்பு முடித்து வழக்கறிஞர் படிப்பையும் முடித்திருந்த அவரை, மக்களவைக்குப் போட்டியிட வைத்தார் முரசொலி மாறன். இதற்கிடையில் பரிதி தலைமையில் ராசாவுக்குத் திருமணம்.

> **ராசாவுக்காக கட்சியின் எதிர்கால வாய்ப்புகளைக் கெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் தி.மு.க.-வுக்கு இல்லை.**

1996ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் பெரம்பலூர் தொகுதியில் வெற்றி பெற்றார் ராசா. 1998ல் தோல்வி. 1999ல் வெற்றி பெற்றவர் சுகாதாரத்துறை இணை அமைச்சரானார். மாறன் உடல்நலமில்லாமல் மருத்துவமனையில் இருந்தபோது அடிக்கடி சென்று அவரைப் பார்த்து மருத்துவ ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டார் ராசா.

2007ஆம் வருடம் ராசாவுக்கு அதிர்ஷ்டக் காற்று பலமாக வீசத் தொடங்கியது. தயாநிதிமாறன் விவகாரம் வெடித்தவுடன் தி.மு.க. தலைமை, ராசா மீது நம்பிக்கை வைத்தது. தகவல்-தொலைத் தொடர்பு காபினெட் அமைச்சரானார் ராசா.

பெரம்பலூருக்கு அருகிலுள்ள வேலூர்தான் அவரது சொந்த ஊர். அப்பா ஆண்டிமுத்து இலங்கையில் தொழிலாளராக இருந்தவர். அவரது உறவினர்கள் பலர் அரசியலில் இருந்தனர். ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் நன்றாகப் பேசவும் எழுதவும் தெரிந்தவர் ராசா. கடும் உழைப்பாளி.

2008க்குப் பிறகு கருணாநிதி குடும்பத்துடன் இவரது நெருக்கம் கூடியது. ஆனால் மாறனால் அறிமுகப்படுத்தப்பட்ட ராசாவுக்கு, தயாநிதியுடன் விரிசல் ஏற்பட்டது.

சென்னையில் இருக்கும் நாட்களில் காலை முதல் இரவு வரை தலைவர் அருகிலேயே இருப்பார் ராசா. தில்லி அரசியல், தமிழக அரசியல் என்று சகல தரப்பு விவகாரங்களிலும், தமது கருத்துக்களையும், விருப்பங்களையும் சொல்லி நிறை

வேற்றிக் கொள்ளும் அளவுக்குத் தலைமையுடன் நெருக்கம் வளர்ந்தது.

அதே சமயம் தொலைத் தொடர்புத் துறை அமைச்சராகவும் தமது முத்திரையைப் பதித்தார். செல்ஃபோன் கட்டணக் குறைப்பு, பயன்பாடு அதிகரிப்பு என்று தொலைத் தொடர்புத்துறை ஓஹோவென்று வளர்ச்சி பெற்றபோதுதான் ஸ்பெக்ட்ரம் இரண்டாம் அலைக்கற்றை ஊழல் வெடித்தது. தலைவலி தொடங்கியது.

தொடக்கம் முதல் தம் மீதுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்துக்கொண்டே வந்த ராசாவுக்கு மத்திய தலைமை தணிக்கை அதிகாரியின் அறிக்கை இறுதி இடியாக இறங்கி அவரது



ராங்கா போன ராசா!

அமைச்சர் பதவியையே காவு வாங்கியிருக்கிறது.

மத்திய தலைமை தணிக்கை அதிகாரி என்பவர் அரசியல் சாசனப்படி நியமிக்கப்படும் அதிகாரியாவார். வழக்கமாக அவரது அறிக்கைகள் பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டு ஒரு நாள் கூச்சலுடன் அரசு கோப்புகளுக்குள் முடங்கிவிடும். ஆனால் ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் பேசப்படும் தொகை ஒன்றே முக்கால் லட்சம் கோடியாக இருப்பதால், விஸ்வரூபம் எடுத்துவிட்டது. தமிழ்நாட்டு மீடியா முடங்கிக் கிடக்க, தேசிய ஊடகங்களும், சேனல்களும் அடித்துத் துவைத்ததில் ராசாவின் சாயம் வெளுத்து அவரைப் பின்வாங்கி ஓட வைத்து விட்டது. என்னதான் கட்சித் தலைமைக்கு நெருக்கமாகி ஒட்டியிருந்தாலும் அவரை, தலைமையால் காப்பாற்ற முடியவில்லை. ''நான் ஏன் விலக வேண்டும்?'' என்று சென்னைக்கும் தில்லிக்கும் ரன் எடுத்துக்கொண்டே ராசா கேட்டுக்கொண்டிருந்த போது தி.மு.க.வின் மூத்த பிரமுகர்களிடையே ஒருவித கடுப்பு பரவியது. ''ராசா குற்றமற்றவராகவே இருக்கலாம். ஆனால் மாநிலத் தேர்தலைச் சந்திக்கும் இந்தச் சமயத்தில் காங்கிரஸ் எங்களுடன் இருப்பது அவசியம். நாங்கள் ரொம்ப அடம்பிடித்தால் காங்கிரஸ் விலகும் ஆபத்து இருக்கிறது. காங்கிரஸ்

கூட்டணியில் இல்லை என்றால் தார்மிக ரீதியாக பலமிழந்தவர்களாகி விடுவோம்,'' என்றார் ஒரு தென் மாவட்ட அமைச்சர்.

''எங்கள் கழகத்தில் ஆயிரக்கணக்கில் தியாகம் செய்தவர்கள் இருக்கிறார்கள். அடி, உதை, சிறை புகுதல் என்று வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் உண்டு. அவர்களையெல்லாம் பார்க்கும்போது, ராசா மிகவும் ஜூனியர். அவருக்காகக் கட்சியின் எதிர்கால வாய்ப்புகளைக் கெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் கட்சிக்கு இல்லை'' என்று கண்டிப்புடன் சொன்னார் காவிரி பாயும் மாவட்டப் பிரமுகர். இப்படிப்பட்ட எண்ணக் குவியல்கள் தலைமையை அடைந்த காரணத்தினாலோ என்னவோ, ராசாவை விலகச் சொன்னது தலைமை.



தேர்தலில் சரிபாதி இடங்களும் ஆட்சியில் பங்குமே காங்கிரஸின் குறி. அதற்குத் தி.மு.க. உடன்படாவிட்டால் தான் கச்சேரி.

இப்போது அரசியல் வட்டாரத்தில் எழுப்பப்படும் இரண்டு கேள்விகள்: ராசா விவகாரத்தின் தொடர்ச்சியாக காங்கிரஸ், கழகத் தோழமையைக் கை கழுவி விடுமா? ஆ.ராசா இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவாரா? காங்கிரஸ், தி.மு.க.வை விட்டு விலகி விடுவதாக இல்லை என்றே தில்லித் தகவல்கள் சொல்கின்றன. ''தேர்தலில் சரிபாதி இடங்களும் ஆட்சியில் பங்குமே காங்கிரஸின் குறி. அதற்கு தி.மு.க. உடன்படா விட்டால்தான் கச்சேரி!'' என்கிறார் ஒரு காங்கிரஸ் எம்.பி. காங்கிரஸ் தோழமையை இழந்துவிட்டால் தேர்தல் வெற்றி - தோல்வி ஒரு பக்கம் இருக்க, ''ராசாவை நோக்கிப் பாயும் மத்திய அரசு புலனாய்வு ஏஜென்ஸிகளின் இரும்புக் கரங்கள், கட்சியின் இமேஜைச் சிதைத்துவிடும்,'' என்ற கவலை கழகத்துக்கும் இருக்கிறது. எனவே கூடிய வரை காங்கிரஸை அனுசரித்துச் செல்ல வேண்டிய கட்டாயம் கருணாநிதிக்கு ஏற்பட்டிருக்கிறது. எடுத்தேன்... கவிழ்த்தேன் என்று செயல்படும் ஜெயலலிதாவை நம்ப காங்கிரஸ் தலைமை தயாராக இல்லை'' என்கிறார் மற்றொரு காங்கிரஸ் எம்.பி.

இதற்கிடையில் பதவியை இழந்த ராசாவைத் தியாகியாகவும் ஹீரோவாகவும் உருவாக்கும் முயற்சி தி.மு.க.வில் நடக்கிறது. பண பலம், கலைஞர் குடும்ப நெருக்கம் மற்றும் அதிகாரப் பின்னணியுடன் சில காலம் இது சாத்தியமாகக் கூடும். ஆனால் ராசா எதிர்கால அரசியலில் நிரந்தர ஹீரோவாக வேண்டுமென்றால் அவர் பரிசுத்த மானவர் என்று நிரூபிக்கப்பட வேண்டும். சி.ஏ.ஜி. அறிக்கையைப் பார்க்கிறபோது அது சாத்தியமாகத் தோன்றவில்லை.

- ப்ரியன்

கொஞ்சம் மாறுங்களேன்

சென்ற வாரம் 'பொது இடங்களில் பெண்கள் சந்திக்கும் சோதனைகள், சிக்கல்கள்' ஆகியவைப் பற்றி சில பெண்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்கள். நிலைமை மாற என்ன செய்ய வேண்டும்?



கலாசாரம்னு அலறக்கூடாது...

''முதலில் ஆண்களுக்குப் பெண்களைப் பற்றிய பிரமிப்பும், கவர்ச்சியும் போக வேண்டும்'' என்கிறார் வழக்கறிஞரும், சமூக ஆர்வலருமாகிய சுதா ராமலிங்கம். ''சிறு வயதிலிருந்தே இருபாலரும் இயல்பாக ஒருவரோடு ஒருவர் பழகி வந்தால் பாலியல் ரீதியான பார்வை தவிர்க்கப்படும் வாய்ப்பு உள்ளது. கோ - எஜுகேஷன் வைத்தால் பெண்களும், ஆண்களும் ஒருவரை ஒருவர் மையமாக வைத்துச் செயல்படும் அணுகுமுறை குறையும். கோ.எட். என்றவுடன் 'தப்பு நடக்க சான்ஸ் உள்ளதே' என்று ஒதுக்கக்கூடாது. சிறு, சிறு பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும்; காலப்போக்கில் நல்ல புரிதல் வந்துவிடும். அப்புறம் பொது இடங்களில் முறைப்பது, இடிப்பது போன்றவைகள் குறையும். ஒன்பதாம் வகுப்பிலிருந்தே பாலியல் கல்வியைப் பாடத் திட்டத்தில் வைக்க வேண்டும். 'ஐயோ... நம் கலாசாரம்' என்று அலறக்கூடாது. இப்போதிருக்கும் நிலை நீடித்தால் நீங்கள் சொல்லும் கலாசாரம் சீரழிந்து போய்விடும். ஒளிவு மறைவற்ற கருத்துப் பரிமாற்றங்கள், ஆண், பெண் உடல் தொடர்பான புரிதல்களே பொது இடங்களில் பெண்களை கௌரவமாகப் பார்க்கும் கண்ணியமான நிலையை உருவாக்கும்'' என்கிறார் சுதா ராமலிங்கம்.

''அடங்கிப் போவதால்தான் அத்தனை அக்கிரமங்களும் நடக்கின்றன. அநியாயத்தைக் கண்டு பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் புயலெனப் பொங்கி எழுந்தால், பொது இடங்களில் போக்கிரித்தனமாக நடக்கும் ஆண்களின் எண்ணிக்கை குறையும்'' என்று சொல்பவர் 'வழிகாட்டிப் பெண்கள் சங்க'த்தின் தலைவர் வசந்தா கில்பர்ட். கிராமப்புற மற்றும் கடற்கரையோரப் பெண்களிடையே விழிப்புணர்வைப் பரப்பி வருகிறது வழிகாட்டி அமைப்பு. ''பெண்கள் தங்களைப் பலவீனமான இனம் என்று கருதிக் கொண்டால் நிலைமை இன்னமும் மோசமாகப் போகும். இந்த விஷயத்தில் மீனவப் பெண்களிடம் காணும் அசாத்திய தைரியத்தைக் கண்டு ஆச்சர்யப்பட்டிருக்கிறேன். நகரத்துப் பெண்கள் நளினமும் நாசூக்கும் பார்த்து, சகித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். பெண்கள் பொங்கி எழுந்தால்,

உதவிக்கு வர நல்ல மனம் படைத்த ஆண்களும் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். பெண்களை நோக்கிய ஆண்களின் இப்படிப்பட்ட அணுகுமுறைக்குப் பத்திரிகை, சினிமா, நுகர்வோர் கலாசாரம் ஆகியவைகளும் காரணமாக அமைந்துவிடுகின்றன. பெண்களைப் போகப் பொருளாகவும் கவர்ச்சிக் கன்னிகளாகவும் ஆக்கிவிட்டன ஊடகங்களும், திரைப்படங்களும். இதன் காரணமாக எழும் வக்கிரப் பார்வையே ஆண்களை அபத்தமாக நடக்கச் செய்கிறது. பெண்களும் தங்கள் பங்குக்கு உடை



* வசந்தா கில்பர்ட்




* சுதா ராமலிங்கம்

விஷயத்தில் கண்ணியமாக இருக்க வேண்டும். பெற்றோர்களும் தங்கள் பெண்களிடம் சமூகத்தின் போக்குகளை மனம் விட்டுப் பேசுவதன் மூலம் அவர்கள் பொது இடங்களில் சந்திக்கும் பிரச்னைகளைச் சமாளிக்க உதவியாக இருக்கும். மற்றபடி துணிக்கடையில் கண்காணிப்பு கேமரா விஷயத்தில் காவல்துறை அடிக்கடி அந்தக் கேமராக்களை செக் செய்ய வேண்டும்'' என்கிறார் வசந்தா கில்பர்ட்.

வியாபார நிறுவனங்களுக்கு உரிமம் கொடுப்பது உள்ளாட்சி அமைப்புகள்தான். பெரிய மால்களில் இருக்கும் கேமராக்கள் தவறான செயலுக்குப் பயன்படுத்தப்படுகிறதா என்பதை அந்த அமைப்புகள் கண்காணிக்கிறதா? ''கண்காணிப்பு கேமராக்கள் வைத்திருக்கும் இடங்களில் 'இங்கே கேமரா பொருத்தப்பட்டிருக்கிறது' என்பதை அறிவிக்க வேண்டும். வியாபார நிறுவனங்கள் கேமராக்களே வைக்கக் கூடாதென்று சொல்ல முடியாது. காரணம் பொருட்கள் களவு போவதும் நடந்துகொண்டுதானிருக்கிறது. டெக்ஸ்டைல் நிறுவனங்கள் ட்ரையல் அறையில் கேமராக்களை வைத்து விஷமத்தனத்தில் ஈடுபட்டால் காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்கும். பெண்கள் துணிச்சலாகப் புகார் கொடுக்க வேண்டும். புகார் உறுதிப்பட்டது என்றால் நிறுவன உரிமத்தையே ரத்துச் செய்வோம். பொது இடங்களில் பெண்கள் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும். அதுதான் நம் கலாசாரத்துக்கு அழகு'' என்கிறார் மேயர் மா.சுப்பிரமணியம்.

மனமிருந்தால் மாற்றமுண்டு.

- ஸ்ரீநி



ஆமாம்! கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களுக்கு ‘கல்கி டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து உங்கள் வாய்ஸுக்கு ‘கல்கி’ இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்புகள் மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்கு சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- உங்கள் மாவட்டத்தின் பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ், ஆன்மிக, வியாபார, சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன். சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல். நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்... என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசித் தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கலக்க வருதுப்பா கல்கி

கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டம்

- ☐ நியூஸ் ஏந்தி பவன்
- ☐ பெட்டிஷன் பாக்ஸ்
- ☐ வேடந்தாங்கல்
- ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 17.12.2010

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடுறோம்!

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11* Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11* Registered as a Newspaper in Srilanka.